speaking on the last day. So, Sri Kalyanasundaram will speak tomorrow. Sri Chinnadurai and Sri Pakkirasami Pillai will each speak on one of the following two days. The Leader of the Dravida Munnetra Kazhagam, Sri Annadurai, will speak on the last day when the Minister for Finance will reply to the debate. The Committee has also decided that Ministers other than the Minister for Finance could speak on two days. For instance, the Hon. Minister for Home and the Hon. Minister for Industries will speak one on each day about which I will inform the House later on.

The Committee has also decided that the Assembly should sit for two days, that is, on the 5th and 6th instant, in the afternoon also between 3 and 5-30 p.m. Copies of these recommendations will be supplied to hon. Members later on.

To-day the hon. Member representing the Indian National Democratic Congress, Sri K. Ramachandran, will initiate the debate on the Budget and I have allowed half an hour for him. After him, Sri Sattanatha Karayalar will speak. Then, I have to decide who should speak after them. I propose to call two Members from the Congress Benches and one Member from the Opposition Benches according to the proportion of their strength in this House. I have also decided to allow fifteen minutes for each hon. Member and I think I will not reduce it to ten or five minutes, as has been done on previous occasions. That will mean that only a lesser number hon. Members can participate in the debate but in view of the fact that the House sits in the afternoon also for two days, I hope that that difficulty can be overcome. Now, I call upon Sri Ramachandran to speak.

Sri S. NAGARAJA MONIGAR : Sir, is it not the convention that the hon. the Leader of the Opposition should speak last.

Mr. SPEAKER : I have just now read out the decisions of the Business Advisory Committee. There is no rule that the hon. the Leader of the Opposition and Hon. Ministers should speak on the last day. Sri Ramachandran will now speak.

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1959-60.

* Sri K. RAMACHANDRAN : மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தின் மீது என்னுடைய வார்த்தைகளைச் சொல்லும் முன்பாக முதலில் இதற்குக் கொடுக்கக்கூடிய அவகாசம் மிகவும் குறைவு என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், இப்போது பொதுவாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தஸ்தாவேஜு களைப் பார்ப்பதுடன் இதற்கு முன்புள்ள வருஷத்திய பட்ஜெட் விவாதங்களையும் பார்த்து அதற்காக ஒரு நல்ல உபயோககரமான முறையில் விவாதத்தை நடத்த விரும்புவோமானால் அதற்கு அதிகப்படியான அவகாசம் இருக்குமேயானால் ஓரளவுக்கு அது நன்றாக இருக்கும் என்று நினைப்பதற்கு மாறாக மிகக் குறைவாக அவகாசம் உள்ள நிலைமையில் இந்த விவாதத்தைத் தொடங்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இல்லாமல் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் அதற்கு அவகாசம் இருக்குமேயானால் அதை நல்ல விதமாக விளக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இனிமேலாவது அப்படிப்பட்ட முறையில் அவகாசம் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[Sri K. Ramachandran] [3rd March 1959

அடுத்தபடியாக இந்த வருஷத்திய பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய விவரங்களைப் பார்க்கும்போது 1957–58-ல் 5 லட்சம் ரூபாய் உபரி ஏற்படும் என்று எதிர் பார்த்ததற்கு பதிலாக முடிவான கணக்குகள் படி 3·41 லட்சம் ரூபாய் உபரியாக நின்றது என்றும், 1958–59-ம் ஆண்டிற்கு 15 லட்சம் ரூபாய் உபரி ஏற்படும் என்று எதிர்பார்த்ததற்கு பதிலாக திருத்திய மதிப்பீடுகளின்படி 265 லட்சம் ரூபாய் உபரியாக நிற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், 1959–60-ம் வருஷத்திற்கு ஒரு கோடி முப்பத்தி ஒன்பது லட்சம் ரூபாய் உபரியாக வரப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது என்று கணக்குப் போட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே இது ஒரு உபரியான பட்ஜெட் என்று நினைக்கக்கூடிய தாக இருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் நாம் சற்று சமாதானம் அடைந்திருக்க வேண்டியதாக இருக்கிறது. இருந்தாலும் இப்பொழுது வந்திருக்கக் கூடிய மத்திய அரசாங்க பட்ஜெட்டைப் பார்த்தால் 83 கோடி ரூபாய் வரையில் பற்றுக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த பற்றுக்குறையை அதாவது இந்த 83 கோடி ரூபாயில் 23 கோடி ரூபாய் அதிகப் படியான வரி விதிப்பு மூலமாக சரிகட்டி விட்டு கிட்டதட்ட 60 கோடி ரூபாய் வரையில் துண்டு விழுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பார்த் தால் இப்படி பற்றுக்குறை வருவதனால் ஒன்றும் குடி முழுகிப்போவ தில்லை என்று தான் நினைக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இப் பொழுது உபரியான பட்ஜெட் வந்திருக்கிறது என்பதைக் கண்டு நாம் சந்தோஷப்பட வேண்டியதாக இல்லை. அப்படி சந்தோஷப்படகூடிய முறை யில் இந்த பட்ஜெட் உரை அமையவில்லை. அது சம்பந்தமாக பின்னால் நாம் விவாதிக்கும்போது பல கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறேன். உபரியாகக் காட்டியிருக்கக்கூடிய கணக்கை வைத்துக்கொண்டு நாம் ஒன் றும் சந்தோஷப்பட முடியாது. இருந்தாலும் வரி விதிப்பு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. வரி விதிப்பு இப்பொழுது இல்லை என்பது உண்மை தான். அது இன்றைக்கு இல்லை என்றாலும் நம்முடைய டாக்ஸ் ஸ்ட்ரக் சரைப் பார்த்தால் இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட கழுத்து அளவுக்கு நமக்கு வரி போடப்பட்டிருக்கிறது என்பது தெரிய வரும். அதாவது "டாக்ஸ் டு தி ப்ரிம்" என்று சொல்லக்கூடிய அளவில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. ஏனென் றால் பட்ஜெட் சமயத்தில் வரி விதிக்கா விட்டாலும் நாளடைவில் நடை முறையில் வரிகள் விதிக்கப்படலாம். அந்த முறையில் இந்த வருஷம் பல வரிகளை விதித்திருக்கிறார்கள். அது முறையல்ல. சமீப காலத்தில் தான் உணவு தானியங்கள் மீது வரி விதிக்கப்பட்டது, பூக்கள் மீது வரி விதிக்கப்பட்டது, பால் மீது வரி விதிக்கப்பட்டது. ஏற்கெனவேயுள்ள நில வரியின் மீது உள்ள வரியுடன் நில வருமான வரியும் விதிக்கப் பட்டது, தாமாஷா வரி அதிகமாக விதிக்கப்பட்டது, மத்திய அரசாங்கம் விதிக்கும் வரிகளுடன் இன்னும் அதிகப்படியாக சில சாமான்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ரயில் கட்டணத்தை அதிகப்படுத்தியிருக்கிறார் கள். போஸ்டல் கட்டணத்தை அதிகப்படுத்தி யிருக்கிறார்கள். ஆகவே எந்த முறையில் பார்த்தாலும் சாதாரணமாக வரியை அதிகப்படுத்தி யிருக்கக்கூடிய நிலைமை தெரியவரும்.

அப்படிப் பார்க்கும்போது இப்பொழுது ஒரே ஒரு வரி போடவேண்டியது தான் பாக்கி இருக்கிறது என்று சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. அதாவது ஒவ்வொருவரும் இந்த நாட்டில் உயிர் வாழ்வதற்கு ஒரு வரி போடவேண்டும் என்பது ஒன்றுதான் பாக்கி. அந்த வரியையும் போட்டு விட்டால் எல்லாம் மூழ்கிவிடும் என்ற நிலைமைதான் ஏற்படுகிறது. அப்படி நிலைமை இருக்கும்போது வரி போடவில்லை என்று பெருமைப் பட்டுக் கொள்ள இதில் எந்த விதமான ஒரு நல்ல அம்சமும் தென்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்காகத்தான் அவகாசம் வேண்டுமென்று நினைத்தது. அதாவது நம்முடைய "டாக்ஸ் ஸ்ட்ரக்சர்" மற்ற மாகாணங்களைப் பொறுத்தவரை எவ்வாறு இருக்கிறது என்பதை எல்லாம் சற்று அலசிப் பார்த்து விவாதிக்க சற்று அவகாசம் தேவைப்படும் என்று நினைத்தேன். ஆனால் அது சாத்தியப்படவில்லை. அதே சமயத் தில் இந்த பட்ஜெட்டில் ஓரளவாவது வரிப் பளு குறையுமா என்று நான்

3rd March 1959] [Sri K. Ramachandran]

எதிர்பார்த்து எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அது இல்லை. இன்றைக்கு "டாக்ஸ் பர்டன்" பழைய நிலைமையில்தான் இருக்கிறது. ஆகவே, இந்தப் பட்ஜெட்டிலே வரி போடவில்லை என்பதை எண்ணிப் பெருமைப் பட்டுக்கொள்ளத் தேவை யில்லை. பெருமைப் பட்டுக்கொள்ளவும் முடியாது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்பதைச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(Sri R. Subramaniam in the Chair.)

அடுத்தபடியாக, பருவ நிலைமையைப் பற்றி மந்திரி அவர்கள் பட்ஜட் உரையிலே சொல்லி இருக்கிறார்கள். பருவ நிலையைப் பொறுத்த வரை ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் மழை குறைவாகத்தான் பெய்திருக்கிறது. அந்தப் பகுதிகள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். கவர்னர் அவர்கள் உரையிலே "ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை குறைந்து விட்டது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக என்ன வழி வகைகள் குறிப்பாகச் செய்திருக்கிறார்கள் என்று கவர்னர் அவர்கள் உரையில் கூறாவிட்டாலும், இந்தப் பட்ஜட் உரையிலாவது கூறியிருக்கிறார்களா என்று பார்த்தால், அதைப் பற்றி ஒன்றும் இந்த உரையிலும் தென்படவில்லை.

நில வரியினுடைய ஒரு மதிப்பீட்டை மந்திரி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில் வரவு என்ற முறையில் 1959–60-க்குக்கூட 6 கோடி 69 லட்சம் என்ற முறையில் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த விவரம் 1958–59-ல் 6 கோடி 46 லட்சம் என்ற அடிப்படையிலேயே கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, பாதிக்கப்பட்ட இரண்டு ஜில்லாக்களின் நிலைமையை அவர்கள் கருத்தில் கொண்டதாகவே தெரியவில்லை. அந்தப் பஞ்சப் பிரதேசங்களைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தப் பிரதேசங்களின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன வழிவகைகள் செய்யப் போகிறோம் என்று சொல்லவில்லை. எதுவும் திட்டம் போட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட் உரையைப் பார்த்தால், முக்கியமாக விலைவாசிகளைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். இன்று விலை வாசிகளின் நிலைமை என்ன ? இன்று விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகிறது. கனம் அமைச்சர் அவர்கள் பட்ஜட் உரையிலே கொடுத்துள்ள புள்ளி விவரத்தின்படி 1957-ம் வருஷம் டிசம்பர் மாதத்திலே 512 ஆக இருந்தது, 1958-ம் வருஷம் டிசம்பர் மாதத்திலே 569 ஆக உயர்ந்திருக்கிறது என்பதைத்தான் நாம் காண முடிகிறது. அவர்கள் தானியத்தைப் பற்றி இந்தப் புள்ளி விவரத்தைக் கொடுத்திருந்தாலும்கூட, இன்றைய தினம் பருத்தி விதை, புண்ணாக்கு, மளிகைச் சாமான்கள் ஆகியவைகளுடைய விலையைப் பார்த்தாலும்கூட தலை தெரிக்கும்படியாக உயர்ந்து கொண்டே போகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் காரணமாக மக்கள் எவ்வளவு தொல்லைகளை அனுபவிக்க வேண்டிய நிலையில், அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைக்க ஆசைப்படுகிறேன். இதைத் தவிர்க்க தேசிய அபிவிருத்திக் குழுவானது என்ன சொல்லி இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். "உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் தானிய மொத்த வியாபாரம் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்துவதுதான் வழியென்ற முடிவுக்கு வந்திருக்கிறது" என்று பட்ஜட் உரையிலே அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இதைப் பற்றிச் சர்க்கார் எடுக்க இருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பதாகப் பட்ஜட் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ? சமீப காலத்தில் 2½ லட்சம் டன் நெல்லை தஞ்சை ஜில்லாவில் கொள்முதல் செய்யவேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். சர்க்கார் உத்தரவு போட்டார்களே தவிர, அதற்கான விலையை அவர்கள் நிர்ணயம்

செய்யவில்லை. விவசாயிகள், என்ன விலைக்கு நெல்லை அரசாங்கத்தினிடம் கொடுப்பது என்று திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. விலையைக் காலா காலத்தில் நிர்ணயிக்காததன் காரணமாக ஏழை விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த உத்தரவானது காலா காலத்தில் அறுவடை சமயத்தில் ஏற்பட்டிருக்கு மானால் அவர்களுக்கு நல்ல சௌகரியம் ஏற்பட்டிருக்கமுடியும். இதைத் தவிர பெரிய மிராசுதார்கள்கூட அரிசியை என்ன விலைக்குப் போடுவது என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தார்கள். இந்த மாதிரி விலையை நிர்ணயிக்காமல் சர்க்கார் உத்தரவு அமைத்தது பெரும் அளவுக்கு ஏழை விவசாயிகளைப் பாதித்தது. நெல் வாங்க வேண்டுமென்று, உத்தரவைப்போட்டு விட்டு, சரியான விவரங்கள் கொடுக்காத முறையில் எந்த விதத்தில் வியாபாரத்தைச் செய்யப் போகிறோம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். மேலும், தஞ்சை ஜில்லாவில் இருந்து லாரி லாரியாக நெல் வெளி ஜில்லாக்களுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு இது போன்ற சர்க்கார் உத்தரவு வருகிறது. இதனுடைய விளைவு என்ன ? நல்ல வசதியுள்ள பெரும் மிராசுதார்கள் தங்கள் நெல்லை வெளியார் களுக்கு—மலபார் போன்ற இடங்களுக்கு—அனுப்பிவிட்ட நிலைமை ஏற்பட்ட பின்னர், நாம் சிறிய மிராசுதார்களைத் தொந்தரவு செய்து அவர்களிடம் இருந்து நெல்லை வாங்க வேண்டிய அளவுக்கு நம்மைக் கொண்டு போய் விடும் என்பதுதான் இதனால் ஏற்படக்கூடிய நிலைமை. ஆகவே அரசாங்கம் கணிசமான அளவுக்கு நெல்லைக் கொள்முதல் செய்ய முடியாது. " விலையைக் கட்டுப்படுத்தப் போகின்றோம் " என்று சொல்வது நிறை வேறப் போகிறதா என்று பார்த்தால் அதுவும் நிச்சயமாக நிறைவேறப் போவதில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் அர சாங்கத்தின் உணவுக் கொள்கை நூற்றுக்கு நூறு வெற்றிபெறவில்லை யென்று சொல்ல வேண்டியிருக்கிறது. நன்றாக விளைந்த பிரதேசமான தஞ்சாவூர் ஜில்லாவிலேயே இன்றைக்கு மோசமான நிலைமை நீடிக்கிறது என்றால் விளைவு பொய்த்துப் போய் இருக்கும். ராமநாதபுரம், திருநெல் வேலி ஜில்லாக்களின் நிலைமை என்ன ஆகும் என்று சொல்வதற்கில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு ரூபாய்க்கு முக்கால்படி அரிசி கிடைத்தது போக இப்போது அதன் விலை இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு விலை நிர்ணயித்து தானியக் கொள்முதல் செய்து இந்தப் பிரச்னையை சர்க்கார் தீர்க்க எத்தனிப்பது எவ்வளவு சாத்தியமானது என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமை முற்றிப் போகவிடாமல் தீவிர நடவடிக்கை எடுத்து நமக்குத் தேவையான உபரி தானியங்களையாவது கொண்டு வந்து சேர்க்க வழிவகை செய்ய வேண்டும்.

விவசாய உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் சொன்னார்கள். இது வரையிலும் விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி நல்ல விதைகளைக் கொடுப்பது, உரம் கொடுப்பது ஆகிய இரண்டு துறையின் மூலமாகத்தான் சர்க்கார் உணவு உற்பத்தியைப் பெருக்க திட்டமிட்டு வந்துள்ளார்கள். ஆனால் ஏற்கெனவேயே ஏற்படுத்தப்பட்டுள்ள விதைப் பண்ணைகள் சில நீர்வளமும், நிலவளமும் இன்றி பயனற்றதாக இருப்பதால் அதைக்கூட மூடிவிடலாம் என நினைப்பதாகக் குறிப்பு இருக்கிறது. இருக்கக்கூடிய விதைப் பண்ணை களின் மூலமாகத் தயாரிக்கப்படுகிற விதைகளைக்கூட விவசாயிகளுக்குக் காலா காலத்தில் கொடுப்பதில்லை என்கிற புகார் இருந்து வருகிறது. உரத் தைப் பற்றியும் அப்படித்தான். இதுவரையிலும் இவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கையின் பயனாக உற்பத்தி எவ்வளவு அதிகரித் திருக்கிறது என்பதற்கும் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏக்கரா ஒன்றுக்கு 1955–56-ல் 1,214 பவுண்டு அரிசி உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்றால் 1957–58-ல்—அதாவது மூன்று வருஷ காலத்தில் அந்த உற்பத் தியின் அளவு 1,300 பவுண்டுதான் ஆகியிருக்கிறது. அதாவது கடந்த மூன்று ஆண்டில் 86 பவுண்டு ஏக்கருக்கு சராசரியாக அதிகரித்திருக்கிறது என்பது என்ன அதிகம் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. ஆகவே உண்மையாகவே விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் இப் போதுள்ள திட்டம் பூர்ணமானது அல்ல ; அதற்கு என்ன செய்யலாம்

3rd March 1959] [Sri K. Ramachandran]

என்று கவனித்துப் பார்க்கும்போது விரிவான முறையில் நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதுதான் பயனளிக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இப்போது கூட்டுறவு முறையில் விவசாயத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதன் மூலமும் உற்பத்தியை அதிகப்படுத்தலாம். நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதை காலம் தாழ்த்திவிடாமல், அத்துடன் கூட்டுறவு விவசாயப் பண்ணை முறைகளையும் கொண்டுவரவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு நாம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளின் பிரகாரம் 1958–59-ம் ஆண்டுக்குள்ளாக 2,20,000 ஏக்கரா நிலங்கள் பாசன வசதியைப் பெற இருக்கின்றன என்கிற குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதி சாதகம் அடைந்தாலும் இந்த மாதிரி சாதகம் ஏற்படுவது நல்லதுதான். வைகை அணையைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தை என்னால் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது. பெரியாறின் உபரி தண்ணீரை வைகை தேக்கத்தில் தேக்கி நாங்கள் வேறு இடத்திற்குக் கொண்டு போகப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் வைகைத் தண்ணீரை வைகைத் திட்டத்தினால் பாதிக்கப் போவதில்லை. பெரியாறு தண்ணீரை அந்தத் திட்டம் பாதிக்கப்போவதில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இந்தத் திட்டம் போடுவதற்கு முன்பாக எப்போதும் வைகை நதியில் வருஷத்திற்கு 2 மாதம் தண்ணீர் போய்க்கொண்டிருக்கும். இதனால் ராமநாதபுரம் பகுதிக்கு நன்மை ஏற்பட்டு வந்தது. இந்தத் திட்டம் வந்துவிட்டாலும்கூட முன்போலவே வருஷத்தில் 2 மாதம் வைகை நதியில்—குறிப்பாக ஆனி, ஆடி—மாதத்தில் போகும் படியாகச் செய்தால் ஆரம்ப சாகுபடிக்காவது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். இதை கவனித்துச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அத்துடன் அப்பர் பெரியார் போன்ற திட்டங்கள் மூலம் ராமநாதபுரம் ஜில்லாவிற்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்லப்படுவதால் அதையும் பார்த்துச் செய்ய வேண்டும்.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் அபிவிருத்திக்காகவும் இவ்வாண்டில் 84 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது மிகவும் குறைந்த தொகை. ராமநாதபுரம் ஜில்லா போன்ற பகுதிகளில் பல ஆண்டுக்கணக்குகளாக கண்மாய் மராமத்து செய்யப்படாமலேயே இருந்து வருகிறது. குடி மராமத்து மூலம் செப்பனிட முடியாத பல கிராமங்களுக்கு பாயக்கூடிய பல மைல்கள் நீளமுள்ள கால்வாய்கள் அதே நிலைமைதான் உள்ளன. ஆகவே அதையும் அரசாங்கத்தில் எடுத்து மராமத்து செய்ய வேண்டும். அதற்கு ஒன்றும் இப்போது வழிவகை இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக சமுதாய நலத்திட்டமும், தேசிய நலப் பரப்புத் திட்டமும் 176 வட்டாரங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது என்றும், இதனால் 9,300 கிராமங்களில் உள்ள 155 லட்சம் மக்கள் பயன் அடைந்து வருகிறார்கள் என்கிற குறிப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த சமுதாய நலத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நாம் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டும். கிராம வளர்ச்சியின் அடிப்படையிலும் பொது மக்களின் கூட்டுறவுதான் இத்திட்டத்தின் முக்கிய அம்சம். ஆனால் இன்றைக்கு நாம் எந்த அளவுக்குத் தொகை செலவு செய்து வருகிறோமோ அந்த அளவுக்குப் பயன் ஏற்படவில்லை. இதற்காக அதிகமான சிப்பந்திகளை நியமித்து செலவு செய்து வருகிறோம். இனி மேலாவது அனாவசியமாக அதிகச் செலவு ஆவதைக் குறைத்து ஒவ்வொரு வட்டாரத்திலும் உத்தியோகப் பற்றற்றவர்களைக் கொண்ட குழுவை அமைத்து அபிவிருத்தி வேலைகளை பரிசீலிக்கச் செய்யலாம். அதோடு இதனால் என்ன அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது என்பதை அடிக்கடி பரிசீலனை செய்து வருவதும் மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு துறையிலும் ஒரு சிப்பந்தியைப்போட்டு அதிகமான தொகையை நாம்

[Sri K. Ramachandran] [3rd March 1959

செலவு செய்து வரும்போது அதனால் ஏற்படக்கூடிய பயன் மிகவும் குறைவு என்பதைச் சொல்லும்போது மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக 368 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பணத்தை ரெவின்யூ டிபார்ட்மெண்டின் கையில் கொடுத்தால் இதைவிட அதிகமான வேலை நடக்க முடியும் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. கூட்டங்கள் நடத்துவதிலும், வெறும் ஷோக்களிலும் பணம் விரயமாவது வருந்த வேண்டியதுதான். இதையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து இந்த அபிவிருத்தி வேலைகளினால் நல்ல பயன் உண்டாகுமாறு செய்ய வேண்டும். அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் 34 ப்ளாக்குகளில் இதை விஸ்தரிக்க ஏற்பாடாகியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை ஆரம்ப முதலே புரிந்து கொள்ள முடியாமல் இருந்து வருகிறது. பொதுவாக மிகவும் பிற்பட்ட பகுதிகளுக்காவது இதை விஸ்தரிக்க வேண்டும். மிகவும் செழிப்பான பகுதிகளில் முதலில் விஸ்தரித்து விட்டு பின்னால் பிற்பட்ட பகுதிகளுக்கு விஸ்தரிப்பதால் பயனில்லை. லோகல் டெவலெப்மெண்டு ஸ்கீமுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 35 லட்சம் ரூபாய்கூட மிகக் குறைவு. சமுதாய நலத்திட்டத்தில் 155 லட்சம் மக்கள் போக பாக்கி 100 லட்சம் கிராம மக்களுக்கும் பல மேஜர் பஞ்சாயத்துகளுக்கும் 35 லட்சம் ரூபாய் மிகவும் குறைவு. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு முறையில் கடன் வசதி பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய கடன் வசதி விவசாயிகளுக்குப் பயன்படவில்லை. 50 கோடி வரையில் கடன் தேவை. ஆனால் 16 கோடிதான் கொடுக்கப்படுகிறது. அதுவும் காலா காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. அதனால் தானியங்களை குறைந்த விலையில் விற்று, கடன்படக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு தக்க, சமயத்தில் தக்க முறையில் கடன் கொடுக்க வாய்ப்பளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பரவலாகத் தொழில் வளர்ச்சியும் இல்லை. இதிலும் கூட ஒரு பகுதி நல்ல முறையில் வளர்ச்சி அடைகிறது. இன்னும் பல பகுதிகளில் வளர்ச்சி அடையாமலேயே இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி எல்லா இடங்களுக்கும் பரவலாக தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-30 a.m. அடுத்தபடியாக எங்கெங்கே கனரகத் தொழில்கள் ஏற்படுத்துவதற்கான சாதனங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி ஆராய்வதற்கு என்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழு பரிசீலனை செய்து எந்தெந்த இடங்களில் கனரகத் தொழில்களை ஏற்படுத்தலாம் என்று கவனிக்கும் காலத்தில் தொழில் வளர்ச்சி இல்லாத இடத்தில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை உண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக முதுகளத்தூர் பகுதியில் லைம், ஜிப்சம் போன்றவைகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளை உபயோகித்து தொழிலை ஆரம்பித்தால் எல்லோருக்கும் வேலை கிடைப்பதறகான வாய்ப்பு ஏற்படுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

பனைமரத்திலிருந்து காகிதம் உற்பத்தி செய்யமுடியும். இத்தொழிலை அரசாங்கம் நடத்தலாம். ஆனால் இதை கவனிக்கவில்லை என்று தோன்றுகிறது. 6, 7 லட்சம் ரூபாய் செலவு செய்து இதற்கான ஒரு மில்லை ஆரம்பித்து, தொழிலை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். அதை அரசாங்கம் எடுத்து நடத்தினால் அங்குள்ளவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்ல விரும்புகிறேன். இதனால் நாட்டில் விவசாயத்தின்மேல் உள்ள பளு குறைந்து நாடு முன்னேற்றம் அடைய முடியும். இன்றைக்கு கோயம்பத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் 50 சத விகிதம் பேர் தொழில் துறையிலும், 50 சத விகிதம் பேர்

விவசாய்த் துறையிலும் இருக்கிருர்கள். இதே மாதிரியாக மற்ற ஜில்லாக் களிலும் **Strain in Agriculture** குறைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் வசதி எற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் விவசாயத்தின் மேலுள்ள பளு குறைந்து சுபிக்ஷமான நிலை ஏற்படும்.

ரோட்டுகள் பொறுத்தமட்டில் அரசாங்கம் இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்ட பணம் மிகக்குறைவு. (கனம் சபாநாயகர் மணி அடித்தார்) ஆகவே அதற்கும் இன்னும் அதிகமான பணம் ஒதுக்கி புதிய ரோடுகள் போடு வதற்கான வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வியை எடுத்துக்கொண்டால், 10 ஆவது வகுப்பு வரை கட்டாயமாக இலவசமாக படிக்கவேண்டுமென்று இருக்கவேண்டும். அதற்கான வச தியை அரசாங்கம் செய்ய வேண்டும். இப்போது இருக்கக்கூடிய லஞ்ச ஊழல்களை எடுத்துக்கொண்டால் அவைகள் மிக அதிகமாக இருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். இன்றையதினம் அரசாங்க அலுவல்களில் கால தாமதம் ஏற்படுகிறது. இதை அரசாங்கம் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக கிழக்கு ராமனுதபுரம் நிலைமையைப்பற்றி ஆராய்வதற்கு ஸ்ரீ அருள்தாஸ் தலைமையின் கீழ் ஒரு கமிட்டி ஏற்படுத்தி பல சிபார்சுகளைச் செய்திருக்கின்றன. ஆனால் ஒரு சிபார்சைக்கூட இன்னும் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. ஆகவே இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் வேலை யில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். உற்பத்தியை பெருக்கு வதற்கோ அல்லது தொழில் வளத்தை பெருக்குவதற்கோ இந்தப் பட் ஜெட்டில் ஒன்றும் குறிப்பிடவில்லை. பொதுவாக தானியங்களின் விலைவாசி கள் குறைய வழிவகைகள் செய்யவில்லை. வேலை வாய்ப்புகள் ஏற்படுத்த திட்டம் இல்லை. பிற்பட்ட கிழக்கு இராமனுதபுரம் மக்களுக்கும் ஒரு **Blank cheque** தான். ஆகவே இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரிக்க முடியவில்லை என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் அவைத் தலைவர் அவர்களே, நேற்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து நம் மாகாணத்திலுள்ள நிதி நிலைமையை விளக்கி மிக நல்ல முறையில் ஒரு உரை நிகழ்த்தியுள்ளார். அவர்கள் உரை மிக நல்ல முறையில் அமைந்திருக்கிறதென்பதில் யாதொரு சந்தேக மும் இல்லை. இந்த நாட்டில் இருக்கக்கூடிய பண நெருக்கடி முக்கிய மான பொருள்களின் பற்றுக்குறை இதை எதையும் காண்பிக்காத முறையில் அது அமைந்துள்ளது.

இந்த பட்ஜெட் ஒரு உபரி பட்ஜெட் என்று கனம் நிதி அமைச்சர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மதிப்பீட்டைப்பற்றிக் குறிப்பிடும் போது ஒரு கோடி 85 லட்சம் ரூபாய் உபரியாவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட் டால் இந்த உபரி கரைந்துவிடும். ஆனால் அதே காலத்திலே சம்பள கமிஷன் எதாவது சிபார்சு செய்யும். குறைந்தது ஐந்து ரூபாய் கொடுத் தால்கூட 1½ கோடி ரூபாய் பற்றுக்குறை வந்துவிடும். ஆனால் சம்பள கமிஷன் இன்னும் எதும் சிபார்சு செய்யாது என்பது சர்க்காருக்குத் தெரியுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் எதாவது சிபார்சு செய்ய நேர்ந்தால் இந்த உபரி பட்ஜெட் கம்மி பட்ஜெட்டாக மாறி விடும்.

அடுத்தபடியாக **ways and means**-ஐ பற்றி அதாவது வழி வகை பற்றி குறிப்பிடுகையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக சமர்ப் பிக்கப்பட்ட நிதி அறிக்கையும், இப்பொழுது கொடுத்திருக்கும் பட்ஜெட்டை யும் பார்க்கும்போது **"As we did not raise open market loans our ways and means provision was comparatively difficult"**

என்று பட்ஜெட் மெமோரண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஓபன் மார்க்கட்டில் கடன் எழுப்பாத காரணத்திஞல் 1956–57-ல் நிதி நிலைமை மோசமாக இருக்கிறது. ஆனுல் இந்த பட்ஜெட் நிலைமை சீர்படு வதற்காக 6 கோடி ரூபாய் ஓபன் மார்க்கட்டில் கடன் வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இந்த நிதி நிலைமை மிகவும் திருப்திகர மான நிலைமையில் இருக்கிறதென்று சொல்லமுடியாது. நிதி அமைச்சர் பிரசங்கத்தில் தொனிப்பது போல் அந்த அளவு திருப்திகரமாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஐந்தாண்டு திட்டத்தை எடுத்துகொண் டால் இந்த நான்கு வருஷ காலத்தில் 128 கோடி ரூபாய் செலவு செய் திருக்கிரேும். ஆதலால் இன்னும் 24 கோடி ரூபாய்தான் திட்டத்தின் கடைசி வருஷத்தில் செலவு செய்யவேண்டுமென்றும் அதனுல் திட்டத்தை மிகவும் திருப்திகரமாக நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லும் முறை யில் இந்த உரை இருக்கிறது. ஆனுல் விலைவாசிகள் உயர்ந்துக்கொண்டே போவதால் Physical Target-ல் 25 சதம் விகிதம் குறைவு இருக்கும். இந்த அளவிற்கு திட்டமிட்ட அளவிலும் குறைந்திருக்கும். இந்த 6 கோடி ரூபாய் ஓபன் மார்க்கட்டில் கடன் வாங்கிஞல் அந்த ரூபாய்க்கு வட்டி வேறு கொடுக்கவேண்டியதாயிருக்கும். நமக்குப் பணம் வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டதற்கு மத்திய சர்க்கார் அவர் கள் பணம் கொடுப்பதற்குப்பதிலாக, நீங்களே கடன் எழுப்பிக்கொள்ளுங் கள் என்று சொல்லிவிட்டார்கள் என்று தோன்றுகிறது. அதே சமயத் தில் கனம் அமைச்சர் அவர்கள் தங்களது உரையில் 42-வது பாராவில் "இப்பொழுது கிடைத்திருக்கும் புள்ளி விவரங்களைக்கொண்டு பார்க்கும் போது வரவு 69, 49 லட்சமாகவும் செலவு ரூ. 66,84 லட்சமாகவும் இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. ரூபாய் 15 லட்சம் உபரி ஏற்படும் என்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக ரூ. 2,65 லட்சம் உபரியாக நிற்கும் என்று எதிர்பார்க்கலாம். விற்பனை வரியில் எதிர்பார்த்ததற்கு மேல் ரூ. 2,95 லட்சம் அதிகமாக வசூலாகலாம். அவ்வாறே மோட்டார் வாகன வரிவகையில் ரூ. 28 லட்சம் அதிகமாக வரலாம். ஆனுல் விரிவாக்கப்பட்ட விவசாய வருமான வரி மூலம் நாம் எதிர்பார்த்ததற்குக் குறைவாகவே வசூலாகும் என மதிப்பிடப்படுகிறது." ஆனுல் மத்திய அரசாங்கம் வரிகளில் சிலவற்றை ராஜ்யங்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதில் "நமக்குக் கிடைக்காத கணிசமான உதவி மற்ற ராஜ்யங்களுக்குக் கிடைத் திருக்கிறது" என்று நிதி அமைச்சரே குறிப்பிட்டுள்ளார்கள் இதி லிருந்து என்ன தெரிகிறது? மற்ற ராஜ்யங்களுக்கு அதிகமான பணம் மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறது. நமக்கு கொடுக்கவில்லை. ஆகவே நாம் நம் மாகாணத்தில் உள்ள ரிசோர்ஸசை வைத்துக்கொண்டே நம் பொருளாதாரத்தை சீர்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படியானுல் நமது சர்க்காரின் சார்பாக யாரும் மத்திய சர்க்காரிடம் சொல்லுவதற்கு இல்லையா? அப்படி நாம் சொல்லியிருந்தும் மத்திய சர்க்கார் அதை உதாசீனம் செய்துவிட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மத்திய சர்க்கார் உதாசீனம் செய்யவில்லை. நிதிக் கமிஷன் பொதுவாக இந்த விஷயத்தை ஆராய்ந்தது. நிதிக்கமிஷன் தெரிவிக்கின்ற தீர்ப்பு நமக்குக் திருப்தி கரமாக இல்லாவிட்டாலும் பொதுவாக நாம் அதன் சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளுகிற நிலைமையில் இருக்கிரேும்.

10-40 a.m. * SRI K. SATTANATHA KARAYALAR : சந்தோஷம். நிதிக் கமிஷன் சிபாரிசுகள் நமக்குச் சாதகமான முறையில் இல்லை என்பதை கனம் மந்திரி ஒப்புக்கொண்டது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

உணவு தானியங்களின் விலைவாசி உயர்வைப் பற்றியும் இதர பொருள் களின் விலைவாசி உயர்வைப் பற்றியும் கனம் நிதி அமைச்சர் குறிப்பிட்டி ருக்கிருர். விவசாய உற்பத்தியைப் பொறுத்த வரையில், அது இந்த ஆண்டும் சிறிதளவு பெருகியிருக்கிறது என்றுதான் அவர் சொல்லியிருக் கிருர். பெரிய அளவிற்கு அது பெருகியிருக்கிறது என்று சொல்வதற் கில்லை. தானிய மொத்த விலைக் குறி எண் வருடத்திற்கு வருடம்

3rd March 1959] [Sri K. Sattanatha Karayalar]

உயர்ந்துகொண்டே போகிறது என்பதை கனம் மந்திரி ஒத்துக்கொண்டிருக்கிறார். 1956-ம் ஆண்டில், அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் தானிய மொத்த விலைக் குறி எண் 377-ஆக இருந்தது. இது 1957 டிசம்பரில் 512-ஆக உயர்ந்தது. 1958 டிசம்பரில் மீண்டும் 569-ஆக உயர்ந்தது. ஆக, இது இந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 192 அளவு உயர்ந்திருக்கிறது.

விலைவாசி உயர்விற்கு அவர் குறிப்பிட்டுள்ள காரணம் உண்மையிலேயே வேதனையளிப்பதாக இருக்கிறது. "வாழ்க்கைச் செலவு உயரும்பொழுது தொழிலாளர்கள் போன்றவர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டியதாகிறது. ஊதியம் உயர்ந்த காரணத்தாலேயே உணவுப் பொருள்கள் போன்ற அன்றாடத் தேவைப் பொருள்களின் விலையும் உயருகின்றது" என்று அவர் கூறியிருக்கிறார். தொழிலாளர்களுக்கும் சர்க்கார் ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு அளித்ததால் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்று சொல்வது பொருத்தமற்ற வாதமாகும். இரண்டுமூன்று தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் மத்திய நிதி அமைச்சர், சமர்ப்பித்த இக்னமிக் ஸர்வேயில் விலைவாசி உயர்விற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். சம்பள உயர்வாலும் ஊதிய உயர்வாலும் விலைவாசி உயர்ந்ததாக அவர் சொல்லவில்லை.

"The Economic Report says the moderate expansion in money supply against the background of agricultural shortage exerted an upward pressure on prices for the major part of the year under review."

இவ்வாறு மத்திய நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். கரென்ஸி நோட் ஸர்குலேஷன் அளவு அதிகரித்ததால் நாட்டில் விலைவாசி உயர்ந்திருப்பதாக அவர் கூறியிருக்கிறார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், கடந்த காலத்தில் 1,600 கோடி ரூபாய்க்கு டெபிஸிட் பைனான்சிங் செய்திருக்கிறோம். இந்த ஆண்டு மத்திய சர்க்கார், தங்கள் நிதி நிலை அறிக்கையில், மேலும் 200 கோடி ரூபாய்க்கோ அதற்கும் மேலோ டெபிஸிட் பைனான்சிங் கையாள வேண்டியிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். விலைவாசி உயர்விற்கு வர்த்தக சூதாடிகளே காரணஸ்தர்கள். விவசாயப் பொருள்களை தாங்களே விற்பனை செய்வதாக அரசாங்கத்தார் சமீபத்தில் கூறிய பிறகு அவைகள் அகில இந்திய ரீதியில் "கார்னர்" செய்யப்பட்டிருக்கின்றன—ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன—என்று ரிஸெர்வ் பாங்க் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் அவசரமாக (ஹேஸ்டியாக) இந்தத் திட்டத்தில் இறங்கிவிட்டார்கள் என்றும் குறை கூறுகிறது. விலைவாசி உயர்வுக்கு காரணம்' வர்த்தக சூதாடிகளின் காரியங்களும் நாட்டில் பணப் புழக்கப் பெருக்கமும்தான் என்று பாராளுமன்றத்தின் விவாதத்தாலும் இதர நிலையிலிருந்தும் தெரியவருகிறது. பணப் புழக்கம் வர்த்தக சூதாடிகளை மேலும் பணக்காரர்களாக்குகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த அந்த உட்கருத்துக்களையும், அந்த அந்த கடைசி விளைவுகளையும் புரிந்துகொண்டு கனம் அங்கத்தினர்கள் பேச வேண்டும். இன்ப்லேஷன் எதனால் வருகிறது ? அது டெபிஸிட் பைனான்சிங்கால் வருகிறது. இன்ப்லேஷன் எங்கே இருக்கிறது ? அது எல்லோரிடமும் இருக்கிறது. அது தனிப்பட்டவர்களிடம் இல்லை. ஒரு திட்டத்தில் உழைப்பவர்கள் அதிகச் சம்பளம் கேட்டால், நோட் அடித்துத்தான் அவர்களுக்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த அதிகப்பணம் ஊதிய ரூபமாகவும் சம்பள ரூபமாகவும் அவர்களிடம் போய்ச் சேருகிறது. இன்ப்லேஷன் என்பது யாரோ தனிப்பட்டவர்களிடம் இருப்பதாகக் கருத வேண்டாம். நோட்டுகளை அச்சடித்து அவைகளை யாரோ கட்டி வைத்துக்கொள்வதில்லை. இன்ப்லேஷன், சம்பளத்திலும் கூலியிலும் பிரதிபலிக்கின்றது.

*SRI K. SATTANATHA KARAYALAR : நான் அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஊதிய உயர்வும் சம்பள உயர்வும் அளிக்கப்பட்ட பிறகு விலைவாசிகள் உயர்ந்தனவா அல்லது விலைவாசிகள் உயர்ந்த

[Sri K. Sattanatha Karayalar] [3rd March 1959

பிறகு சம்பள உயர்வு அளிக்கப்பட்டனவா ? விலைவாசி உயர்விற்குத் தக்கவாறு (ப்ரொபோர்ஷனேட்டாக) சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை புள்ளி விவரங்களை ஆராய்வதின் மூலம் கண்டு கொள்ளலாம். சம்பளம் அதிகமாகக் கொடுத்ததால் விலைவாசிகள் உயர்ந்து விட்டது என்று சொல்வது ஒவ்வாத வாதமாகும்.

அடுத்தபடியாக, நாம் சோஷலிஸ சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதை நடைமுறையில் வெற்றியுறச் செய்வதற்கு என்ன செய்கிறோம் ? விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் ? சோஷலிஸ சமுதாயத்தில் விலைவாசிகள் குறைய வேண்டும். அசாதாரணமான காலமாகிய யுத்த காலத்தில் அவை உயரலாம். ஆனால் அவை சோஷலிஸ சமுதாயத்தில் உயரக் கூடாது. "சோஷலிஸத்தை எட்டிப் பிடிக்கிறோம்" என்று சொல்லிவிட்டு, முந்தைய ஆண்டுகளில் போலவே இந்த ஆண்டிலும் விலைவாசிகளை உயரவிடுவது சரியல்ல.

பாம்பிக்குளம் தண்ணீரைப் பொறுத்தவரையில், கேரள சர்க்காருடன் சுமுகமான ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதை மாத்திரம் கனம். நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். கேரள அரசாங்கத்தார் அத் தண்ணீரை எந்த நிலையில் நமக்குக் கொடுக்க முன்வந்தார்கள் ? அவர்கள் எத்தகைய எதிர்ப்புகளுக்கிடையே இந்த சுமுகமான ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்புகூட கேரள சட்ட சபையில், "சென்னை ராஜ்யத்திற்கு பாம்பிக்குளம் தண்ணீரை ஏன் கொடுத்தீர்கள்" என்று அந்த அரசாங்கத்தாரை அங்குள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படி இருக்க, இந்த பட்ஜெட் உரையில் அந்த அரசாங்கத்தாருக்கு இவ்வுடன்பாட்டிற்காக நன்றிகூட தெரிவிக்கவில்லை. அதற்கு ஓரளவு அரசியல் காரணம் இருக்கக் கூடும். அரசியல் அடிப்படையில் அவ்வாறு நன்றி தெரிவிக்காமலிருந்தால் அதில் தவறில்லை.

அடுத்தபடியாக, பம்பையாறு கிரியாறு திட்டங்களுக்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. கேரள அரசாங்கத்தார் இந்த விஷயத்தில் "மாஸ்டர் ப்ளான்" தயாரித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் நெல் உற்பத்தியைப் பெருக்கி தங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்பதை அவர்கள் லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். அது சரியானது என்று நான் கூற மாட்டேன். கேரளத்தில் ஒரு அங்குல நிலம் கூட வீணாக இருக்காது. எல்லா நிலங்களிலும் ஏதாவது பயிரிடப்பட்டிருக்கும். அங்கே ரப்பர், மிளகு போன்ற கமெர்ஷியல் க்ராப்ஸ் நன்றாக விளையும். நெல் நன்றாக விளையாது. ஆனால் நம் ராஜ்யத்தில் நெல் நன்றாக விளையும். அங்கு நன்றாக விளையும் பொருள்கள் நம் ராஜ்யத்தில் நன்றாக விளையாது. எனவே நாம் நெல் உற்பத்தியை அதிகரித்து அவர்களுக்கு நாம் நெல் கொடுக்கலாம். அங்கே அதிகமாக விளையும் பொருள்களை அவர்கள் நமக்குக் கொடுக்கலாம். இவ்வாறு இரு ராஜ்யங்களும் பரஸ்பரம் உதவிக் கொள்ள வேண்டும். அந்த முறையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் இரு ராஜ்யங்களும் பகைமை உணர்ச்சியுடன் இருக்கக்கூடாது. இரு ராஜ்யங்களும் பகைமை உணர்ச்சியுடன் மற்றதன் உதவியின்றி இயங்க முற்படக்கூடாது. தஞ்சாவூரிலிருந்து நெல்லை ஏராளமாக கேரள வியாபாரிகள் கொண்டு போகிறார்கள்' என்று நாம் கூறுவதும், தங்கள் தண்ணீரை நாம் கொண்டுவந்து விட்டதாக கேரளத்திலுள்ளவர்கள் கூறுவதும் சரியல்ல. இரு ராஜ்யங்களுக்கிடையிலும் சுமுகமான உறவு நிலவச் செய்ய வேண்டுமென்றும் அதற்கான சூழ்நிலையை உண்டு பண்ண வேண்டும் என்றும் ஆளும் கட்சியையும் அரசாங்கத்தாரையும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுகொள்கிறேன்.

10-50 a.m. தொழில் துறையை பொறுத்த மட்டில் சமீபத்தில் நாம் வளர்ச்சி அடைந்திருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்துறையைப் பொறுத்த மட்டில் 1957 வரையில் உள்ள புள்ளிவிவரம் மட்டுந்தான் இருக்கிறது. மில்களில் உற்பத்தி நல்ல முறையில் பெருகி இருக்கிறது என்ற தொனிப்பு இதில் இருக்கின்றது. அங்கு வேலை செய்யக் கூடிய ஆட்களைப் பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தொழில் துறையில் இன்று நம் நாட்டில்

3rd March 1959] [Sri K. Sattanatha Karayalar]

மிக முக்கியமான தொழிலாகிய துணி நூற்கக் கூடிய மில்களைப் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தொழிலில் எந்தளவு நெருக்கடி இருக்கிறது. இன்று ரிஸர்வில் உள்ள பணத்தில் பெரும் பகுதியை எந்தளவு அவர்கள் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்பது போன்ற விஷயங்கள் சமீபகாலத்தில் மில் நிர்வாகஸ்தர்கள் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவரும். 1957ல் உள்ள நிலைமை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1958ல் அவர்களது லாபம் என்ன, எத்தனை மில்களில் எத்தனை கதிர்கள் வேலைகள் செய்யாமல் இருந்தன, எவ்வளவு நபர்கள் வேலை செய்யாமல் நாட்கள் இழக்கப்பட்டிருக்கிறது என்பதை கணக்கிட்டுப் பார்த்தால் இன்று அந்தத் துறையில் எந்தளவு நெருக்கடி இருக்கிறது, துணித் தேக்கம் எவ்வளவு இருக்கிறது என்பது புலனாகும். அவைகள் இதில் இல்லை. அடுத்தபடியாக, இந்த உறையில் மின்சாரத்துறையில் நாம் அதிகப்படியான மின்சாரம் உற்பத்தி செய்திருக்கிறோம் என்ற திருப்திகரமான தொனிப்பு இதில் இருக்கிறது. பெரியார் திட்டத்தில் இருந்து கிடைக்கும் மின்சார சப்ளையே போதுமானதாகும். நமக்கு வருகிற ஆண்டில் நெருக்கடி இருக்காது என்ற கருத்து தொனிக்கிறது. திருச்செந்தூரில் உள்ள தாரங்கதரா கெமிக்கல் வொர்க்ஸ்க்கு மாத்திரம் எலக்ட்ராலிஸிஸ் ப்ரோஸஸ்ஸை உபயோகித்தால் பெரியார் திட்டத்திலிருந்து உற்பத்தியாகும் கரெண்டில் மூன்றில் ஒரு பாகம் வேண்டியிருக்கும். ஆகவே, அப்படி அதற்கு ஒரு பெரிய பங்கு கரெண்ட் அவசியமாக இருக்கிறபோது நமக்குள்ள மின்சாரம் போதும் என்று திருப்தி அளிக்கும் முறையில் சொல்வது அவ்வளவு சரியல்ல. ஏனென்னில் நமக்கு இனி மேலும் அதிகம் கரெண்ட் தேவைப்படும் என்பது தெளிவு. கோவாப்ரேடிவ் செக்டரில் தொழிலை ஊக்குவிக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நெல்லைபேட்டையில் உள்ள மில்லில் 16,000 கதிர்கள் கொண்ட ஒரு கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு 8,000 கதிர்கள் ஓடுவதற்கு கரெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு 8,000 கதிர்கள் ஓடுவதற்கு கரெண்ட் தேவைப்படுகிறது. கழிந்த மூன்று நான்கு மாதங்களாக நாள் ஒன்றுக்கு குறைந்தது ஆயிரம் ரூபாய் நஷ்டம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு வேண்டிய கரெண்ட் கிடைக்காததுதான். அவர்கள் கூடுதல் கரெண்ட்டிற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் இன்று நமது நாட்டிலுள்ள தொழில்களின் நிலை இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்த மட்டில் இங்கு கூறப்பட்ட, எம்ப்ளாய்மெண்ட் எக்ச்சேஞ்ச் குறிப்புகளைப் பார்த்தால் எந்தளவு அதிலும் நெருக்கடி இருக்கிறது என்பது தெரிய வரும். அடுத்தபடியாக, கைத்தறித் துணித் தேக்கம் இல்லை என்ற நிலை அல்ல இப்பொழுது இருப்பது. இந்த நாட்டிலுள்ள எல்லா சொஸைட்டிகளும் அம்மாபேட்டை சொஸைட்டி போன்று இருக்க முடியாது. குறைந்த கவுண்ட் உற்பத்தி செய்யக்கூடிய சொஸைட்டிகள் இந்த நாட்டில் ஏராளம் இருக்கின்றன. தென்காசி, சங்கரன்கோவில், பேட்டை போன்ற வட்டாரங்களை எடுத்துக் கொண்டால், அங்குள்ள சிறிய சொஸைட்டிகள் 20,000 முதல் 30,000 வரை 20-ம் நம்பர் நூல் போடும் சொஸைட்டிகளில் கணிசமான அளவு தேக்கம் ஏற்பட்டிருப்பதால் அவர்களுக்கு பாவு கிடைக்காமல் வேலை முடங்கியிருக்கிறது. நாட்டில் இன்று கைத்தறித்துணி செல்வு குறைவாகயிருக்கிறது என்பது இதிலிருந்தே தெரிய வரும். அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், அரசாங்க அச்சகத்தில் ஓவர்டைம் வேலை கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு மணி நேரம் ஓவர் டைம் வேலை செய்தால் எட்டு மணி நேரத்திற்கு அவர்களுக்கு எவ்வளவு ஊதியம் கிடைக்குமோ அந்த அளவு ஊதியம் அவர்களுக்கு இந்த ஓவர்டைம் வேலை செய்தால் கிடைக்கும். ஆக, 10, 12 மணி நேரம் வேலை செய்தால் சராசரி மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் கிடைக்கும், ஒருவருக்கு. ஆக, இன்று ஓவர்டைம் காம்பன்சேஷன் கிடைக்காத முறையில், அவர்களுக்கு இதுவரை கிடைத்து வந்த ஊதியம் குறைவாகப்போய் இன்று அதிருப்தி தரும் முறையில்தான்

[Sri K. Sattanatha Karayalar] [3rd March 1959

அந்தத் தொழிலாளர்களின் நிலே இருக்கிறது. இன்று அவர்களுக்கு மொத்தச் சம்பளம் 50 அல்லது 60 ரூபாய்தான் கிடைக்கிறது. முன்பு 100 ரூபாய் வரை கிடைத்து வந்தது. இன்று அதற்கு பாதிக்கு மேல் சிறிதுதான் கூடுதல் கிடைக்கிறது. ஆகவே, இன்று அவர்களது ஊதியம் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக, சாலேகள் பராமரிப்பு விஷயத்தில் அதிகப்பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 59-60க்கு 254 லட்சம் ரூபாய் சாலேகள் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் புதுச்சாலேகள் அமைப்பதற்காக ஜில்லா போர்டுகளுக்கு மான்யமாக 53 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜில்லா போர்டுகளிடமிருந்து மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸை சர்க்காரே நேரடியாக எடுத்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாஷனல் ஹைவேஸ்-ல் 1,057 மைல் ஸ்டேட் ஹைவேஸ்-ல் 1,103 மைல், மேஜர் டிஸ்ட்ரிக்ட் போர்ட்ஸுகள் கீழ் 6,609 மைல், ஆக மொத்தம் 8,769 மைல்கள் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. மேஜர் டிஸ்ட்ரிக்ட் போர்டு 2,000 மைலும், other village roads-ன் கீழ் 9,000 மைலும் இருந்தது.

THE HON. SRI C. SUBRAMANIAM: Only major District Board roads are taken into consideration.

*SRI K. SATTANATHA KARAYALAR: அது மாத்திரம் சுமார் 2,000 சிலவானம் மைல் ரோடுகள் அதிகமாக எடுக்கப்பட்டுள்ளன. அப்படி யிருந்தாலும்கூட நாம் கழிந்த ஆண்டு ஒதுக்கிய தொகையைப் போல் இந்த ஆண்டு ரோடுகளே பராமரிக்கப் போதுமான பணம் ஒதுக்கப்படவில்லே என்பது தெரிய வரும். அடுத்தபடியாக, பப்ளிக் ஹெல்த் இலாகாவை எடுத்துக்கொண்டால் இன்று நாம் நம் நாட்டில் இதற்கென செலவழித்து வரும் தொகை மிகவும் குறைவானதாகும். மத்திய அரசாங்கம் அமைத்த "போர்கமிட்டி" அதன் ரிப்போர்ட்டில் குறைந்தது பெர் காப்பிட்டா, அதாவது நபர் ஒன்றுக்கு ரூ. 1-14 அணுவாவது செலவழிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனல் நாம் செலவழிப்பது நபர் ஒன்றுக்கு 1-4-8 பைசா வரும். தற்சமயமுள்ள புள்ளிவிவரப்படி ஒரு வேளேகூட ஒரு இரண்டணு இருக்கலாம். ஆனல் குறைந்த பட்சம் எவ்வளவு செலவழிக்கவேண்டுமென்று போர்கமிட்டி சிபார்சு செய்திருக்கிறார்களோ அந்தளவு செலவு செய்யப்படவில்லே, நம் மாகாணத்தில் அந்தளவு நாம் இப்பொழுது செலவு செய்கிறோம் என்று யாரும் சொல்ல முடியாது. கடைசியாக, உரம் விநியோகத்தைப் பொறுத்த மட்டில், இங்கு சில புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 1·37 லட்சம் டன் அமோனியம் சல்பேட் உரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு 2·15 லட்சம் டன் உரம் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1957-58-ல் 2·59 லட்சம் டன் உரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், 1958-59ல் 3·6 லட்சம் டன் உரமும், 1959-60-ல் 3·74 லட்சம் டன் உரமும் வழங்கத் திட்டமிட்டிருப்பதாக இங்கு கூறப்பட்டுள்ளது. ஆனல் "A critical survey of food production in the State"-ல் உரம் விநியோகத்தைப் பற்றி குறிப்பாக அம்மோனியம் சல்ப்பேட்டைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1·37 லட்சம் டன் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. கழிந்த ஆண்டு, 1957-58-ல் 2,59,000 டன் உரம் வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலே, "புட் பொஸிஷனே"ப் பற்றி சொல்லும்போது,

"The Government of India have so far allotted 93,340 tons for 1957-58 as against our firm demand of 1,37,000 tons for the year. To meet the deficiency in ammonium sulphate, Government of India have allotted 10,000 tons of Urea. etc. . . . According to present indications, the supply position of ammonium sulphate is likely to be difficult in 1958-59."

நம்முடைய "பேர்ம் டிமாண்ட்டை"ப் பொறுத்த மட்டில் 1958-59-ல் அம்மோனியம் சல்பேட் 1,50,000 டன்னும், யூரியா 20,000 டன்னும், அம்மோனியம் நைட்ரேட் 25,000 டன் என்றும் கொடுக்கப்

3rd March 1959] [Sri K. Sattanatha Karayalar]

பட்டிருக்கிறது. இதில் மந்திரியவர்கள் கொடுத்திருக்கும் புள்ளிவிவரத் திறகும, கழிந்த ஆண்டு கொடுத்த புள்ளி விவரத்திற்கும் இடையே எப்படி இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டது என்பதை அறிய நான் அவர் உறுகிறேன். கழிந்த கூட்டத்தில் கேள்வி நேரத்தின்போது, 362-வது கேள்விக்கு விடை அளிக்கையில் உணவு மந்திரியவர்கள் up to the end of October 1958 சப்ளை செய்யப்பட்ட அம்மோனியம் சல்பேட் 41,820 டன் என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டு, 1.37 லட்சம் டன் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இந்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நான்கு மாதங்களுக்கு இடையில் கிட்டத்தட்ட சுமார் 90,000 டன் அம்மோனியம் சல்பேட் அதிக மாக விநியோகம் செய்யப்பட்டுள்ளதா ? இந்த புள்ளிவிவரம் தவருக இருக்குமோ என்றுதான் தோன்றுகிறது.

கடைசியாக ஒட்டுமொத்தமாக இந்த பட்ஜெட்டை பார்ப்போமானால், எந்த அளவு நாடு முன்னேறியிருக்கிறது என்பதை நாம் அலசிப்பார்ப்போ மேயானால், ஒவ்வொரு துறையிலும் செலவழித்திருக்கக்கூடிய தொகை, ஏதோ உயர்ந்திருக்கிறது என்பதைத் தவிர, எந்த அளவுக்கு நமக்குத் தேவையோ அந்த அளவுக்கு உயரவில்லை என்பது நிதர்சனமாகும். அதே நேரத்திலே நிதி நிலைமை ஏதோ திருப்திகரமாக இருப்பதாகச் சொல்லியிருந்தபோதிலும், மேலும் நாம் கடன் வாங்கவேண்டிய நிலைமை யிலேதான் இருக்கிறோம். நாட்டிலே விலைவாசிகள் உயர்ந்துகொண்டேதான். போகிறது. மேலும் வரி விதிக்கப்படவில்லை என்பது பற்றி சந்தோஷப் படுவதற்கு இல்லை. எந்த அளவுக்கு தீர்வை போடப்படவேண்டுமோ, அந்த அளவுக்கு போட்டாய்விட்டது. உதாரணமாக விற்பனை வரியை பொறுத்தவரையிலும் 11 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர் பார்க்கப்பட்டுள்ளது. ஆனால் 11 கோடி ரூபாய் அல்ல, இந்தத் துறையிலே 15 கோடி ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வருவதற்கு உள்ள வாய்ப்பு உறுதியாக இருக்கிறது. நாட்டு மக்களுக்கு தேவையான பொருள்களைப் பொறுத்தவரையில் இன்னும் அதிக பற்றுக்குறை இருந்துவருகிறது. உணவு தான்யங்களுக்கு மேலும் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு விதி விலக்கு அளிக்கக்கூடிய சலுகை இந்த பட்ஜெட்டில் வெளி யாகவில்லை. வருகின்ற துறையிலே எவ்வளவு அதிகமாக வருவாய் வர வேண்டுமோ அதற்குள்ள வாய்ப்புகளை பரிசீலனை செய்து, அதையே கண்ணும்கருத்துமாகக் கொண்டு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கும் "டாக்ஸ் ரிலீப்" கொடுக்கப்படவில்லை. 11 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : செலவு அதிகமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லும்பொழுது, வரியை எப்படி குறைப்பது?

* SRI K. SATTANATHA KARAYALAR : சாதாரண மக்கள், பாமா மக்கள் செலுத்தவேண்டிய தீர்வையைக் குறைத்து, பெரிய நிலச்சுவான் தார்கள், முதலாளிகள் இவர்களிடமிருந்து தீர்வையை அதிகமாகப் பெற லாம். அதுதான் "வெல்பேர் ஸ்டேட்டின் பாலிஸி". சாதாரண மக்களுக்கு எந்த அளவுக்கு சௌகரியம் செய்துகொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு சௌகரியம் செய்துகொடுத்து, வரியைக் குறைக்கவேண்டும். சோஷலிஸ சமுதாயக் கொள்கையை ஒத்துக்கொண்ட கட்சியாக இருந்தபோதிலும், இந்த புட்ஜெட்டைப் பார்த்தால் கழிந்த ஆண்டுகளில் நிதி அமைச்சர் எந்த முறையில் பட்ஜெட்டை சமர்ப்பித்தாரோ அதே முறையில் தான் இந்த ஆண்டும் சமர்ப்பித்திருக்கிறார். ஏதோ இங்கும் அங்கும் புள்ளி விவரங்களில் சில மாறுதல்கள் ஏற்படுத்தி இந்த அறிக்கையை சமர்ப்பித் திருக்கிறார்கள் என்று தான் சொல்ல முடியுமே தவிர, அதற்கு அதிகம் சொல்லுவதற்கு இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the only mistake I want to correct is this. The hon. Member was referring to 2·59 lakhs of tons in 1957–58. Evidently, he has confused himself. What I have stated relates to urban compost and not to chemical fertilizers or ammonium sulphate.

* SRI K. SATTANATHA KARAYALAR : I should like to know this. While it is stated that 1·37 lakhs of tons of ammonium sulphate . . .

வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய 362-வது கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது அக்டோபர் மாதம் வரையிலும் 41,000 டன் அமோனியம் சல்பேட் சப்ளை செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு கடந்த நான்கு மாதங்களிலே இந்த உபரியாக வந்திருக்கக் கூடிய தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறிய அவா உறுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : The season begins only in October. As a matter of fact it is only later on there is greater demand for fertilizers. It is only taking that into account that 1·37 lakhs tons have been put there. It may be a little less or a little more. We have given the estimates for this year. Simply because some figures is given with reference to Octcber, the hon. Member need not be under the impression that it cannot be increased at all.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : தற்காலிக சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையை வரவேற்கும் முறையிலே நான் சில வார்துதைகள் சொல்ல விரும்புகிறேன். இதுவரையிலும் தயாரிக்கப்பட்டுள்ள பட்ஜெட்களை விட, இந்த ஆண்டு பட்ஜெட் மிகவும் திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருக் கிறது என்று சொன்னால், அதில் ஒன்றும் மிகையில்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். நான் இந்த பட்ஜெட் மிகவும் நன்றாக இருக்கிறது என்று சொல்லுவதற்குக் காரணம், ஏதோ இந்த ஆண்டில் வரி போடாமல் விட்டிருக்கிறார்கள் என்பதல்ல. அதே சமயத்தில் பற்றாக்குறை பட்ஜெட் டாக இல்லாமல் உபரி பட்ஜெட்டாக சமர்ப்பித்திருக்கிறார்கள் என்ற காரணம் அல்ல. எந்தெந்த துறையில் எவ்வளவு பணம் ஒதுக்கப்படவேண்டுமோ, அதை பூரணமாக அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைக் காண உண்மையிலேயே நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையவேண்டும். வரி போட வில்லை என்றால், ஏன் வரியைக் குறைத்து இருக்கக்கூடாது என்று முன்பு பேசிய அங்கத்தினர்கள் கேட்டார்கள். இது எந்த அளவுக்குப் பொறுத்த மான வாதம் என்று அவர்களே சற்று ஆராய்ந்து பேசியிருக்கவேண்டு மென்று நான் கருதுகிறேன். மற்றொரு அங்கத்தினர் பேசும்போது ஏன் இன்னும் அதிகமாக வரியை விதித்திருக்கக்கூடாது என்ற அளவிலே பேசினார்கள். வரியை குறைத்திருக்கவேண்டுமா, இல்லாவிட்டால் வரியை அதிகப்படுத்தியிருக்கவேண்டுமா என்பதுபற்றி எதிர்க்கட்சிகளுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சரியான முடிவுக்கு வரவில்லை என்பதுபற்றி நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (குறுக்கீடு). நண்பர் கோவிந்தசுவாமி அவர்கள் வெவ்வேறு கட்சி என்று குறிப்பிடுகிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் நாடு முன்னேறுவதற்கு உதவியாக இருக்கவேண்டும். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அரசாங்கம் சொல்லுவதை ஏதோ குறை கூறவேண்டும் என்ற அளவில் சொல்லுவது சரியல்ல.

சமீபத்தில் மதிப்பீடு கமிட்டியார் திருவனந்தபுரம் சென்றிருந்தார்கள். அங்கே பிரதமக் காரியதரிசியும், நிதிக் காரியதரிசியும் எந்த முறையிலே அவர்களுடைய பட்ஜெட்டை சமர்ப்பிக்கவேண்டுமென்ற அளவிலே எங்களுடன் விவாதம் நடத்தினார்கள். "மெட்ராஸ் மாடலிலே" தங்கள் பட்ஜெட்டை சமர்ப்பிப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைப் பொறுத்த அளவிலே அங்கு விவாதிக்கப்பட்டதே தவிர, மதராஸைவிட இன்னும் அதிகமாக நல்ல முறையிலே எந்த அளவில் சமர்ப்பிக்கவேண்டுமென்பதைப்பற்றி இல்லை என்பதை நான் தெரிவித்து கொள்ளுகிறேன். அதுமாத்திரமல்ல, எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் நம் ராஜ்யம்தான் நம்முடைய நாட்டிலுள்ள எல்லா

3rd March 1959] [Sri K. S. Subramania Gounder]

ராஜ்யங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்று சொன்னல், அதை யாரும் மறுக்க முடியாது என்பதையும் நான் சொல்லிகொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே எல்லா அம்சங்களுக்கும் போதிய அளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே சமயத்தில், மற்ற என்.ஜி.ஓ.-க்களுக்கு கொடுத்து இருப்பதுபோல, கிராம உத்தியோகஸ்தர்களின் குழந்தை களுக்கும் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்க விஷயம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய ராஜ்யத்தின் பருவ நிலையைப்பற்றி விரிவாக எடுத்துரைத் திருக்கிறார்கள். பருவ நிலே சில ஜில்லாக்களிலே சரியாக இல்லே என்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், சிறிது அளவு உணவு உற்பத்தி உயர்ந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி புள்ளிவிவரம் இல்லாமல் பொதுவாகச் சொல்லிவிடவில்லே. நெல்லேப் பொறுத்தவரையில் 10 சத விகிதமும், புஞ்சைத் தானியத்தை பொறுத்தவரையில் 33 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்களேப் பொறுத்த வரையில் 12 சதவிகிதமும் உற்பத்தி உயர்ந்திருக்கிறது என்று அழகாக எடுத்துரைத்திருக்கிறார்கள். பருவ நிலே இன்னும் நன்ருக இருந் திருக்குமானல், இன்னும் அதிகமாக உணவு உற்பத்தி எற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. அப்படியிருந்தும் விலேவாசிகள் அதிக மாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் தன் அறிக்கையிலே விரிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். விலே வாசி உயர்வதற்கும் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் ஒன்றுக்கொன்று போட்டி இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறி யிருக்கிறார்கள், ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருக்கத்தான் செய்யும். அதிலே முரண்பாடு இருக்கிது என்று யாரும் சொல்ல முடியாது. சாதாரணமாக வாழ்க்கைத்தரம் உயரும்பொழுது, சற்று விலேயும் அதிகமாகத்தரன் போகிறது. பணம் குறைவாக இருந்தால் வாங்குவதும் குறைந்துபோகிறது. விலேவாசி ஏற்றத்தை ஓரளவுக்கு கட்டுப்படுத்துவது அவசியமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துள்ளார்கள். விலேவாசியும் அதிகமாகப் போகாமல், அதே சமயத்தில் விவசாயிகளுக்கு தங்கள் பொருள்களுக்கு எந்த அளவுக்கு பணம் கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு பணம் கிடைக்கும்படி விலேவாசிகளே கட்டுப்படுத்துவதற்கு திட்டம் வகுத்து, அதை இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவந்துள்ளார்கள் என்பதை அங்கத்தினர்கள் நன்ருக உணர்வார்கள். அந்த அளவிலே உபரியான தானியத்தை அரசாங்கம் வாங்கிவைத்திருந்து, எந்த சமயத்திலே விலே அதிகமாகிறதோ அந்த சமயத்தில் அதை விற்க வேண்டுமென்பதுதான் இப்பொழுது அரசாங்கத்தினுடைய திட்டம். இதிலே திரும்பவும் “கண்டிரோல்” வந்துவிடுமோ என்ற ஐயம்தான் மக்களிடையே இருந்துவருகிறது. அந்த பயம் இல்லாத அளவிலே அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் போதிய அளவில் பிரசாரம் செய்ய வேண்டும் என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளோ, அமைச்சர்களோ நிகழ்த்தும் பேச்சுக்கள் இன்னும் திரும்பவும் “கண்டிரோல்” வந்துவிடுமோ என்று விவசாயிகள் பயப்படக்கூடிய முறையிலே இருக்கக்கூடாது. அம்மாதிரி பயம் வேண்டியதில்லே என்பதை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் இரண்டு லட்சம் டன் தான்யத்தை வாங்கிவைத்தால் பின்னல் அதை சரியரன முறையில் விநியோகிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். அதன் மூலம் அதிக விலேவாசி களேயும் தடுக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இன்னும் உணவு உற்பத்திக்காக நீர்ப்பாசன வசதி செய்துகொடுப்பது, உர விநியோகம் செய்வது இவைகள் எல்லாம் அதிகமாக கொடுக்கப்பட்டி ருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்திருக் கிறார்கள். அதில் குறிப்பாக சிறிய நீர்ப்பாசன திட்டத்தை இன்னும் அதிகமாக நிறைவேற்றுவதற்கு இன்னும் அதிக அளவில் தொகையை மத்திய அரசாங்கத்திலிருந்து பெறுவதற்கு நாம் முயற்சி எடுக்க

[Sri K. S. Subramania Gounder] [3rd March 1959

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு விரிவான ஸ்கீம் தயாரிக்க வேண்டும். அதாவது எந்தெந்த ஜில்லாக்களில் எல்லாம் இம்மாதிரியான சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை போட்டு நிறைவேற்ற முடியும் என்பதைப் பார்த்து அதற்குத்தகுந்தபடி ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக பெரிய திட்டங்கள் என்று சொல்லும்போது இப்போது பரம்பிக்குளம் திட்டத்தோடு முடிவடைந்து விடுகின்றது. அதற்கு பின் பெரிய திட்டமாக இருப்பது கோதாவரி தண்ணீரை பயன்படுத்தக்கூடிய திட்டம்தான். இதுவரையிலும் இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இதை மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தெந்த ஜில்லாவில் எல்லாம் உடனடியாக மக்களுக்கு பயன்தரக்கூடிய திட்டங்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உர வசதி செய்து கொடுக்கும் விஷயத்தில், அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு இன்று காலையில் பதில் சொல்லும்போது பாதி அளவு கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், பாதி அளவு தனிப்பட்டவர்கள் மூல மாகவும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதிலும் ப்ளாக் ஏரியாக்களில் எல்லாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார்கள். இதை பூரா இடங்களிலுமே கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதியைப் பொறுத்தவரையில் சேலம் ஜில்லாவில் மேட்டூர் வாய்க்காலை பள்ளிபாளையத்திலிருந்து ஜேடர்பாளையம் வரையில் கொண்டு போகவேண்டும் என்று முன்பே சொல்லப்பட்டு வந்தது. அது இதுவரையிலும் நிறைவேருமல் இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி உள் நாட்டு அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். இதற்காக ஸாங்ஷனும் செய்யப்பட்டிருந்ததாக தெரிகிறது. முதலாவதாக இந்த வாய்க்காலை 45 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்துவதற்காகத் தான்கொண்டு வரப்பட்டது. இப்பேரது அதை ஜேடர்பாளையம் வரையில்கொண்டு போவதற்கு எல்லா வசதியும் இருக்கிறது. லெவலும் சரியாக இருக்கிறது. ஆகவே காவேரி ஓரத்தில் தண்ணீர் பாயாமல் இருக்கும் பள்ளிபாளையம் முதல் ஜேடர்பாளையம் வரையிலும் வாய்க்காலைப் போடுவதற்கு அடுத்த திட்டத்திலாவது ஏற்பாடு செய் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேட்டூர் வாய்க்கால் ஸர்ப்ளஸ்லிருந்து பிரித்து இடப்பாடி ஏரியாவுக்கும் அதை திருமணி ஆற்றில் சேர்ப்பதற்கும் ஏற்கனவே சீப்-இஞ்சினியரிடம் திட்டமிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அதையும் உடனடியாக நடத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் மின்சர்ர வசதியை எடுத்துக்கொண்டால் நம்முடைய ராஜ் யத்தில், வேறு எந்த ராஜ்யமும் நினைக்க முடியாத அளவில் நாம் மின்சார உற்பத்தியில் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். இதில் யாருக்கும் சந்தேகமிருக்க முடியாது. இருந்தபோதிலும் மின்சார வளர்ச்சி எல்லாம் அரசாங் கத்தின் கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடங்களில்தான், முன்னேற்றம் அடைந்திருக்கிறதே தவிர தனிப்பட்ட கம்பெனிகளின் கீழ் இருக்கும் இடங்களில் மின்சார உற்பத்தி வளர்ச்சி அடையவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் முக்கியமாக எந்த இடங்களில் மின்சாரம் மிக தேவையாக இருக்கிறதோ, எங்கெல்லாம் நிலங்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறதோ அந்த இடங்கள் இப்போது கம்பெனிகளின் கீழ் இருந்து வருகிறது. இந்த இடங்கள் எல்லாம் மின்சாரத்தில் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறது. ஆகவே இம்மாதிரி யரன இடங்களுக்கு முதலிடம் கொடுத்து அந்த இடங்களை எல்லாம் அரசாங்கத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர் திட்டத்தை எடுத்துக்கொண்டால் இதற்கு போதிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் நமது ராஜ்யத்தில் பருவ மழை

3rd March 1959] [Sri K. S. Subramania Gounder]

அவ்வப்போது இல்லாததின் காரணமாக குடிதண்ணீர் கஷ்டம் இருந்து கொண்டே இருக்கிறது. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் போதவில்லை என்றால் இன்னும் இதற்கு அதிகமாக ஒதுக்கவேண்டும். இதற்காக ஸப்ளிமெண்டரி பட்ஜெட்டில் நாம் பணத்தை அதிகமாக ஒதுக்கலாம். குடி தண்ணீர் வசதியில்லாத இடங்களில் எல்லாம் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. எங்கெல்லாம் குடி தண்ணீர் வசதியில்லையோ அந்த இடங்களுக்கு எல்லாம் உடனடியாக குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஒரு திட்டத்தை தயாரித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இடைப்பாடி பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால் அங்கு குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருந்து கொண்டிருக்கிறது. கிடைக்கின்ற தண்ணீர் கூட குடிப்பதற்கு லாயக்கில்லாமல் இருக்கிறது. அங்கு இருக்கின்ற கிணற்று தண்ணீர் உப்பு தண்ணீராக இருந்துகொண்டிருக்கிறது. காவேரி செல்லக்கூடிய இடத்தில் 7-வது மைலில் இருக்கின்ற காரணத்தால் இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு உடனடியாக ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நீதி நிர்வாக விஷயங்களை எடுத்துக்கொண்டால், கோர்ட்டுகளை அமைப்பது எல்லாம் பொது ஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். வக்கீல்களுக்கு சௌகரியமாக இருக்கவேண்டும் என்பது முக்கியமல்ல. பொது ஜனங்களுடைய சௌகரியத்தைப்பார்த்துத்தான் நாம் கோர்ட்டு அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். இப்போது சங்கரி முனிசீப் கோர்ட் சேலத்தில் (Sankari Munsiff court at Salem) என்ற முறையில் தான் இருந்துகொண்டிருக்கிறது. இதை மாற்றி சங்கரியிலே இந்த கோர்ட்டை ஏற்படுத்த வேண்டுமென்று பல விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இதில் திரும்பவும் மாற்ற வேண்டாம் என்று ஹைக் கோர்ட்டு சொன்னதாக தெரிகிறது. ஹைக்கோர்ட்டுக்கு பொது ஜனங்களுடைய சௌகரியம் முக்கியமல்ல. அவர்கள் பார் அஸோஸியேஷனைக் கேட்பார்கள். அவர்கள் மாற்றவேண்டாம் என்று அபிப்பிராயப்பட்டால் அதே மாதிரி தெரிவித்துவிடுவார்கள். நமக்கு ஜனங்களுடைய சௌகரியம்தான் முக்கியம். பொது ஜனங்களின் சௌகரியத்திற்கு எது வசதியாக இருக்குமோ அதற்கு தகுந்த விதத்தில்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே பொது ஜனங்களின் சௌகரியத்தை உத்தேசித்து சங்கரி கோர்ட்டு சேலத்தில் இருப்பதை மாற்றி சங்கரியிலேயே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவசியமேற்பட்டால் இதற்கு இப்போது இருக்கின்ற அதிகார எல்லையை (ஜுரிஸ்டிக்ஷன்) மாற்றி அமைக்கவேண்டுமென்றால் மாற்றி அமைத்துக்கொள்ளலாம். ஆகவே இந்தக் கோர்ட்டை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி வசதியைப பொறுத்தவரையில், சேலம் ஜில்லாவில் ஒரு காலேஜ்தான் இருக்கிறது. காலேஜில் போதிய அளவில் இடங்கள் இருக்கின்றன. ஆனால் மாணவர்கள் தான் அதிகமாக இல்லை என்று நிதி அமைச்சர் அவர்கள் பொதுவாக சொன்னார்கள். சேலத்தைப் பொறுத்த வரையில் அங்கு ஒரு காலேஜ் இருப்பது போதாது என்பதுதான். அங்கு ஜனத்தொகை அதிகம், விஸ்தீர்ணத்தை எடுத்துக்கொண்டாலும் பெரியது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த நிலைமையில் அங்கு ஒரே ஒரு காலேஜ் இருக்கிறது. அங்கு இருப்பது முனிசிபாலிட்டியைச் சேர்ந்தது. அதோடு ஜில்லா போர்டின் ஆதரவிலோ அல்லது கவர்ன்மெண்ட் காலேஜாகவோ ஒரு காலேஜ் ஏற்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு ரகத் தொழில்களை, **Small Scale Industries** பொறுத்த வரையில் பொதுவாக நம் நாட்டில் முன்னேற்றம் இருந்தபோதிலும், இன்னும் பல இடங்களில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமிருக்கிறது. குறிப்பாக சேலம் ஜில்லாவில்

இன்னும் அதிகமாக தொழிற் ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு இயக்கத்தை எடுத்துக்கொண்டால் பொதுவாக முன்னேற்றகரமாக நடந்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களது அறிக்கையில் அடுத்த ஆண்டில் 100 பெரிய சங்கங்களும் 200 சிறிய சங்கங்களும் ஆரம்பிக்கப்படப் போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்ற எந்த இராஜ்யங்களிலும் இல்லாத முறையில் நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் முதன்மையாக இருக்கிறது. நம் நாட்டில் பல வளங்கள் இருக்கின்றன. அதன் மூலமாக இன்னும் கூட்டுறவு இயக்கத்தை முன்னேற்றமடைய செய்ய முடியும். எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெற்றிருந்தாலும் இன்னும் அதிகமாக முன்னேற வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இப்போது நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்ஸிலின் தீர்மானத்தையும், இன்னும் அதோடு வொர்க்கிங் குரூப் செய்திருக்கும் தீர்மானங்களையும் பார்த்தால் நம் ராஜ்யத்தில் எந்த அளவுக்கு முன்னேற்றம் இருக்கிறதோ, அதைவிட அதிகமாக முன்னேறுவதற்கான திட்டமா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அஸ்ஸாம், மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம் போன்ற ராஜ்யங்களில் கூட்டுறவு இயக்கம் எந்த அளவில் முன்னேற வேண்டும் என்பதற்கான ஒரு திட்டமாக இருக்கிறதே தவிர, நம்மைப் போல அதிகமாக முன்னேறியிருக்கக்கூடிய ராஜ்யங்களுக்கான விரிவான திட்டமாக இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். நம் ராஜ்யத்தில் இன்னும் விரிவாக்க வேண்டுமானால், இதற்குத் தனியாக ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமே தவிர, எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவான, எல்லா ராஜ்யங்களும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு திட்டமாக இருக்க முடியாது. அதற்காக இந்த மாத மத்தியில் முதலமைச்சர்கள், கூட்டுறவு அமைச்சர்கள் மகாநாடு ஒன்று டில்லியில் நடக்கப் போகிறது. அதிலே என்.டி.ஸி. தீர்மானப் பிரகாரம் இந்த ராஜ்யத்தில் நடக்க முடியாது என்று சென்னைக்கும், அவசியம் ஏற்பட்டால் பம்பாய், ஆந்திரா முதலிய ராஜ்யங்களுக்கும் தனியாகத் திட்டம் வகுக்க வேண்டுமேயல்லாது எல்லா ராஜ்யங்களுக்கும் பொதுவானதாக இருக்க முடியாது என்று அமைச்சர்கள் அந்த மகா நாட்டில் வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களைப் பொருத்த வரையில் ரிபேட் கொடுப்பதற்காக 81 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன். இதிலே எந்த அளவு கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும். ரிபேட் கொடுப்பதில்கூட அந்தந்த மாதத்தில் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வப்போது ரிபேட்டைக் கொடுக்காமல் 8 மாதம், 9 மாதம் என்று பாக்கி வைப்பதன் காரணமாக பல சொஸைடிகள் நல்ல முறையில் நடக்காமல் இருப்பதாகத் தெரிகிறது.

(The Hon. Member had not concluded his speech when the Temporary Chairman Sri R. Subramaniam rang the bell and called on the hon. Member Sri N. S. Ramalingam to speak).

* SRI. N. S. RAMALINGAM : அவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்தச் சபையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவு அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் மட்டும் வரவேற்கவில்லை. பொதுவாக இந்தச் சபையிலும், மற்றும் அல்லாமல் வெளியிலும் நல்ல முறையில் இது வரவேற்கப்பட்டிருக்கின்றது என்பதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். கனம் சுப்பிரமணிய கௌண்டர் அவர்கள் சொன்னது போல வரி போடவில்லை என்பதால் மட்டும் இந்தத் திட்டத்தை வரவேற்கவில்லை, பற்றாக்குறை இல்லை என்பதால் மட்டும் வரவேற்கவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கையிலிருந்து இந்த அமைச்சரவை சென்ற பல வருஷங்களாக அனுஷ்டித்து வரும் திட்டங்களினால் என்ன நல்ல பலன்கள் கிடைத்திருக்கின்றன—விவசாயத் துறையிலும்,

3rd March 1959] [Sri N. S. Ramalingam]

தொழில் துறையிலும் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம்—என்று பார்த்தால் நாம் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது. இந்த அறிக்கை இந்த ராஜ்யத்தின் உண்மை நிலையை அப்படியே எடுத்துக் காட்டுகிறது. பருவ நிலையைப் பொறுத்த வரையில் சில மாவட்டங்களில் பருவ நிலை தவறிவிட்டது என்று இந்த அறிக்கையில் எடுத்துக் காட்டப்படுகிறது. நாகப்பட்டிணம், திருத்துரைப்பூண்டி போன்ற தாலூக்காக்களில் மானவாரிப் பிரதேசங்களில் சென்ற ஐப்பசி—கார்த்திகை மாதங்களில் மழை தவறியதால், பயிரெல்லாம் எறிந்து போய் சாப்பாட்டிற்குமட்டு மல்லாமல் விதைக்குக்கூட நெல் இல்லாமல் கஷ்டப்படும் அவல நிலைமை இருக்கிறது. அரசாங்கம் இதை கவனித்து இந்த நிலைமை மாறுவதற்கு வரி வஜா கொடுக்கவும், கடன் கொடுத்திருப்பதை வசூலிப்பதை ஒத்திப் போட்டு அடுத்த வருஷம் வாங்கிக்கொள்ளவும் எற்பாடு செய்து, மேலும் வேண்டிய நிவாரணம் அளிக்க கவனம் செலுத்தவேண்டுமென்று நான் மன்றுடிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த பிராந்தியம் சம்பந்தப்பட்டமட்டில் விழுந்தமாவாடி, வேளாங்கண்ணி, திருப்பூண்டி, பொய்யூர், பிரதம ராமபுரம் திட்டங்கள் போன்ற சிறு பாசனத் திட்டங்கள் சென்ற சில வருஷங்களாக அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அவைகளைச், சீக்கிரம் பரிசீலனை செய்து உத்திரவு போட்டால் இந்த மாதிரி நிலைமை எற்படாது. அதை நன்கு கவனித்து இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை சீக்கிரம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கனம் சுப்பிரமணிய கவுண்டர் சொன்னது போல இந்தப் பிராந்தியகளிலும் மின்சாரம் கம்பெனியார் கையில் இருப்பதால் (திரு. எ. கோவிந்தசாமி குறுக்கீடு) மின்சாரம் தந்தி சம்பந்தப்பட்டமட்டில் கம்பெனியார் கையில் இருப்பதால், இந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டு மின்சாரம் விரிவாக்கப்படவில்லை. அங்கு மின்சாரம் கொண்டுவந்து விட்டால் இந்த மாதிரி நிலை எற்படாதாகையால்,அதற்கும் ஆவனம் செய்ய வேண்டு மென்று நான் மின்சார மந்திரி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாகப்பட்டினம் துறைமுகம் எவ்வளவு முக்கியமான பங்கு கொண்டுள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகையால் அதைப் பற்றி நான் ஒன்றும் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. எழு லட்சம் ரூபாய்க்கு ஒரு சிறிய ட்ரெட்ஜர் வாங்கி வைத்து, வருஷத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்தால் இந்தத் துறைமுகம் ஒரு நல்ல துறைமுக மாகிவிடும் என்று ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இதையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் அந்தத் திட்டம் முடியும் வரையில் காத்துக் கொண் டிருக்க வேண்டியதில்லை. தஞ்சை, திருச்சி, ஜில்லாக்களுக்கு உரங்கள் முதலியவைகள் கடலூரிலிருந்து போகிறது. அதனால் அதிகச் செலவு எற்படுகிறது; அதனால் விவசாயிகள் அதிக விலை கொடுக்க வேண்டியிருக் கிறது. அதை ஸ்டீமரிலே கொண்டுவந்து நாகப்பட்டினத்தில் இறக்கினால் தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு சௌகரியம் கிடைக்க முடியும். உரம் முதலியவைகளை குறைந்த விலைக்கு விவசாயிகள் வாங்க முடியும். மேலும் அந்தத் துறைமுகத்தில் பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ரயிலிலேற்றி கடலூரிலிருந்து தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குப் போவதை விட நாகப்பட்டினத்தில் இறங்கிப் போக எற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு வருஷங்களாக நமது சென்னை சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கு மிடையே கடிதப் போக்குவரத்து நடக்கிறது. ஆனால் இன்னும் முடிவு எற்பட வில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு மகாநாடு போட்டு, சம்பந்தப்பட்ட எல்லோரையும் கூட்டி அதில் ஒரு தீர்மானம் எற்பட்டு கூடிய சீக்கிரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் பூச்சிகளாலும் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே, நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இடம் பூச்சிகளால் தாக்கப்பட்டால் அங்குள்ள விவசாய அதிகாரிகள் பூச்சி தாக்கப்பட்ட இடம் என்று அறிவித்து, அதற்குப் பிறகு மருந்து வாங்கத் தயாராக வேடிண்

இருக்கிறது. கேட்கின்ற அளவு மருந்து கிடைப்பதில்லை. ஒரு மாவட்ட விவசாய அதிகாரியின் கீழுள்ளஇடத்திற்கு 5,000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய் என்று குறிப்பிடப்படுகிறது. அந்தப்பகுதியில் 10 அல்லது 15 டெமான்ஸ்ட்ரேட்டர்கள் இருந்தால் ஒரு ஆளுக்கு 500 ரூபாய்தான் கிடைக்கிறது. அதுவும் உரிய காலத்தில் கிடைப்பதில்லை. ஜூலை மாதம் முதல் டிஸம்பர் மாதம் வரையில் பூச்சி மருந்துகளை பாதி விலைக்குக் கொடுப்பது என்ற சலுகை இருக்க வேண்டும். அல்லது $\frac{3}{4}$ விலைச் சலுகையிலாவது எல்லா மாதங்களிலும் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில்தான் என்றில்லாமல் எப்போதும் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டும். இதிலே பிளாக் மார்க்கெட் செய்ய வாய்ப்புக் கிடையாது. ஜில்லாவிற்கு இவ்வளவு என்று ஏற்படுத்தாமல் ஜூலை மாதம் முதல் டிஸம்பர் மாதம் வரையில் குறைந்த விலையில் விற்க சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் இப்போது சொன்னது போல் மழை இல்லாததால் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் பலர் சாப்பாட்டுக்கு இல்லாததோடு அடுத்த வருஷம் விதைக்குக்கூட நெல் இல்லாமல் கஷ்டப்படுவதால் கிராப் இன்ஷ்யூரன்ஸ், கேட்டில் இன்ஷ்யூரன்ஸ் முதலியன ஏற்படுத்தி, இந்த மாதிரி காலங்களில் அவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை சம்பந்தப்பட்ட மட்டில் இந்த வருஷத்தில் கொருக்கையில் ஒரு பார்ம் ஏற்படுத்த 84,000 ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு எனது தாலுக்கா வாசிகள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சார்பில் சர்க்காருக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உம்பளச்சேரி மாடு எவ்வளவு சிக்கனமான செலவில் நல்ல முறையில் வேலை செய்யும் என்று எல்லோருக்கும் தெரியும். நான் இதைப் பற்றி பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தும் இப்போதாவது ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கும் விவசாய அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மனிதர்களில் எப்படி ஆண்களுக்குச் சலுகை கொடுக்கப்படுகிறதோ அதே மாதிரி மாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் ரிஷபக் காளைகளுக்குத்தான் சலுகை கொடுக்கிறார்கள். கொடுக்கக்கூடிய சலுகைகளைக் கிடாரிக் கன்றுகளுக்குக் கொடுப்பதில்லை. கிடாரிக் கன்றுகளுக்கும் சலுகை கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு வேண்டிய திட்டங்களைப் போட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ரிஷபக் கன்றுகளுக்கு எப்படி சப்ஸிடி கொடுக்கிறோமோ அதே மாதிரி கிடாரிக் கன்றுகளுக்கும் சப்ஸிடி கொடுத்தால் பிற்காலத்தில் பால் உற்பத்தி அதிகரிக்க வசதி ஏற்படுமாகையால், இதற்கும் வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-30 a.m. தொழில் சம்பந்தப்பட்ட வரையிலே, நாகப்பட்டினத்திலே, சென்ற வாரத்தில்தான் ஸ்டீல் ட்ரங்க் கூட்டுறவு சொஸைட்டி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்டீல் ட்ரங்க் கூட்டுறவு சொஸைட்டிக்கு இன்னும் ஸ்டீல் போதுமான அளவு கிடைக்கவில்லை. ஆகையால், ஸ்டீல் போதுமான அளவு கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, காரைப்பிடாகையில் மரச்சாமான்களும், நாகூரில் தொப்பிகளும், தயாரிக்கப்படுகின்றன. அவைகளுக்கு வெளி நாடுகளிலே அதிக கிராக்கி இருக்கிறது. ஆகையால், அந்தத் தொழில்களும் நல்ல முறையில் நடப்பதற்கான வகையில் அரசாங்கம் தக்க ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், உப்பு சௌராஷ்ட்ராவிலிருந்து நாம் இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது. அங்கிருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக வேதாரண்யம் போன்ற இடங்களிலேயே நல்ல முறையில் உப்பு உற்பத்தி செய்தால் சௌராஷ்ட்ராவிலிருந்து வரவழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. நமது ராஜ்யத்தில் இருக்கும் உப்பளங்களை நல்ல முறையில் விருத்தி செய்தால் ஏராளமான உப்பு உற்பத்தி செய்வதற்கு முடியும். அந்த முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

3rd March 1959] [Sri N. S. Ramalingam]

'பிரஷ்' செய்யும் தொழிற்சாலை ஒன்று வேதாரண்யத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மூடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மூடப்பட்டதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. நாகப்பட்டினம், வேதாரண்யம் போன்ற இடங்களில் பிரஷ் இன்டஸ்ட்ரி விருத்தி அடைவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதற்குப் பூரண கவனம் செலுத்தி அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

குடி தண்ணீர் சம்பந்தப்பட்ட மட்டில் பணம் ஒதுக்கியிருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால், நாகப்பட்டினம் முனிஸிபாலிடிக்கு இதற்காக பணம் ஒதுக்கவில்லை. பதினைந்து மைல்களுக்கு அப்பாலுள்ள ஓடச்சேரியிலிருந்து நாகப்பட்டினம் முனிஸிபாலிடிக்கு குடி தண்ணிர் வரவேண்டியிருக்கிறது. பைப் போட்டு 42 வருஷம் ஆகிறது. சாதாரணமாக, சுமார் இருபது வருஷங்களுக்கு ஒரு தடவை பைப் மாற்ற வேண்டுமென்ற அவசியம் இருக்கும்போது, 42 வருஷங்களாக மாற்றப்படாத காரணத்தால் பைப்கள் துருப்பிடிருத்திருக்கின்றன. அதனால் சுகாதாரத்திற்கு ஏற்றதாக தண்ணீர் சரியாக வரவில்லை. ஆகவே, நாகப்பட்டினம் முனிஸிபாலிடிக்கும் கடன் கொடுத்து, வேண்டிய பைப்களும் கொடுத்து, அங்கு குடி தண்ணீர் வசதியை நல்ல முறையிலே செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயம் சம்பந்தப்பட்ட வரையில், 'ஸாயில் டெஸ்ட்' செய்வதற்கு ஒரு லாபரடரி வைக்க வேண்டுமென்று சென்ற வருஷமும் அதற்கு முந்திய வருஷமும் இந்தச் சட்டசபையிலே நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்போது கோயம்புத்தூரில் மண் பரிசோதனை செய்வதற்கு ஒரு இடம் இருக்கிறது. இப்பொழுது தஞ்சை ஜில்லாவிலே 13 லட்சம் ஏக்கராக்கள் நெல் சாகுபடியிலிருந்தும், அங்கே மண் பரிசோதனை செய்வதற்கு ஒரு லாபரடரி இல்லாதால் ஆடுதுறையிலோ அல்லது வேறொரு இடத்திலோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அம்மாதிரி செய்தால்தான் விவசாய உற்பத்தி அதிகமாகச் செய்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : அவைத் தலைவர் அவர்களே, 1959–60-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தையும் அவ்வாண்டு நிதி நிலை அறிக்கையையும் சட்டசபையிலே சமர்ப்பித்து, இன்று பொது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பலர் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலாவது ஐந்தாண்டு திட்டம் முடிந்து இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே ஏறத்தாழ மூன்று ஆண்டுக் காலம் கழிந்து விட்டது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும் நாட்டிலே சமுதாய நலத் திட்டம் பரவலாக அமுலாக்கப்பட்டும் நாட்டு மக்கள் மத்தியிலே உண்மையாகவே வளத்தைப் பார்க்க முடியவில்லை; வாழ்க்கைத் தரம் உண்மையிலேயே பெரிய அளவிற்கு உயரவில்லை. இதனால் மக்கள் தன்னம்பிக்கையை இழந்துவிடுவார்களோ அல்லது ஆட்சியின் பேரிலேயுள்ள நம்பிக்கையை இழந்து விடுவார்களோ என்ற எண்ணத்தின் காரணமாக நிதி அமைச்சர் அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதிலே மிகத் திறமையோடு, மக்கள் நம்பிக்கை கொள்கிற அளவில் மிகத் திருப்திகரமான வரவு செலவுத் திட்டமாக மக்களுக்குப் படும் வகையில் தயாரித்திருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்ல வேண்டும். ஏனென்றால், உண்மையான நிலைமையைக் கணக்கிலே எடுத்து, இந்த வரவு செலவுத் திட்டத்திலே அதற்கான வழிவகை காணப்படவில்லை. நிதி அமைச்சருடைய அறிக்கையிலும் சரி, சில தினங்களுக்கு முன்பு இங்கே விவாதிக்கப்பட்ட கவர்னர் பெருமான் பேருரையிலே காணப்பட்ட முறையிலும் சரி, நாட்டிலே பல பகுதிகளிலே மழை இல்லை, பல பகுதி பஞ்சப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டது; மற்றப் பல பகுதிகள் பஞ்சப் பிரதேசமாக இருந்தும், அரசாங்க அதிகாரிகளுடைய கவனத்திலே படாத காரணத்தால், அவை பஞ்சப் பகுதியாக பிரகடனப்

[Sri M. P. Subramaniam] [3rd March 1959

படுத்தப்படவில்லை. ஆகவே, அந்த வட்டார மக்கள் தங்களுக்கு வேண்டிய அடிப்படை உணவு வசதிகளைக்கூட செய்து கொள்ள முடியவில்லை. நாட்டிலே உணவுத் கட்டுப்பாடு ஒரு புறமிருக்க, இருக்கும் உணவையும், விலை வாசி ஏற்றத்தினால் சாதாரண தொழிலாளிகளும் ஏழைகளும் வாங்கிச் சாப்பிட முடியவில்லை. நாட்டிலே கல்வி கற்றவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தாலும், கற்ற ஒரு சிலரும் வேலை இல்லாத் திண்டாட்டத்தினால் பெரிதும் தவிக்கிறார்கள். இந்த நிலைமையில் நாட்டிலே பீதியும் கவலைக்கிடமான நிலைமையும் இருக்கிறதென்பதை நாம் உண்மையிலேயே ஒப்புக்கொண்டால்தான் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளாமல் நாட்டிலே இருக்கும் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதாக ஆகும் என்பதை நாம் உணர வேண்டும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, இந்த வரவு செலவு திட்டத்தில் வழி வகை காணப்படவில்லை என்றுதான் நான் சொல்வேன்.

வரவு செலவு திட்டத்தைப் பொதுவாக நாம் பார்ப்போமானால், இதிலே வரவேற்கத் தக்க அம்சங்கள் எதுவுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நிதி அமைச்சர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடுகிற ஒரு சில சலுகை கூட உண்மையிலேயே பயன் தரத் தக்க உதவி அல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிரதம ஆரோக்கிய நிலையங்களிலே (ப்ரைமரி ஹெல்த் ஸென்டர்களிலே) வேலை பார்ப்பதற்கு டாக்டர்கள் உற்சாகத்தோடு கிராமப் புறங்களுக்குச் செல்வதில்லை. அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு மாதம் ரூபாய் 100 ஊதியம் கொடுப்பதாக அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த அளவு நான் வரவேற்கிறேன். ஆனால், பல ஆண்டு காலமாக இந்தச் சட்டசபையிலே எடுத்துக் கூறப்பட்டது போல், கிராமப் புறங்களில் பல ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டிருக்கின்றன. அங்கே படித்த டாக்டர்கள் செல்வதற்குத் தயாராக இருப்பதில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் டாக்டர்கள் நம மாநிலத்தில் வேலை செய்வதற்கு விருப்பம் இல்லாமல் வேறு மாநிலங்களுக்கும் பிற நாடுகளுக்கும் செல்வதற்குத் தயாராக இருக்கிறார்களே தவிர, நம்முடைய மாநிலத்திலேயே வேலை செய்வதற்குத் தயாராக இல்லை. நாம் வேண்டுமானால் சொல்லலாம்—நாட்டின் ஏழ்மை நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், அதிகப்படியான ஊதியம் கொடுப்பதற்கு நம்மால் இயலாது என்று இருந்தாலும், நிலைமையைச் சமாளிப்பதற்கு, கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமென்றால், இந்த ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்குச் செல்லக்கூடிய டாக்டர்களுக்குக் கொடுக்கக் கூடிய அதிகப்படியான ஊதியத்தைப் போல் கிராமப்புற ஆஸ்பத்திரிகளில் (ரூரல் டிஸ்பென்ஸரீஸ்) அல்லது லோகல் பண்டு டிஸ்பென்ஸரிகளில் வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்கும் இதைப் போன்று நூறு ரூபாய் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு இப்பொழுது வாங்குவதைவிட கூடுதலான ஊதியம் கொடுக்ககூடிய ஒரு சலுகை இருந்தால்தான் கிராமப்புற ஆஸ்பத்திரிகள் மூடப்படாமல், அங்குள்ளவர்களுக்கு வைத்திய வசதி கிடைக்க முடியும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம அதிகாரிகளுடைய குழந்தைகள் இலவசக் கல்வியை உயர்நிலைப் பள்ளியிலும் பெறலாம் என்ற சலுகை கொடுத்திருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் பல்லாண்டு காலமாக, தங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டும், மற்ற பல சலுகைகள் வேண்டும் என்று, சங்கத்தை அமைத்து, அதன் மூலமாக அரசாங்கத்தினிடத்திலே கோரிக்கை அனுப்பியதன்பேரில், இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பு, இங்கே அமைச்சர் குழுவிலே இருக்கின்ற இரண்டு மூன்று பேர்கள் கிராம அதிகாரிகளுடைய பிரச்னையைத் தனிப்பட்ட முறையில் கவனித்து அவர்களுக்கு வேண்டிய பரிகாரம் செய்வதாக இங்கே வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால், இதுவரையிலும் அந்த அமைச்சர் குழு என்ன செய்தது என்று தெரியவில்லை. அவர்களுடைய குழந்தைகள் உயர்நிலைப் பள்ளியில் இலவசக் கல்வி பெறக்கூடிய சலுகை கொடுத்திருக்கிறார்களே, அதுதானா, வேறு இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, கிராம அதிகாரிகள் என்ன என்ன கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன்

3rd March 1959] [Sri M. P. Subramaniam]

வைத்திருக்கிறார்களோ, அவைகளை எல்லாம் கவனித்து, அவர்களுக்கு சலுகைகள் அளிக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரையிலேயும் குறிப்பிடப்பட்டது, இங்கு மீண்டும் குறிப்பிடப் பட்டிருக்கிறது, என்.ஜி.ஒக்களுக்கு ஐந்து ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுப்பது பற்றி. அதற்குப் பின்னாலே அவர்களுடைய சம்பளம் போன்ற மற்ற பிரச்னைகளையும் கவனிப்பதற்கு குழுவொன்று இங்கே அமைத்திருக் கிறார்கள். இந்தக் குழுவைப் பொருத்த வரையில் பல சந்தர்ப்பங்களில் நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பளக் கமிஷன் ஒன்று அமைக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியிலேயிருந்து இங்கே கேட்கப்பட்ட நேரத்தில் "நாட்டின் நிதி நிலைமை நன்றாகத் தெரியும். அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவது என்றால் எவ்வளவு செலவாகும் என்பதும் நன்றாகத் தெரியும். இதைத் தெரிந்துகொள்வதற்குக் குழு ஏற்படுத்த வேண்டுமென்றால், கால தாமதம் ஆகுமே தவிர, கண்ணுக்கு முன்னால் தெரிகிற பிரச்னைக்குக் குழு அமைத்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை" என்று அந்தக் காலத்திலே சர்க்கார் தரப்பில் சொன்னார்கள். அதற்குப் பிறகும், இதே சட்டசபையிலே சொன்னார்கள்—"இரண்டாவது சம்பளக் கமிஷன் மத்திய சர்க்கார் அமைத்திருக் கிறார்கள். அவர்கள் அறிக்கை வந்தவுடனே, அதை வைத்துக்கொண்டு நமக்கு இருக்கும் வசதிகளையும் வைத்துக்கொண்டு செய்யலாம்" என்று சொன்னார்கள் இறுதியாக இப்போது சொல்கிறார்கள் — "இரண்டாவது சம்பளக் கமிஷன் அறிக்கையைப் பார்த்து, இங்கே அமைக்கப்பட்ட குழு அதை பரிசீலனை செய்து, பின்னாலே அறிக்கை சமர்ப்பிக்கப்படும்" என்று இப்படிச் சொல்வது உண்மையிலேயே பிரச்னையை நேரடியாகச் சமாளிப்ப தற்கு விரும்பாமல் தள்ளிப்போடுவதாகத்தான் ஆகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் குழு அமைப்பதிலேயும் சாதா ரணமாக மத்திய அரசாங்கத்திலேயும் மற்ற பல இடங்களிலேயும் கையாளுகிற முறைக்கு மாறாக, ஒரு உயர்நீதிமன்றத்தைச் சேர்ந்த ஒரு நீதிபதியைத் தலைவராகப் போடுவதற்குப் பதிலாக, இங்கே ஒரு பிரதம செயலாளராக பணி செய்த ஒருவரைப் போடுவது, அவர் இங்கே பல காலமாக வேலை செய்த காரணத்தினாலே இங்கே இருக்கும் விருப்பு, வெறுப்புக்கும் ஆளாகி, அதனால் நியாயம் கிடைக்காதோ என்று அஞ்சுகிற என்.ஜி.ஒக் களுடைய எண்ணத்திற்கு உண்மையிலேயே நியாயம் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழுவின் தாரதம்மி யத்தை நான் குறிப்பிடுவதற்கு விரும்பாமல் இருந்தாலும், பாரபட்சம் இல்லாமல் நிலைமையை ஆராய்ந்து அரசாங்கத்திற்குத் தங்களுடைய கருத் துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்றால், உயர்நீதிமன்றத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராகப் போட்டு குழு அமைக்கப்பட்டிருக்குமானால், உண் மையாகவே நியாயம் கிடைக்கும் என்றுதான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டில் புதியதாக வரி ஒன்றும் இல்லை என்றாலும் ஏற்கனவே கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியபடி இன்னும் இரண்டு ஆண்டு களுக்கு வரி விதிக்கப்ப போவதில்லை என்று சொல்லியதை இப்பொழுது நிறைவேற்றியிருக்கிறார்கள். வரி இல்லாவிட்டாலும் சாதாரணமான பாமர மக்களுக்கு எந்த விதமான நிவாரணமும் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கவில்லை. இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் பற்றாக் குறையாக இல்லாமல் உபரி பட்ஜெட்டாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இருந்தபோதிலும், இது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் அல்ல. முதலில் வருவாயைக் குறைவாகக் காட்டிவிட்டு செலவை அதிகமாகக் காட்டிவிட்டு கடைசியில் வருவாய் அதிகமாய் வந்திருக்கிறது. செலவு இனங்கள் குறைந்திருக்கிறது. அதனால் பட்ஜெட் உபரியாக இருக்கிறது. பின்னால் பார்க்கப் போனால் சென்ற வருஷத்தில் சமர்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தை இந்த நேரத்தில் நாம் பார்க்க வேண்டியதாக இருக் கிறது. 1957-58-ம் ஆண்டு ஆரம்ப மதிப்பீடுப்படி 333 லட்சம் ரூபாய் துண்டு விழும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இப்பொழுது திருத்திய

[Sri M. P. Subramaniam] [3rd March 1959

மதிப்பீட்டின்படி ஐந்து லட்சம் ரூபாய் உபரியாக வந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஐந்து லட்சம் ரூபாய் உபரியாக ஏற்படலாம் என்று எதிர்பார்த்ததற்கு பதிலாக 341 லட்சம் ரூபாய் உபரியாக நின்றிருக்கிறது. நெய்வேலி திட்டத்தை நாம் நிறைவேற்றி வந்த காலத்தில் நாம் செலவழித்த தொகையை இப்போது நெய்வேலி லிக்னேட் கார்ப்பரேஷனுக்குக் கடன் கொடுக்கப்பட்டதாகக் கணக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதையும் தவிர்த்து 265 லட்சம் ரூபாய் உபரியாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 1958–59-ம் ஆண்டின் ஆரம்பத்தில் 135 லட்சம் ரூபாய் துண்டு விழுவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது 265 லட்சம் உபரியாக இருக்கும் எனச் சொல்லப்படுகிறது. இதைப் பார்க்கும்போது வேண்டுமென்றே வருவாயைக் குறைத்துக் காண்பித்துவிட்டுச் செலவை அதிகமாகக் காண்பித்துவிட்டு பின்னர் வருவாய் அதிகமாக வந்திருக்கிறது என்றும் செலவு குறைவாக ஆகியிருக்கிறது என்றும் சொல்லி உபரியான பட்ஜெட்டைக் காண்பிப்பது போல் தோன்றுகிறது. ஒன்று இப்படி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வருமானத்தையும் செலவையும் சரியாகக் கணிக்கும் திறமை இல்லாமல் இருந்திருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் செலவுகள் ஏராளமாக இருக்கும் காலத்தில், ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றும் காலத்தில், சமுதாய நலத் திட்டங்களை எடுத்து அமுல் நடத்தும் காலத்தில் அதிகப்படியான பணம் செலவு செய்ய வேண்டியதாக இருக்கும் நேரத்தில், பணம் இல்லை என்று கூக்குரல் இருக்கும் நேரத்தில் உபரியான பட்ஜெட்டைக் காண்பது என்பது வரவேற்கத் தக்கதாக இல்லை. இது என்னுடைய அபிப்பிராயம். இதனால் என்ன தோன்றுகிறது என்றால், கையில் பணம் இல்லை என்ற காரணத்தால் பல திட்டங்களை நிறைவேற்றாமல் கைவிடப் பட்டுவிட்டனவோ என்று கூடத் தோன்றுகிறது. மற்ற மாநிலங்களில் பற்றாக்குறை பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கும் காலத்தில் இந்த மாநிலம் உபரி பட்ஜெட்டை சமர்ப்பித்து தங்களுடைய பெருமையைக் காட்டிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆனால் உண்மையில் பார்க்கும்போது இந்தச் சந்தர்ப்பத்தில் உபரி பட்ஜெட்டை சமர்ப்பிப்பது என்பது அவ்வளவு சரியானது அல்ல என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, சொல்ல வேண்டுமானால், நமது நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் சொல்லும்போது, இந்த ஆண்டு நல்ல மழை நல்ல முறையில் பெய்யவில்லை என்றும், அதோடுகூட பயிர்களுக்கு பூச்சித் தொல்லைகள் வேறு அதிகம் எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் இவ்வாண்டு மோசம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டு, இருந்தாலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உணவு உற்பத்தி ஓரளவு அதிகமாகவும் ஆகி இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு என்ன காரணம் என்று மட்டும் அவர் குறிப்பிடவில்லை. மழை இல்லாமல், பூச்சி விழுந்தும் கூட உற்பத்தி அதிகமாக ஆகியிருப்பதன் காரணம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. எந்தக் காரணத்தினால் உபரியாக உற்பத்தி ஆகி இருக்கிறது என்பதை அவர் தன்னுடைய முடிவு உரையில் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன். கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாக எதிர்பார்க்க இருக்கும்போது அதிகப்படியாக வந்ததன் காரணம் என்ன என்பதும் தெரியவில்லை.

மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்ற காரணத்திற்கு இப்படிப் பட்ட தவறான புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. இந்த புள்ளி விவரங்களைக் கண்டு மக்கள் ஆறுதல் அடையவேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே கொடுக்கப்படக் கூடிய புள்ளி விவரங்கள் சரியல்ல என்பதைப்பற்றி இங்கே பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். புள்ளி விவரங்கள் நம்பிக்கை தரக்கூடியனவாக இல்லை. இந்தப் புள்ளி விவரங்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன, எப்படி யாரால் தயாரிக்கப்படுகின்றன என்பதைத் தயவுசெய்து நிதி அமைச்சர் தன் பின்னுரையில் குறிப்பிட வேண்டுகிறேன். தவறு இருந்தால் திருத்திசக்கொள்ளுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில்

3rd March 1959] [Sri M. P. Subramaniam]

12 லட்சம் டன் உணவு தான்யம் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

நீர்ப்பாசனத் துறையில் பரம்பிக்குளம் திட்டத்தை தவிர மற்ற பெரிய நீர்த் தேக்கத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன. அதனுடைய பலன்களை எல்லாம் ஏற்கனவேயே நாம் அடைந்துவிட்டோம். வட நாட்டிலுள்ள பல பெரிய நீர்த் தேக்கத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றுவதற்கு பெறும் செலவு செய்து அவைகளைப் பயன்படுத்தப்படவில்லை. நம் மாநிலத்தில் முழுவதுமாகப் பயன்படுத்திவருகிறோம் என்று பெருமை அடையலாம். இப்படி இருந்தும் போதிய உணவு உற்பத்தி செய்ய முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய வேண்டியதவசியமாக இருக்கிறது. உரத்திற்கும் மற்ற வகைகளிலும் நாம் எவ்வளவோ அதிகப்படியான பணம் செலவு செய்திருந்த போதிலும் உணவு உற்பத்தியை நாம் இன்னும் அதிகமாக ஆக்க முடியவில்லை. அதன் காரணமாக விலைவாசியும் குறையவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டியதாக இருக்கிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் மற்ற மாகாணங்களில் அதிகப்படியாக எக்கர் ஒன்றுக்கு 750 முதற்கொண்டு 800 பவுண்டு வரையில் சராசரி உணவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கும்போது நம்முடைய மாநிலத்தில் எக்கர் ஒன்றுக்கு 1,214 லிருந்து 1,300 பவுண்டு வரையில் அதிகமாக உணவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே அது வரவேற்கக் கூடிய விஷயம்தான். சேலம் மாவட்டத்தில் ஒருவர் ஒரு எக்கருக்கு 12 ஆயிரம் பவுண்டு நெல் உற்பத்தி செய்ததற்காக அவருடைய திறமையைப் பார்த்து ராஷ்டிரபதி அவர்கள் அவருக்கு ஒரு பரிசு வழங்கியது எனக்குத் தெரியும். இப்படி 12 ஆயிரம் பவுண்டு உற்பத்தி ஆவதற்கு அவர் எந்த முறையைக் கையாண்டார் என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அதன்படியே மற்ற இடங்களிலும் கையாண்டு ஏன் இன்னும் அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது. விவசாய இலாகாவைச் சேர்ந்தவர்கள் அந்த முறையைத் தெரிந்துகொண்டு அந்த முறையையே மற்ற இடங்களுக்கும் பரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளலாம். அதுபோலவே மற்ற எல்லா இடங்களிலும் எக்கர் ஒன்றுக்கு 12 ஆயிரம் இல்லாவிட்டாலும் ஏழாயிரம் அல்லது ஐயாயிரம் பவுண்டு வரையில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம். அப்படி செய்யப்பட முடியவில்லை என்றால் என்னக் காரணம் ?

அடுத்தபடியாக குறிப்பிடவேண்டுமென்றால், விலைவாசிகளைத் தடுக்க பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. சென்ற ஆண்டு பட்ஜெட் உரையில் விலைவாசிகளின் ஏறுமுகம், அன்னிய செலாவணிக் குறைவு இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலையைப் பாதிக்கும் பெரும் சிக்கல்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். இவ்வாண்டு விலைவாசிகளை சமாளிப்பது பெரும் பிரச்னையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாறு ஆண்டுகளாகவே உணவுப் பொருள்களின் விலைவாசிகள் ஏறுமுகமாகவே இருந்து வந்திருக்கிறது. விலை ஏற்றத்தை ஏன் தடுக்க முடியவில்லை ? அதற்கு வழிவகை ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா ? அவற்றை தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தற்போது உணவுப் பொருள்களின் மொத்த வியாபாரத்தை அரசாங்கமே எடுத்து நடத்தப்போவதாகச் சொல்லப்படுகிறது. இது விலை ஏற்றத்தைத் தடுக்கப் பயன்படும் என்ற நம்பிக்கையில் செய்ய இருக்கிறார்கள். இந்தக் கொள்கை வரவேற்கத்தக்கதாக இருந்த போதிலும் அது எந்த அளவில் செயல்பட இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். உணவு தானிய வியாபாரத்தைப் பொருத்தமட்டில் சென்னை மாநில அரசாங்கத்திற்கு ஓரளவு அனுபவம் இருக்கிறது. இதற்கு முன்பு உணவு தான்ய கொள்முதல் செய்ததில் சுமார் பத்து கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் அடைந்திருக்கிறோம். நிர்வாக யந்திரம் சரியாக இல்லை. பல சந்தர்ப்பங்களில் உணவு தானியம் கிடங்குகளில் வைத்திருந்ததில் கெட்டிருக்கிறது. போதிய தானிய கிடங்குகளும் நம்மிடத்தில் கிடையாது.

இப்பொழுது இரண்டு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப் போவதாகச் சொல்லுகிருர்கள். அவைகளை கொள்முதல் செய்து எங்கே வைக்கப்போகிருர்கள் ? எற்கனவே இதைப்பற்றியெல்லாம் கிராமங்களில் பேசப்பட்டு வருகிறது, அரிசி கொள்முதல் செய்தால் அதை எங்கே கொண்டு போய் வைக்கப்போகிருர்கள் என்று. இப்பொழுது இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் அரிசி விலை உயர்ந்து கொண்டே போகிறது. இன்னும் இ ண்டொரு மாதங்களில் மேலும் விலைவாசிகள் அதிகம் ஆகக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. ஆகவே கொள்முதல் செய்த உடனேயே நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும். பிறகு என்ன எற்படும் ? எதிர்பார்த்ததுபோல் கஷ்டமான மாதங்களில் நியாயவிலைக் கடைகளுக்கு அரிசி இருப்பு இல்லாத நிலை எற்படும். ஆதலால் அரசாங்கம் இதை எப்படி சமாளிக்க இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சமுதாய நல திட்டத்தை எடுத்துக்கொள்வோம். சமுதாய நலத்திட்டம் அகில இந்திய அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றது. இதில் செலவழியும் பணம் முழுபலனையும் அளிக்கிறதா என்பது பிரச்னை. அகில இந்திய ரீதியில் எல்லா தேசிய வளர்ச்சித் திட்டப்பகுதிகளிலும் ஒவ்வொரு விதைப் பண்ணை ஆரம்பிக்க வேண்டும் என்பது திட்டம். இவை நம் மாநிலத்திற்குப் பொருந்துமா என்பதைப் பற்றி ஆராய்வதில்லை. சரியானத் திட்டமா என்பதுபற்றி ஆராய்வதில்லை. இதனல் என்ன நடந்தது. மூந்நூற்றறுபது விதைப்பண்ணைகள் துவக்கவேண்டும் என்று சொன்ஞர்கள். அனுபவத்தில் பண்ணைகள் பல மூடப்படவேண்டிய நிலை எற்பட்டிருக்கிறது. மேலும் விதைப்பண்ணைகள் திறக்கப்படாது என இப்பொழுது அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிருர்கள். இப்பொழுதாவது உணர்ந்தார்களே அதுவே போதும்.

இத்திட்டத்தில் பணம் எவ்வாறு வீண் செலவாகிறது என்பதற்கு மற்றும் ஒரு உதா ணம் சொல்ல விரும்புகிறேன். நம்மாநிலத்தில் '**In ormal Consul ative Committee**' என்ற ஒரு குழு இருக்கிறது. இதில் பெரும்பாலும் ஆளும் கட்சியை சார்ந்தவர்கள்தான் இருக்கிருர்கள். மற்றும் அதிகாரிகள் இருக்கிருர்கள். இக்குழு பல இடங்களில் சுற்றிப்பார்த்து ஒருமுகமான ஒரு சிபார்சு செய்தது. அதாவது கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி இ ண்டு மூன்று திட்டப்பகுதிகளுக்கு (**Bl cks**) ஒருவர் இருந்தால் போதுமானது என்று. ஆனுல் இப்பொழுது ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவர் இருக்கிருர். அகில இந்திய பேட்டான் (**pattern**) என்ற முறையில் இந்த ஒருமுக சிபாரிசையும் ஆட்சியாளர்கள் எற்கவில்லை. இதனல் எவ்வளவு வீண் செலவு என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, சமுதாய நலத்திட்டம் நல்ல முறையில் செயல்படுவதற்கும் நல்ல பலன் எற்படுவதற்கும், எல்லா அ சியல் கட்சிகளும் முழு ஒத்துழைப்பு த வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. அதற்கேற்ற சூழ்நிலை அ சாங்கம் எற்படுத்தியிருக்கிறதா என்ருல் நேர்மாருகத்தான் நடைபெறுகிறது. உதாரணமாக காந்தியடிகளின் பெயரை காங்கிரஸ்கா ார்கள் தங்கள் அரசியல் லாபத்திற்காக அடிக்கடி பயன்படுத்துகிருர்கள். அதே நே த்தில் அ சாங்கக் காரியங்களிலும் பொதுக்காரியங்களிலும் அவர்களின் பெயரைப் பயன்படுத்துவதால் இவரை அரசியல்வாதியாக ஒதுக்கித் தள்ளுவதா? அல்லது ஆசியலுக்கு அப்பாற்பட்டவர் என எற்றுக்கொள்வதா ? காந்தியடிகளை அரசியலுக்குப் பயன்படுத்துவதாக இருந்தால், அரசாங்கக் காரியங்களில் இவர் பெயரை உபயோகிக்கக்கூடாது. (மணி அடிக்கப்பட்டது.) மற்றும் சமுதாய நல திட்டங்கள் நிறைவேற்றப்படுவதிலோ, விழாக்களிலோ, அதில் உள்ள குழுக்களிலோ எதிர் கட்சிக்காரர்கள் பொதுவாகவே இடம் பெறுவதில்லை. இப்படி இருந்தால் எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் எப்படி பெற முடியும் ?

Mr. SPEAKER : I have already given two more minutes to the hon. Member and still he continues to speak. What can I do? Now, Sri K. N. Palaniswami Gounder will speak.

Sri K. N. PALANISWAMI GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, மிக நல்ல முறையிலே, தெளிவாகவும், புள்ளி விவரத்துடனும், சென்னை ராஜ்யத்தை மற்ற ராஜ்யங்கள் பாராட்டக்கூடிய அளவிலும்,

3rd March 1959] [Sri K. N. Palani swami Gounder]

1959–60-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை இந்தச் சபையிலே சமர்ப்பித்த நிதியமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அதோடுகூட ஓராண்டு காலமாக நல்ல முறையிலே பணியாற்றி வரும் சபாநாயகர் அவர்களையும், நிதியமைச்சர் அவர்களையும், மற்ற எல்லா அமைச்சர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இன்றையதினம் நாம் மிகவும் முக்கியமாகத் தீர்க்கவேண்டிய பிரச்னைகள், உணவு, உடைப் பிரச்னைகள் ஆகும். உணவுப் பிரச்னை தீர நீர்த்தேக்கத் திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டும். இன்று நம் நாட்டில் உணவுப் பற்ருக்குறை அதிகமான அளவில் இருந்து வருகிறது. இந்தப் பற்ருக்குறையைத் தீர்க்க நீர்த்தேக்கத் திட்டங்கள் பலவற்றை நாம் நிறைவேற்றியாக வேண்டியிருக்கிறது. அதோடுகூட விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பெரும் அளவில் விஸ்தரிக்கவேண்டும். இப்பொழுது நாம் ஓரளவு கிராமங்களுக்கும், விவசாயத்திற்குப் பயன்படும் அளவுக்கும் மின்சாரத்தை விஸ்தரிப்பதில் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறோம் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் கோயம்புத்தூர் ஜில்லாவில் பரம்பிக்குளத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதன் காரணமாக கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள பல தாலூகாக்களுக்கு தண்ணீர் கிடைக்க வசதி ஏற்படும். குறிப்பாக, பஞ்சப் பிரதேசங்களாக இருக்கும் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம், தாராபுரம் ஆகிய பகுதிகளுக்கு அதிக அளவில் தண்ணீர் கிடைக்கும் முறையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நான்கு தாலூகாக்களும் எந்த விதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாத நிலைமையில் இன்றையதினம் இருந்து வருகிறது. இங்கிருக்கும் விவசாயிகள் எப்பொழுதும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கெல்லாம் வசதி ஏற்படக்கூடிய நிலையில் தண்ணீர் தரக்கூடிய பரம்பிக்குளத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்த சென்னை ராஜ்ய சர்க்காரையும், அதற்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தந்து உதவிய கேரள சர்க்காரையும், மத்திய சர்க்காரையும் நான் முழு மனதுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்றி, பஞ்சப் பிரதேசங்களாக இருக்கும், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம், தாராபுரம் ஆகிய தாலூகாக்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், நம்முடைய ராஜ்யமானது மற்ற ராஜ்யங்களுக்கு வழி காட்டியாக இருந்து வருகிறது என்று மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். வரப்போகும் ஆண்டில் மேலும் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க திட்டம் இடப்பட்டுள்ளதன் காரணமாக, மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை நம்முடைய ராஜ்யத்தில் 9,000 வரை உயரும் என்று நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படும் மின்சாரம் விவசாயத்திற்குப் பயன்படும் அளவுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது குந்தா திட்டம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் பூர்த்தியாகிவிட்டால் இன்னும் அதிக அளவுக்கு நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும். நெய்வேலித் திட்டம் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் நாம் மிக நல்ல முறையில் நிறைவேற்றி மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறோம் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முன்பு மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பு நகர சபைகளிடம் இருந்து வந்தது. இப்பொழுது அந்தப் பொறுப்பையும் "எலெக்ட்ரிசிடி போர்டே" எடுத்துக் கொண்டது. ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நகர சபைகளின் கையில் இந்தப் பொறுப்பு இருந்த பொழுது மின்சார விநியோகம் மிகவும் நல்ல முறையிலே நடந்து வந்தது. இப்பொழுது அந்தப் பொறுப்பு அவர்களிடம் இல்லாத காரணத்தால் மின்சாரத்தை விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, பொதுமக்களின் நன்மைக்காக இதை முன்போல நகர சபைக்கே விட்டு விட்டால் நல்லது என்று நினைக்கிறேன். சர்க்காருக்கு

[Sri K. N. Palaniswami Gounder] [3rd March 1959

இதன் மூலம் 10 சத விகிதம் லாபம் வரவேண்டும். எங்களுடைய தாலுகாக்கள் வரண்டுபோய் தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், தண்ணீர் இறைக்க மின்சாரத்தை விநியோகிப்பதோடு கொஞ்சம் குறைந்த அளவு அவர்களிடம் இருந்து அதற்காக கட்டணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் மில்களுக்கு மூன்று ஷிப்டுகளுக்கும் மின்சாரத்தை அளிக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் மூன்று ஷிப்டுகள் மில்களை ஓட்டினால்தான் அவர்களுடைய நிர்வாகச் செலவும், கொள்முதலும் கட்டுபடியாகும். ஆகவே மூன்று ஷிப்டுகளுக்கும் மின்சாரத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஹைவேஸ் ரோடுகளை எடுத்துக் கொண்டால், மற்ற ராஜ்யங்களுக்கு வழி காட்டும் முறையில் நல்ல முறையில் இயங்கி வருகிறது என்று கூறலாம். ரோடுகள், பாலங்கள் எல்லாம் மிகவும் நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

உயர்தர விதைகளைத் தயாரிப்பதற்காகப் புதிய விதைப் பண்ணைகளை திறப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் கூறி இருக்கிறார்கள். இப்பொழுது நடைபெற்று வரும் சில விதைப் பண்ணைகள் சரியான முறையில் இயங்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சி.ஏ.ஓ. சி.ஏ.எஸ். பருத்தி விதைகளை சர்க்கார் விவசாயிகள் சார்பாக வாங்கி ஆங்காங்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த விதைகளைத் தயாரித்து விநியோகிக்கும் பொறுப்பை விவசாயிகளுடைய பொறுப்பில் கொடுத்து கூட்டுறவு முறையில் பகிர்ந்து கொள்ளுவதற்கு வழி செய்தால் சர்க்கார் செலவும் மிச்சமாகும். வீண் விரயமும் தவிர்க்கப்படும்.

மேலும் விவசாயிகளுக்குத் தேவையான உரம் கொடுக்க வேண்டி இருக்கிறது. கடன் வசதி செய்து தர வேண்டியிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் கூட்டுறவு ஸ்தாபனம் சரியான முறையில் இயங்கவில்லை என்றுதான் சிலர் சொன்னார்கள். கூட்டுறவு ஸ்தாபனமானது நம்முடைய ராஜ்யத்தில் பரவலாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விவசாயிகள் கடன் படுகிறார்கள். இதன் மூலமாக அவர்கள் மூன்று நான்கு இடங்களில் கடன்படுகிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் கடன் வேண்டுமானால் 100, 200 ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. அந்த முறையில் இன்றைய தினம் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் தாசில்தார்கள் கடன் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க விவசாயிகளுக்காக பாங்குகளை கிராமங்களில் ஆரம்பிக்க வேண்டியது மிகவும் அவசியம். கடன் கொடுப்பதுகூட, இவ்வளவு ஏக்கருக்கு இவ்வளவு தொகைதான் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். நகரங்களில் வியாபாரிகளுக்குக் கடன் கொடுப்பதைப் போல, கிராமங்களில் 50 ஏக்கர் ஒருவனுக்கு இருக்கிறது என்றால் அதற்குத் தகுந்தாற்போல் அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டும். அவர்களுடைய சொத்தின் பேரில் இவ்வளவு கொடுக்கலாம் என்று நிர்ணயம் செய்து கடன் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். அந்தந்த பிர்க்காக்களில் ரூரல் பாங்குகள், ஷெட்யூல்டு பாங்குகள் ஏற்படுத்தி விவசாயிகளுக்குப் பணம் கிடைக்கும்படி செய்தால் விவசாயிகளுக்குச் சிரமம் இல்லாமல் போதிய பலன் கிடைக்கும். லஞ்சமும் ஒழியும்.

அதே போல் இன்றைய தினம் கூட்டுறவு விவசாயப் பண்ணை வரப்

12 noon. போவதாகத் தெரிகிறது. கூட்டுறவு ஸ்தாபனமே நல்ல முறையில் இயங்காதபோது இது மாத்திரம் நன்றாக இயங்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே கூட்டுறவு ஸ்தாபனத்தையே நல்ல முறையில் திருத்தி அமைத்து மக்களுக்கு பயன் ஏற்படுமாறு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக உணவு, உடை எவ்வளவு மக்களுக்கு அத்யாவசியமோ, அதுபோல வைத்திய வசதியும் அவசியம். மற்ற எல்லாத் துறையிலும் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் இத்துறையில் ஏற்படவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் டாக்டர் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். வருஷத்துக்கு

ஐநூறு, அறுநூறு பேர்கள் வைத்தியப் பட்டம் பெற்றுலும் கிராமங் களுக்குப் போவதில்லை. போக பிரியப்படவில்லை. இதற்காக வைத்தியக் கல்லூரியில் அட்மிட் பண்ணும்போதே கிராமங்களில் 5 வருஷம் சேவை செய்ய வேண்டும், சர்க்கார்கீழ் வேலை செய்ய வேண்டும் என்கிற கன்டி ஷனைப்போட்டுவிட்டால் நன்ருக இருக்கும்.

கோயம்புத்தூர் தலைமை ஆஸ்பத்திரியில் 320 படுக்கைதான் இருக் கின்றன. ஆனால் ஆயிரம் சீக்காளிகளுக்கு மேல் வழியிலும், வராந் தாவிலும், வெளியிலும்கூட படுத்திருக்கிருர்கள். திருப்பூர் தாலுக்கா Headquarters ஆஸ்பத்திரியிலும் அப்படித்தான். சீக்காளிக்குத் தகுந்தாற் போல வைத்தியர்களையும் போட வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் எளிதில் வைத்திய வசதி கிடைக்கச் செய்யவேண்டும்.

சமுதாய நலத் திட்டம் என்று எடுத்துக் கொண்டால் யானையைக் கட்டித் தீனி போடுவது போலத்தான் இருக்கிறது. செலவு அதிகம், பயன் குறைவு. செலவிடப்படும் தொகையில் 10 சத விகிதம்கூட மக்க ளுக்குப் பயன்படவில்லை.

பொதுவாக இன்றைய தினம் பொது மக்களிடத்திலே அதிருப்தி அதிக மாக ஏற்பட்டுக்கொண்டு வருவதற்குக் காரணம்—சமுதாய நலத்திட்டம் என்று அதிகமான உத்தியோகஸ்தர்களைப் போட்டு, பணத்தை செலவழித் தும், அவர்கள் எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றுவதும், இருக்கக் கூடிய வேறு இலாகா சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தைக் கூட்டிக் கொண்டே போவதைத் தவிர அவர்களிடத்திலிருந்து சரியான முறையில் வேலை வாங்காததும்தான். இப்படிப்பட்ட புகாரும், அதிருப்தியும்தான் பெருகி வருகிறது. ஆகவே சமுதாய நலத் திட்ட அமைப்பு உத்தியோகஸ் தர்களை Re-organize பண்ண வேண்டும்.

உதாரணமாக திருப்பூர் பிர்க்காவுக்கு சிப்பந்திகள் போட்டு $2\frac{1}{2}$ வருஷ மாகப்போகிறது. கனம் மின்சார அமைச்சர்கூட வந்திருந்தார்கள். எவ்விதமான அபிவிருத்தி வேலைகளும் இதுவரையில் நடைபெறவில்லை. ஆகவே சிப்பந்திகளைப் போட்டுக் கொண்டே போவதில் பயனில்லை. நல்ல முறையில் மக்களுக்கு தொண்டாற்ற—மக்களுக்கு அதிகப் பயன் ஏற்படு மாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு—நாட்டு மக்களின் சுபீட்ச வாழ்வுக்கு அடிகோல வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ள நிதி அமைச்சரைப் பாராட்டுகிறேன். நேரம் இல்லாததன் காரணமாக இத்து டன் முடித்துக்கொள்ளுகிறேன். இவ்வளவு நேரம் பேச அனுமதி தந்த சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

* **Sri A. MARIAPPAN**: கனம் சபாநாயகர் அவர்களே, 1959–60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்துள்ள நிதி அமைச்சர் அவர்களை பாராட்டி அதை வரவேற்கிறேன். அதோடு இந்த வரவு செலவுத் திட்டத்தில் கைத்தறித் தொழிலுக்காக கோரப்படும் மானியம் 126 லட்சம் ரூபாய். இதில் 81 லட்சம் ரூபாய்தான் கூட்டுறவு சங்கங்கள் விற்கும் துணிக்கு விலை வகையில் சலுகை கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1958–59-ம் ஆண்டில் ரிபேட்டுக்காக மட்டும் $1\frac{1}{2}$ கோடி செலவு செய்திருக் கிறோம். இன்னும் வெளியில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் ஆயிரக் கணக்கான பேர்களை கூட்டுறவு சங்கத்தின்கீழ் கொண்டு வருவதற்கு ஏற்பாடு நடக்கிறது. அவர்கள் எல்லோரும் சேர்ந்தால் இன்னும் அதிக மான துணி சங்கங்களின் மூலம் விற்பனை செய்ய வேண்டிவரும். ஆகவே இந்த அளவில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது. அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரிபேட் தொகையைப் பொறுத்த வரையிலும் இன்னும் 1958 எப்ரலுக்கு பிறகு கொடுக்கப்படவில்லை. அதனால் பல சங்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையிலும் ஏராளமாக பாங்கில் கடன் கிடைக்க ஏற்பாடு செய்திருப்பதனுல் நிலைமை அவ்வளவு மோசம் அடையாமல் இருந்தாலும் மற்ற ஜில்லாக் களில் ஸ்டேட் தொகை கிடைக்காது சங்கங்கள் சிரமப்படுகிறது. ஆகையால் ஸ்டேட் தொகையை உடனடியாகக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

[Sri A. Mariappan] [3rd March 1959

மற்றும் கைத்தறிக்கு ரிபேட் அகில இந்திய ரீதியில் கொடுக்கப்பட வில்லை. மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்ட செஸ் நிதியிலிருந்து மாகாண ரீதியில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இதை அகில இந்திய ரீதியில் மாற்றி அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கிளர்ச்சி செய்து வருகிறோம். இந்த தேசத்திலேயே அதிகமாக கைத்தறி நெசவாளர்கள் இருக்கக்கூடிய மாகாணம் நம்முடையது தான். அதுவும் சேலம் ஜில்லா வில் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால் கதர் போலவே கைத்தறிக்கு மாகாண ரீதியில் ரிபேட் கொடுப்பதற்குப் பதிலாக அகில இந்திய ரீதியில் கொடுப்பதற்கு மாகாண சர்க்கார் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் கீழ் வராது வெளியில் இருக்கக் கூடிய கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கை அதிகம். அவர்களுக்கு நாம் ஒன்றும் செய்யவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் ஸ்தாபன ரீதியில் செயல்படாததுதான். இருந்தாலும் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக அவர்களுக்கு தொழில் செய்வதற்கு பல உதவிகளையும், வீடு கட்டிக் கொள்வதற்கும், இதர வசதிகளைப் பெற மூலதன உதவி செய்வது நல்லது. குறிப்பாக சாயத் தொழில் அத்தியாவசியமானது. ஹைட்ரோ ஸல்பேட் முன்பு ஒரு ரூபாய் இரண்டணு, மூன்று அணுவுக்கு விற்றது. இன்றையதினம் நான்கு மடங்குக்கு மேல் உயர்ந்துவிட்டது. இறக்குமதி கட்டுப்பாடு காரணமாக $6\frac{1}{4}$ ரூபாய்க்கும் அதிகமாக விற்கிறது. இதனுல் கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கப்படுகிறது. நம்முடைய மாகாணத்தி லேயே ஹைட்ரோ சல்பேட் தயாரிக்க பலர் முன் வந்திருக்கிறார்கள். பவுண்டு 75 நயா பைசாவுக்கு இவர்கள் தயாரிக்க முடியும். இங் கேயே தயாரிக்க வசதி செய்து கொடுத்தால் அது லாபகரமாகக்கூட இருக்கும். ஆகையால் ஹைட்ரோ சல்பேட் நம் மாகாணத்திலேயே தயா ரிப்பதற்கு மாகாண சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் கடந்த 20 ஆண்டு காலமாக இல்லாத வகையில் சேலம் தாலுக்கா பருவ மழை இல்லாமல் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதைப்பற்றி நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடவில்லை. சேலம் ஜில்லாவின் வடக்குப் பகுதியில் மழை சுமாராகப் பெய்திருக்கிறது. இருந்தாலும் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுடைய நலனைக் கருதி அங்கே வரிவஜா செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ராசிபுரம், திருச்செங் கோடு, நாமக்கல் பகுதியெல்லாம் இப்படித்தான். குடிப்பதற்கு தண்ணீர் கூட அங்கே கிடையாது. அங்கு வரிவஜா செய்ய வேண்டும். ஒரு சில இடங்களில் கூட்டுறவு செங்கல் சூளை போடப்பட்டு வருகின்றன. தென்னார்க்காடு ஜில்லாவில் இதுபோன்ற சூளைகள் நன்ருக வேலை செய்து வருகின்றன. இதேமாதிரி ராமனுதபுரம் ஜில்லாவிலும் நடைபெறுகிறது. சேலம் ஜில்லாவிலும் குறிப்பாக சேலம் நகரத்தில் இம் மாதிரியான தொழில் நடைபெற வேண்டுமென்று நான் பல முறை கோரிக்கைகள் செய்து வருகிறேன். சர்க்கார் இதுவரையிலும் இதைப்பற்றி ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. சேலம் ஜில்லாவிலே நீர்ப் பாசன வசதி குறைவு அதிகமாக இருக்கிறது. மேட்டூர் அணையினுல் சேலம் ஜில்லாவிற்கு பயன் ஒன்றும் கிடையாது. நாடு விடுதலை அடைந்த பிறகு ஒரு சில பகுதிகள் மட்டும் சேலம் ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் பயன் அடைகிறார்கள். மேலும் இங்கே தொப்பை ஆற்றைப் பயன்படுத்துவதற்கு ஒரு திட்டம் ஏற்படுத்த வேண்டும். நீண்டகாலமாக இது வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்டு வருகிறார்கள். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் னிருந்து அந்த ஆற்றுக்கு ஒரு அணைக் கட்டவேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். நானும் பலமுறை இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டிற்குள் நிச்சயமாக இது சேர்க்கப்படும் என்று சில இடங்களில் உறுதிமொழி கொடுக்கப்பட்டது. தர்மபுரி தாலூக்காவிலே இருக்கும் சின்னாற்றில் ஒரு அணைகட்ட வேண்டும். ஆனுல் அந்தப் பகுதியிலே இருக்கும் மக்களிடையே பல அபிப்பிராய பேதங்கள் நிலவி வருகின்றன. அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு நாம் இதை ஒத்தி வைத்துக்

3rd March 1959] [Sri A. Mariappan]

கொண்டு போகக்கூடாது. இந்த அணை விவசாயத்திற்கு மிகவும் உபயோகமாக இருக்குமாகையால் இந்த இடத்தில் அணை கட்டுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

குறிப்பாக மின்சாரம் நல்ல முறையில் முன்னுக்கு வந்திருக்கிறது. ஒரு சில மின்சார கம்பெனிக்காரர்கள் நல்ல முறையில் விஸ்தரிக்கவில்லை. சேலம் நகரத்திற்கு அருகாமையில் இருக்கும் கிராமங்களுக்குக்கூட கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். குறிப்பாக சேலம் நகரத்தில் இருக்கும் நெசவாளர்கள் காலனிக்குக்கூட மின்சார வசதி செய்துக் கொடுக்கப்படவில்லை. ஆகவே சர்க்கார் இவர்களுக்கு கடன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மின்சாரம் விஸ்தரிக்கப் படாததற்குக் காரணம் கம்பெனிகள் நிதி இல்லை என்று சொல்லுவதுதான். ஆதலால் அரசாங்கம் கம்பெனிகளுக்கு கடன் கொடுக்க வேண்டும். அல்லது இந்தக் கம்பெனிகளை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு கூட்டுறவு மில் சேலம் ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டுமென்று நீண்ட நாளாக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். ஆனால் இதுவரையில் சர்க்காரிடம் ஊக்கமோ ஆக்கமோ காணப்படவில்லை. சேலம் ஜில்லா கைத்தறி நெசவுக்குப் பேர்போனது. அதிக நெசவாளர்களைக் கொண்ட பகுதி. ஆகவே சேலம் ஜில்லாவில் ஒரு கூட்டுறவு மில் ஏற்படுத்த மத்திய சர்க்காரை நமது சர்க்கார் வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலத்தில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது என்பதை எனக்கு முன் பேசிய ஸ்ரீ கே. எஸ். சுப்ரமணிய கவுண்டர் பேசியிருக்கிறார்கள். சேலம் ஜில்லாவானது 36 லட்சம் ஜனத்தொகை கொண்டது. ஆனால் இன்றைய தினம் கணக்கு எடுத்துப் பார்த்தால் 40 லட்சத்திற்கு மேலாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். இப்பொழுது ஒரே ஒரு கல்லூரிதான் இருந்து வருகிறது. ஜில்லா மக்கள் மூலமாகவோ சர்க்கார் உதவி செய்தோ அல்லது வேறு எந்த விதத்திலோ இன்னொரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேரி அபிவிருத்திக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 60 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு சேலம் நகரத்தை சேர்த்திருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இந்த வேலை துவங்கும் போது சேலம் நகருக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் ஆஸ்பத்திரியைப் பொருத்தமட்டில் இது மிகவும் சிறிய ஆஸ்பத்திரியாக இருக்கிறது. இரண்டு லட்சத்திற்கு அதிகமாக ஜனத்தொகை இருந்தும்கூட இங்கே சிறிய ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. இதில் படுக்கைகள் மிகக் குறைவாக இருக்கின்றன. நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்கள் படுக்கையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆஸ்பத்திரியை உடனடியாக விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்ற இரண்டு வருஷங்களாக நாங்கள் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இருந்தாலும் இந்த ஆண்டிலும் எந்தவிதமான தாமசம் ஏற்படாமல் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமீபத்தில் நடக்கும் தேர்தலைப்பற்றி சொல்லவேண்டுமானால் சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களைப் பொறுத்தவரையில் ஒரு தவரான காரியம் செய்துவருகிறார்கள். குறிப்பாக சேலம் நகரத்திலே 29-வது வார்டிலே மட்டும் 600 ஓட்டர்களுடைய பெயர்களை எடுத்து விடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்கள் உயிரோடிருந்தும் அந்தப் பகுதியிலே குடியிருந்துக்கொண்டிருந்தபோதிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர்

" அவர்கள் இங்கு இல்லே. இறந்து விட்டார்கள் " என்று சொல்லி அவர்களின் பெயர்களேயே எடுத்துவிட்டார்கள். ஆகவே அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அறுநூறு ஓட்டர்களில் பெரும்பாலான ஓட்டர்கள் ஊரில் இல்லே.

SRI P. U. SHANMUGAM : வாக்காளர் ஜாப்தாவில் 600 பேரை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நீக்கிவிட்டார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டுகிருர்கள். வாக்காளர் ஜாப்தாவிலிருந்து பெயர்களே நீக்குவது ஒரு கட்சியின் உரிமைபோல் கனம் அங்கத்தினர் கூறுவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

SRI A. MARIAPPAN : திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட ஒரு தெருவில் குடியிருப்பவர்கள் உயிரோடு இருப்பவர்களேக்கூட இறந்து விட்டார்கள் என்று எழுதியிருக்கிருர்கள். அவர்கள் தவறு செய்தால் திருத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே, நான் தவருக ஒன் றும் சொல்லவில்லே. சர்க்காருக்கு ரிகார்ட்டுகள் இருக்கின்றன, ஆதாரங் கள் இருக்கின்றன. 29-வது வார்ட்டிலே மட்டும் அல்ல மற்ற பல வட்டாரங் களிலும் இம்மாதிரி நடக்கின்றன. இதைப்பற்றி சமீபத்தில் முனிசிபல் கமிஷனரிடம் பேசினேன். யாராவது தவருக நீக்கவேண்டுமென்று எழுதி கொடுத்திருந்தாலும் அவர்களே நீக்கவேண்டிய நிலேமை ஏற்படு கிறது. ஆகவே சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று சொன்ஞர். இதைப்பற்றி டெபுடி தாசில்தாரிடமும் பேசினேன். அவரும் ஒப்புக்கொண்டார். இம்மாதிரியான போக்கிலே யார் போனுலும் சரி எந்த கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி அவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, முன்ஞல் இருக்கக்கூடிய பட்ஜட்டைப்பற்றி பலர் ஆதரித்தும் பலர் எதிர்த் தும் பேசியிருக்கிருர்கள் ஆனல் என்னேப் பொறுத்தமட்டில் இதை ஆதரிப் பதா அல்லது எதிர்ப்பதா என்று நிச்சயமாக சொல்லமுடியாத அளவிற்கு இருப்பதற்குக் காரணம் நமது நிதி அமைச்சர் அவர்கள் எனக்கு முன்ஞ லேயே மிக அழகாகவும், மிகத் திறமையாகவும் முன்னே பார்த்தால் ராவுத்தர் குதிரைபோலவும், பின்னே பார்த்தால் செட்டியார் குதிரை போலவும் அழகுபடுத்தக்கூடிய தன்மையில் இந்த பட்ஜட்டை தயார் செய்து நம் முன்ஞல் வைத்திருக்கிருர்கள். ஒரு நல்ல அழகான கட்டுரைக்குச் சமமாக இதை நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிருர்கள். இந்த பட்ஜெட் உரை ஒரு சிறந்த கட்டுரையைப்போல் இருக்கிறது. ஒரு கட்டுரைப் போட்டி வைத்தால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் பரிசு வாங்கிவிடுவார் என்று சொல்லலாம் ; ஏனென்ருல் ஒரு சிறந்த கட்டுரை மாதிரி தமது பட்ஜெட் உரையை அவர் தயாரித்திருக்கிருர்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நீங்கள் ஜட்ஜா வந்தால் எனக்குப் பரிசு கொடுப்பீர்களோ, என்னமோ ?

SRI V. K. KOTHANDARAMAN : நான் ஜட்ஜாக வந்தால் உங்களுக்குப் பரிசு கொடுக்கமாட்டேன். வேறு யாராவது ஜட்ஜாக வந்தால், ' இவர் நமது நிதி அமைச்சராக இருக்கிருரே ' என்று உங்களுக்குப் பரிசு கொடுப்பார்களோ, என்னமோ, தெரியாது.

பல ஜில்லாக்களில் பருவமழை சரியாகப் பெய்யவில்லே என்றும், பயிர்களே பூச்சிகள் அரித்துவிட்டன என்றும் குறிப்பிடப்பட்ட அதே நேரத் தில் விவசாய உற்பத்தி வருடத்திற்கு வருடம் மேலும் மேலும் பெருகி வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1957–58-ல் நெல் 56 லட்சம் ஏக்கரில் பயிராயிற்று என்றும், 1958–59-ல் அது 57.2 லட்சம் ஏக்கரில் பயிராகியிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஒரு வருஷத்தில் 1.2 லட்சம் ஏக்கரா அதிகமாகப் பயிரிடப்பட்டிருக் கிறது. அப்படியாஞல் அந்த அளவிற்கு உற்பத்தியும் பெருகியிருக்க வேண்டும். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்ருல், பருவ மழை

பெய்த்திருந்தாலும், பூச்சிகளின் தொந்தரவு அதிகரித்திருந்தாலும் விவசாய உற்பத்தி அதிகரித்திருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். ஆனால் இந்த பட்ஜெட் உரையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் எவ்வளவு தூரம் உண்மையோ, எனக்குத் தெரியாது.

மேலும், தொழில்களும் தொழிற்சாலைகளும் 1954-ல் இருந்ததை விடப் பன்மடங்கு 1957-ல் அதிகரித்திருக்கின்றன. அவை 1954-ல் இருந் ததைப் போல் கிட்டத்தட்ட 1½ மடங்காக 1957-ல் ஆகியிருக்கின்றன. அவை அவ்வளவு அதிகரித்திருக்கும்போது அந்த அளவுக்கு ஏற்ற அதிக மான தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை. அதே போல, விலைவாசிகள் 1954-ல் இருந்ததைப் போலப் பன் மடங்கு உயர்ந்திருக்கும்போது, அதற்கேற்றவாறு சம்பள உயர்வு அளிக்கப் பட்டிருக்கிறதா ? இல்லை. இது நமக்கு இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. மக்கள் என்னவெல்லாம் எதிர்பார்த்தார்களோ அவைகளையெல் லாம் அளிப்பதாக இந்த பட்ஜெட் இல்லை. இந்த பட்ஜெட், விலைவாசி உயர் வைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவோ மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடியதாகவோ இல்லை. இந்த பட்ஜெட் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாக இருக்கிறது. இந்த பட்ஜெட் அழகாக, நாசுக்காக தயாரிக்கப்பட்டு இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர இதில் வேறு எந்த நல்ல அம்சமும் இல்லை. அந்தக் காரணத்தால்தான், ஆளும் கட்சி அங்கத் தினர்களும்கூட பேசும்போது, இந்த பட்ஜெட்டை ஆரம்பத்தில் வரவேற்ப தாகக் கூறினாலும் பிறகு எத்தனையோ குற்றம் குறைகளைச் சொல்கிறார்கள். இதிலிருந்தே, இந்த பட்ஜெட் சரியாகத் தயாரிக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

என்.ஜீ.ஓ.-க்களுக்கு 5 ரூபாய் ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். அதற்குரிய 'க்ரெடிட்' கவர்னர் அவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. அது கனம் நிதி அமைச்சருக்குப் போய்ச் சேரவில்லை. ஏனென்றால் இந்த ஊதிய உயர்வு கவர்னர் அவர்களுடைய உரையில்தான் அறிவிக்கப்பட் டிருந்தது. என்.ஜீ.ஓ.-க்களுடைய சம்பளத்தை இன்னும் உயர்த்துவதற் கான சிபாரிசுகளைச் செய்யக்கூடிய கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக் கிறது. அவர்களுக்கு போதிய அளவு சம்பளம் கொடுப்பதற்கு இந்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லை. எனவே அவர்களுக்கு இந்த வருஷம் ஊதிய உயர்வு கிடைக்காது.

இந்த பட்ஜெட்டில் சுமார் 2 கோடி ரூபாய் உபரி வருகிறது என்று இந்த பட்ஜெட் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், பொதுமக்களிடம் 6 கோடி ரூபாய் கடன் எழுப்ப வேண்டி யிருக்கிறது என்றும் இன்னொரு பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிச்சப்படும் பட்ஜெட் என்றால், கடன் எதற்காக எழுப்ப வேண்டும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் இந்த இரண்டு-மூன்று வருஷங்கள் சட்ட சபையில் விவாதங்களில் கலந்து கொண் டிருந்தபோதிலும் அவர் ரெவின்யூ செலவிற்கும் காபிடல் செலவிற்குமுள்ள வித்தியாசம் தெரியாமல் இருப்பது குறித்தும் நாம் ஏன் கடன் வாங்க வேண்டியிருக்கிறது என்பது தெரியாமல் இருப்பது குறித்தும் வருத்தப்படு கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : எல்லோரும் தவறு செய்யக்கூடிய வர்கள்தான். யாரும் தெரிந்தோ தெரியாமலோ குற்றம் குறைகளுடன் பேசினாலும் மற்றவர்கள் அதைத் திருத்த வேண்டியதுதான். ஆனால் நமது கனம் நிதி அமைச்சர், அவர்களை அடித்து உட்காரவைத்து 'நான் சொல்வதுதான் கரெக்ட்' என்று சொல்வது போல் தான் எப்போதும் பேசுகிறார்.

தொழிலாளர்களுக்கோ சர்க்கார் ஊழியர்களுக்கோ சம்பள உயர்வு இந்த பட்ஜெட்டில் இல்லை. ஆனால் கனம் நிதி அமைச்சர் இந்த ஆண்டு ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். இதுவரையில், வருஷா வருஷம் விலைவாசி உயர்ந்துகொண்டே யிருக்கிறது, அதற்கான காரணத் தைக் கண்டுபிடித்து விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று

சொன்ஞல், கனம் அமைச்சர், அப்படி இல்லே என்றும், சம்பா அறுவடையில் சரியாகப் போகும் என்றும், அதில் சரியாகப் போகும் என்றும், இதில் சரியாகப் போகும் என்றும் சொல்லி சமாதானம் கூறுவார். ஆனல், இந்த ஆண்டில் கனம் நிதி அமைச்சர் விலேவாசி உயர்ந்துகொண்டே போகிறது என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிருர். இதைப் பாராட்ட வேண்டியதுதான். சர்க்கார் இத்துடன் நில்லாது விலேவாசி உயர்வுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து விலேவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் முன் வரவேண்டும். இந்தப் பிரச்னேயைச் சமாளிக்க வேண்டுமாஞல் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சர்க்கார் சொல்வது சரியல்ல. 1960-க்குள் இந்தப் பிரச்னே தீர்ந்து விடும் என்ருே, 1962-க்குள்—அடுத்த தேர்தலுக்குள்—இந்தப் பிரச்னே தீர்ந்து விடும் என்ருே சர்க்கார் கூறிஞல் அது சரியல்ல. சர்க்கார் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருந்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் என்றைக்குத்தான் நல்ல நிலேயை அடைவார்கள் ?

தொழில்கள் நன்ருக வளர்ந்து வருகின்றன என்று கனம் நிதி அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிருர். அதே நேரத்தில் எத்தனே தொழிற்சாலேகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதையும், எத்தனேயோ ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலேயில்லாமல் திண்டாடுகிருர்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலேகளே மீண்டும் திறந்து நடத்துவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி செய்கிருர்களா? கொஞ்சமும் இல்லே. குறிப்பாக, தோல் பதனிடும் தொழிற்சாலேயை எடுத்துக்கொண்டால், இந்தியாவிலேயே அந்தத் தொழிற்சாலேகளில் 90 சத விகிதம் நமது ராஜ்யத்தில்தான் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட தொழில் இன்று நம் ராஜ்யத்தில் க்ஷீணித்து வருகிறது. அதை மேலும் நல்ல நிலேக்குக் கொண்டு வருவதற்கு சர்க்கார் தரப்பிலிருந்து முயற்சி செய்யப்படுகிறதா ? இல்லே. இன்று அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் அதை நன்ருக நடத்துவதற்கு மத்திய சர்க்காரிடம் பண உதவி கேட்டாலும் அவர்களுக்கு அது அளிக்கப்படுவதில்லே. அப்படியே உதவி கொடுக்கப்பட்டிருந்தாலும், அது யாரோ ஓரிரண்டு பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கும். அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கும் பணமும் தேர்தலில் செலவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்குமே தவிர தொழிற்சாலேயை நன்ருக நடத்துவதற்குப் புயன்படுத்தப்பட்டிருக்காது. ஆகவே இந்தத் தொழிலே அபிவிருத்தி செய்ய அரசாங்கத்தார் முயற்சிக்கவில்லே. அதே போல கைத்தறி நெசவாளர்களுக்கும் சர்க்கார் சரிவர உதவவில்லே. 'கைத்தறித் துணிகளுக்கு நாங்கள் ரிபேட் கொடுத்து விட்டோம், கைத்தறியாளர்களுக்கு அதைச் செய்து விட்டோம், இதைச் செய்து விட்டோம்' என்று சர்க்கார் சொன்ஞல் அதுவெல்லாம் போதாது. கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமாஞல், கதர் அபிவிருத்தியிலும் கதர் விற்பனேயிலும் எவ்வளவு கவனம் செலுத்துகிருர்களோ அவ்வளவு கவனத்தை கைத்தறி துணியிலும் சர்க்கார் செலுத்த வேண்டும். கதர் விற்பனேயை சர்க்காரே செய்கிருர்கள். அதே போல் கைத்தறித் துணிகளே விற்பனே செய்யும் பொறுப்பையும் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால்தான் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும். இல்லாவிட்டால் இதற்காகச் செலவிடப்படும் தொகை விரயமாகத்தான் செய்யும்.

மேலும், விவசாயிகளுக்கு மிக மிக அத்தியாவசியமாக இருப்பது நீர்ப்பாசனம். உணவு தானிய விலேவாசிகளேக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லும் சர்க்கார், விவசாயிகளுக்கு சகல விவசாய சாதனங்களும் குறைந்த விலேயில் கிடைக்கச் செய்வதற்கு ஒன்றும் செய்ய வில்லே ; அந்தப் பொருள்களின் விலேவாசியைக் கட்டுப்படுத்தவில்லே.

12-30 p.m. நாம் இன்று எந்த அளவு நீர்த்தேக்கங்களேக் கட்டியிருக்கிருேமோ அந்த அளவிற்கு உற்பத்திப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இதில் பரிபூரண கவனம் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவை எடுத்துக் கொண்டால் பாலாறு என்று பெயர் இருக்கிறதே தவிர அங்கு தண்ணீர் வசதியே கிடையாது. அதே முறையில் மணல் பாங்கான இடத்தில்

3rd March 1959] [Sri V. K. Kothandaraman]

கிணறுகள் வெட்டிக் கொள்வதற்கு 2,500 ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம் என்று சொல்லும்போது, அப்படி மணல் பாங்கான இடங்கள் இருந்த போதிலும்கூட அந்த ரூபாயை வாங்கி பயன்படுத்துவதற்குள்ள நிலைமை அங்கு இல்லை. காரணம், 'பாலார் பேஸின் ரூல்ஸ்' என்ற பெயரால் ஒரு சட்டத்தை வைத்து அதன் காரணமாக சர்க்கார் உதவியை அங்குள்ள மக்கள் பெறமுடியாமல் இருக்கிறார்கள். கேரள சர்க்காரிடம் பரம்பிக்குளம் திட்டம் பற்றி சுமுகமான முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தி வெற்றிகரமான ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம் என்று சொல்லும் நிலையில் பாலாற்றில் தண்ணீர் வரக்கூடிய முறையில் ஏன் மைசூர் சர்க்காரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி அந்தப் பிரச்னையை தீர்க்க முடியவில்லை என்று கேட்கிறேன்? ஏன் ஆந்திர சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தி அங்குள்ள கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரை இங்கு கொண்டு வர முயற்சி செய்யப்படவில்லை? ஏன் மத்திய சர்க்காரை அணுகி, அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீர் கொண்டு வர முடியவில்லை என்று கேட்கிறேன்? நான் சொன்ன இடங்களிலும் காங்கிரஸ் சர்க்கார்கள் தானே இருக்கின்றன, எங்களுக்குள் ஒன்றுபட்ட மனோபாவம் இல்லை, எங்களுக்குள் ஒரு ஒப்பந்தத்திற்கு வரமுடியவில்லை என்பதையாவது நீங்கள் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக, கவனம் செலுத்தி வருகிறோம், வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்றெல்லாம் சொன்னால் போதாது. வட ஆற்காடு ஜில்லா மிக வரண்ட பிரதேசமாகும். அங்கு நீர் தேக்கங்கள் கட்டுவதற்கு வாய்ப்பு வசதியிருக்கிறது. போர்தாணு ஷண்முக அணை, செய்யார் அணை போன்ற பல அங்கு இருக்கின்றன சமீபத்தில் அங்குள்ள எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர் சர்க்காருக்கு ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இவைகளைச் செய்ய வேண்டும். அதுமாத்திரமல்ல, சிறிய நீர்ப்பாசனத்திற்காக வேண்டி எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணம் கொடுக்கிறோம் என்று மத்திய அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர் அவர்கள் சொன்னபோதிலும்கூட அந்த ஏரிகள் வெகு காலாமகவே மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. புதுப் புது ஏரிகள் கட்டுவதற்குள்ள வாய்ப்பும் வசதியும் அங்கு இருந்தபோதிலும்கூட அவைகள் கவனிக்கப்படவில்லை. அடுத்தபடியாக, மருத்துவ சாலைகள். மருத்துவ சாலைகளை எடுத்துக் கொண்டால் அங்கு டாக்டர்கள் இல்லை, என்ன செய்வது? அப்படி டாக்டர்கள் இருந்தால் அங்கு பெட்கள் இருக்காது, மருந்தும் இருக்காது. குறிப்பாக இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் குடியாத்தத்திற்கு புதிதாக கட்டப்பட்டிருக்கு ஒரு வார்டை திறந்து வைக்க வந்தார்கள். அப்பொழுது அங்கிருந்து பத்து மைல்களுக்கு அப்பால் உள்ள ஆஸ்பத்திரியிலிருந்து பெட்களைக் கொண்டு வந்து போட்டு, ஒரு ஷோ மாதிரி காண்பித்து "ஓபனிங் ஸெர்மனியை"யும் செய்து விட்டு வந்தார்கள். அங்கு படுக்கை கிடையாது. சிப்பந்திகளும் கிடையாது. டாக்டர்கள் கிடையாது. அப்படி டாக்டர் இருந்தால் மருந்து கிடையாது. இப்படிப்பட்ட நிலை இருந்தால் மக்களின்பாடு என்னவது? ஒரு பக்கத்தில் உணவு இல்லை, இன்னொரு பக்கத்தில் குடிக்க தண்ணீர் இல்லை, இந்நிலையில் வியாதியால் பீடிக்கப்பட்டு மருத்துவச்சாலைகளுக்கு வந்தால் அங்கும் மருந்து கிடையாது என்ற நிலை இருந்தால் மக்கள் எப்படி சுகமாக வாழ முடியும்? வருடா வருடம் இதே பாடத்தை ஒப்பிக்க வேண்டியிருக்கிறது. உபரி பட்ஜெட்டை காண்பித்தால் மட்டும் போதாது. சிக்கனம், சீரமைப்பு, என்று தொழிலாளர்களிடமும் மற்றவர்களிடமும் சொன்னால் மட்டும் போதாது, அப்படிச் சொல்வதற்கு முன்னதாக மதிப்பிற்குரிய அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டும், அதேபோன்று அனாவசியமாக ஏற்படுகிற செலவைக் குறைத்துக் கொள்வதின் மூலமாகவும்தான் பிறரை கட்டுப் படுத்தமுடியும். அப்பொழுதுதான் அவர்களை நாம் நம் வழிக்கு கொண்டு வர முடியும். (பெல்) இரண்டு நிமிடங்கள்கூட வேண்டும். அதேபோன்று சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களுக்காக நாம் பணம் ஒதுக்கிகிறோம். அது, நல்லதுதான். இப்பொழுது ரோடு இல்லாத கிராமங்களுக்கு ரோடு கிடையாது. மக்கள் மனம் உவந்து பணம் கொடுக்க முன் வரமாட்டேன் என்கிறார்களே, நாம் என்ன செய்வது,

அவர்களை "போர்ஸ்" செய்து வாங்க வேண்டிய நிலைதான் இருக்கிறது என்று சொன்னால் போதாது. கடன் வசதி கொடுக்கும் என்று சொன்னால் மட்டும் போதாது. ஜாயின்ட் பட்டா உள்ள ப்ளாக் ஏரியாக்களில் சர்வேயர்களைப் போடவேண்டும். தாலூகா ஒன்றுக்கு ஒருவரை போட்டுவிட்டு, அவர் அந்த தாலூகாவையும் பார்த்துக்கொள்ள வேண்டும் ப்ளாக் ஏரியாவையும் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் பத்து வருடத்திற்கு ஒரு முறைதான் முடியும். இதுபோன்ற குறைபாடுகள் எவ்வளவோ இருக்கின்றன. இது பற்றி பலமுறை எழுதியும் அனுப்பியிருக்கிறோம். ஆகவே எதிர்கட்சியினர் என்னவோ இங்கு அஸெம்பளியில் சொல்கிறார்கள், அவர்கள் சொல்வது எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற பாடத்தை மட்டும் படித்தால் போதாது. நாங்களும், ஆளும் கட்சியினர் ஏதோ சொல்கிறார்கள் மக்களை ஏமாற்றுவதற்காக வேண்டி என்று நாங்களும் நினைத்துக் கொண்டு போகக்கூடாது. நாங்கள் சொல்வதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்று பார்த்து மக்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **Dr. (Srimathi) T. S. SOUNDARAM RAMACHANDRAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பலரும் பேசுவதை கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். எந்த வரவு செலவுத் திட்டத்திலாகட்டும் அல்லது வேறு எந்தக் காரியத்திலாகட்டும் குறைகள் இருந்தாலும் நிறைவுகள் இல்லாமல் இருக்கமுடியாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தீவிரமான முறையில் 100-க்கு 110 ஆக அமுல் நடத்தி மக்களுக்கு நன்மை பயக்கும்படியாக செய்ய நடவடிக்கைகள் எடுக்கும்போது இருக்கின்ற குறைகளை இரண்டு கட்சிகளும் சொல்லவேண்டும். ஆளும் கட்சியினரும் சொல்லவேண்டும். எதிர்கட்சியினரும் சொல்லவேண்டும். சர்க்கார் கட்சியில் இருப்பவர்கள் ஆதரவு கொடுக்கிறோம் என்று சொல்லி கொண்டு குறைகளை சொல்கிறார்களே என்று இங்கு சொல்லப்பட்டது. அது அரசாங்கக் கட்சியினருடைய கண்யத்தைத்தான் எடுத்துக் காட்டுகிறது. காங்கிரஸ் மந்திரிசபை என்றிருந்தாலும் குறைகள் இருந்தால் அவைகளை நாங்கள் எடுத்துக் காட்டத்தான் செய்வோம். தனிப்பட்ட முறையில் இல்லாமல், சட்டசபையிலும் சொல்லத்தான் போகிறோம். நான் எதிர்கட்சித் தலைவர்களுக்கும், அவர்களது அனுதாபிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். நல்ல நல்ல திட்டங்கள் நிறைவேறுவதற்கு, அதிலுள்ள நல்ல அம்சங்களை எல்லோரும் ஒத்துக்கொண்டு அவைகள் நிறைவேற பரிபூர்ணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர் கட்சிக்காரர்கள், இந்த பட்ஜெட்டில் ஒன்றுமேயில்லை, தவறுகள் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொல்வது சரியல்ல. எக்காரியத்திலும் தீமையைத் தவிர நன்மையே அல்லது நல்லதே இல்லையென்று சொல்ல முடியாது. ஆகவே குறைகள் இருந்தால் இரண்டு கட்சிகளும் அதை எடுத்துச் சொல்லி அவைகளை நிவர்த்தி செய்யப் பார்க்கவேண்டும். நாட்டிலே நல்ல காரியங்கள் நடக்கவேண்டுமென்பதுதான் எல்லோருடையவும் குறிக்கோள். ஆகவே, எல்லோரும் ஒத்துழைத்து நாட்டிற்கு நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, முதன் முதலாக பட்ஜெட்டை தமிழிலே எழுதி இந்தத் தடவை கொடுத்திருப்பது மிகவும் சந்தோஷப்படவேண்டிய ஒரு காரியமாகும். இப்படி செய்யும்போதுதான் தமிழில் நாம் புதுப் புது வார்த்தைகளை புகுத்த முடியும். ஆகவே, முதல் தடவையாக இதைச் செய்ததற்கு நான் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நமக்கு சில புள்ளிவிவரங்கள் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்க்கும் போதுதான் எங்கெங்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. ஆகவே, பூசி மெழுகாதபடி புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது கண்டு நான் சந்தோஷப் படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் நமக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பாகம் தவிர இரண்டு பாகம் செலவழிக்கப்பட்டு விட்டது. இனியும் ஒரு பாகம் செலவழிக்கபடயிருக்கிறது. இதில் நாம் இரண்டு இனங்களில் மிகப் பின் தங்கியிருக்கிறோம். ஒன்று, சமூக முன்னேற்றம். சோஷியல்

3rd March 1959] [Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

வெல்பெயரில் மிக மிக குறைவாகத்தான் பணம் செலவு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார் கிராண்ட் இருப்பதால் ஜில்லாவிற்கு ஜில்லா பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான விடுதிகளைத் திறந்து அந்தப் பணத்தை செலவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கால் நடை அபிவிருத்தியில் திட்டப்படி நாம் அதிகம் பணம் செலவிட முடிய வில்லை. கால் நடை அபிவிருத்தியில், பொருளாதாரத் துறையில் கோழிப் பண்ணைகள்தான் முக்கியமான இடம் பெறுகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய கோழிப் பண்ணைகளை திறமையாக நடத்துவதுடன் அதை இன்னும் அதிகமாக விஸ்தரித்தால் நிச்சயமாக 90 சதவீதம் அந்தத் தொகை யை செலவிட முடியும். ஆகவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த இரண்டு அம்சங்களையும் நாம் தீவிரமாக்க வேண்டும் என்று சொல்வதுடன் இன்னும் சில விஷயங்களைப் பற்றியும் குறிப்பிட ஆசைப் படுகிறேன்.

ஒருவர் கேலியாகக்கூடச் சொன்னார் ஜனத்தொகையை கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்களேயொழிய, சாப்பாட்டுக்கு வழி செய்ய வில்லை என்று. இரண்டும் வேண்டியது தான். விவசாயத்துறையிலே நாம் எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம் என்பதைப் பற்றி புள்ளி விவரம் கொடுக்கும்பொழுது 1,300 பவுண்டுகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய அனுபவத்தில் இது மிகக் குறைவு என்று நினைக்கிறேன். 1,300 பவுண்டுகளுக்கு நிச்சயமாக விளைச்சல் அதிகமாக இருப்பதை நான் பல இடங்களிலே பார்த்திருக்கிறேன். சராசரி இன்னும் அதிகமாக இருக்கும் என்று தான் நான் எண்ணுகிறேன். நம் நாட்டில் உழைப்பாளிகள், நல்ல விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே இந்தப் புள்ளி விவரம் சரிதானா என்பது பற்றி பரிசீலனை செய்து சரியானபடி புள்ளி விவரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டிலே உள்ள அநேக ஆறுகளில் அணைகளைக் கட்டி நாம் நீர்ப்பாசனத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இனிமேல் கேர ளாவிலிருந்தும் ஆந்திராவிலிருந்தும் தான் தண்ணீர் கொண்டுவர வேண்டும். இன்னும் பாரதி சொன்னது போல கங்கை தண்ணீரை கொண்டு வருவதற்கு முயற்சி செய்யவேண்டிய காலம் இது. அடுத்துள்ள ராஜ்யங்களின் நீரை உபயோகப்படுத்தி நீர்ப்பாசன வசதி செய்து கொள் ளுவதற்கு முன்னால், நம்முடைய ராஜ்யத்திலுள்ள தண்ணீரை இன்னும் அதிக அளவிலே உபயோகப்படுத்துவதற்கான திட்டம் பற்றி இந்த பட்ஜெட்டிலே ஒரு வார்த்தையும் இல்லை என்பது எங்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவிலே சில சிறுசிறு திட்டங்கள் உண்டு. கடனாநதி ரிஸர்வாயர் அநேகமாக பரிசீலனை செய்யப்பட்டு முடிவடைந் திருக்கிறது. அதைப்பற்றி பட்ஜெட் பிரசங்கத்தில் ஒரு வரி இந்த வரு ஷத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருந்தால், அது விவ சாயம் செய்பவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்திருக்கும். இப் பொழுது உள்ள இரண்டுபோக நிலங்களில் ஒரு போகம் கடலை சாகுபடி செய்யப்படுகிறது. அப்படி யில்லாமல் இந்தக் கடனாநதி திட்டத்தை நிறை வேற்றினால் இரண்டு போகத்திலும் நெல் சாகுபடி செய்வதற்கு சாதகமாக இருக்கும். மேலும், மதுரையில் மாவுத்தனாறு, மஞ்சளாறு போன்ற சிறு சிறு ஆறுகளின் நீரை உபயோகப்படுத்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்ளலாம். அவைகளைப பற்றியும் திட்டவட்டமாக, பட்ஜெட்டில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இம்மாதிரி சிறிய நீர்ப்பாசான திட்டங்களைப் பற்றி பட்ஜெட்டில் திட்டவட்டமாக சொல்லப்பட்டிருந்தால் அது ஜனங்களுக்கு அதிகமான உற்சாகத்தைக் கொடுத்திருக்கும்.

பாசன வசதிகள் நமக்கு மிகக் குறைவு. ஆகையால் 30 கோடி, 40 கோடி ரூபாய் என்று பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு பணம் ஒதுக்குவது போல, சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு அதிகமாக பணம் ஒதுக்கி, " கிரவுண்டு வாட்டர் " என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்,

அதாவது பூமிக்கு அடியில் ஆழத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதை பரிசீலனை செய்யவேண்டும். திண்டுக்கல், சங்கரன் கோவில், மேலூரில் ஒரு பகுதி—மற்ற ஜில்லாக்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது ஆகிய இடங்களில் "கிரவுண்டு வாட்டர்" எவ்வளவு இருக்கிறது என்பதை (டெஸ்ட்) பரிசீலனை செய்ய, தாலூகா தோறும் ஒன்றிரண்டு போரிங் போட்டு செய்து பார்க்கவேண்டும். விவசாயிகள் இம்மாதிரி 5,000 10,000 ரூபாய் செலவழித்து போர் வெல்கள் எடுக்க வேண்டுமென்றால் முடியாது. பெரிய நீர்தேக்கங்களுக்கு சர்க்காரே கோடிக்கான ரூபாய்கள் செலவு செய்துவிட்டு, பிறகு " பெடர்மெண்டு லெவி " போட்டு மக்களிடம் வசூல் செய்கிறார்கள் அல்லது கடன் கொடுத்து வாங்குகிறார்கள். இம் மாதிரி தண்ணீர் இல்லாத பிரதேசங்களிலே 'போரிங்' கிணறுகள் வெட்டு வதற்கு ஏற்பாடு செய்தால் விவசாயம் மேலும் அபிவிருத்தியாகும். வரண்ட பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் உழைப்பாளிகள். இம்மாதிரி பெரிய அளவிலே திட்டம்போட்டு தாலூகாதோறும் ("டீப் போர் வெல்ஸ்") ஆழக்கிணறுகள் சர்க்கார் செலவிலே தோண்டி, பம்பு செட்டுகளையும் வைத்துக்கொடுக்கவேண்டும். அம்மாதிரி நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களுக்கு " பெடர்மெண்டு லெவி " போடலாம். அல்லது விவ சாயிகளுக்கு கடன் கொடுத்து 20 வருஷம், 30 வருஷத்தில் வசூல் செய்துகொள்ளலாம். பெரிய நீர்ப்பாசன திட்டங்களை அமுல் நடத்துவது போல் பெரிய அளவிலே 10 கோடி, 20 கோடி ரூபாய் பணம் ஒதுக்கி நாம் அதிகப்படியான போரிங் கிணறுகளை தோண்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்தியா பூராவும் இம்மாதிரி செய்ய ஆரம்பித்திருக்கி றார்கள் என்பதை நான் அறிவேன். அந்த அளவிலே நாம் தீவிரமான முறையிலே திட்டம்போட்டு வேலைசெய்தால்தான் விவசாயத் துறையில் நாம் அதிகப்படியான உற்பத்தியைக் காட்ட முடியும். ஆகவே, இம்மாதிரி "போரிங்" கிணறுகள் தோண்டுவதற்கு தீவிரமாக பெரிய அளவிலே திட்டம் போட்டு நிறைவேற்றவேண்டும். மந்திரி அவர்கள் பதில் சொல்லும் பொழுது இதுபற்றியும் ஆலோசனை செய்து இம்மாதிரி செய்வதாகச் சொன்னால் எங்களுக்கு சந்தோஷமாக இருக்கும். எங்களுக்கு என்று சொல்லும் பொழுது காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் என்று சொல்லவில்லை. ஜனங்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய விதத்தில் இம்மாதிரி ஒரு திட்டம் போட்டு தீவிரமாக வேலை செய்யவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

இராசயன உரத்தைப் பற்றி இரண்டுபட்ட அபிப்பிராயம் இருக்கிறது. முழுவதும் ரசாயன உரம் போட்டால் மண்வளம் குன்றிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. கம்போஸ்ட் உரத்திற்கு இப்பொழுது இதில் வெகு தீவிரமாக வேலை செய்யப்படுகிறது. இதற்காக தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். பஞ்சாயத்து, முனிசிபாலிடிகளுக்கு உற்சாகப்படுத்தி, இதற்காக மான்யம் வழங்குகிறோம். பசுந்தாள் உரத்தை பெரிய அளவிலே உற்பத்தி செய்ய எவ்வளவு ஊக்கம் கொடுக்கவேண்டுமோ அதையும் செய்துகொடுத்தால், நிச்சயமாக நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்து உற்பத்தியை பெருக்க முடியும். விவசாயத்திற்கு எவ்வளவு அதிகம் மின்சாரம் கொடுக்கவேண்டுமோ, அதற்கு வேண்டிய திட்டங்களை தீவிரமாக நிறைவேற்றவேண்டும் என்று எவ்வளவு அதிகமாக என்னுடைய சக்தி யைக் கொண்டு சொல்லமுடியுமோ அவ்வளவு அதிகமாக சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், வேறு எந்தத் திட்டமும் வெற்றி பெற வேண்டுமென்றால், உணவிலே நிறைவு வேண்டும். அதே சமயத்தில் விலைவாசிகளைப்பற்றி எல்லோரும் சொல்லுகிறபொழுது, விலை உயர்வை தடுப்பதற்கு நாம் ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும். நான் பொருளாதாரத் துறையில் நிபுணர் அல்ல. இதில் தனி நிபுணர் கள், " எகனமிக் எஸ்பெர்ட்ஸ் " இருக்கிறார்கள். இது ஒரு அகில இந்தியப் பிரச்னை என்பதையும் அறிவேன். நிச்சயமாக இதற்கு ஒரு வழி கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும். இந்த விலையை " பெக் " செய்ய வேண்டும். அதாவது ஒரு நிலையில் நிறுத்தவேண்டும். அதே சமயத்தில் உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் போதுமான

அளவு சம்பளம் கிடைக்காத முறையிலே, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு மட்டும் சாதகமாக விலை குறைந்துவிடுமோ என்றுகூட நான் சில சமயம் பயப்படுகிறேன். விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களுக்கு, உணவுப் பொருள்களாக இருந்தாலும் சரி, " காஷ் கிராப்பாக " இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஒரு விலை " காரண்டி " செய்து விலையை நிரணயம் செய்தால்தான், அந்த விலை நிரந்தரமாக இருக்க முடியும்.

அடுத்தபடியாக, இந்த வருஷம் டிசம்பர் மாதத்திற்குள் விவசாயத் தொழிலாளிகளிக்கு கூலி நிர்ணயம் செய்து ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். அது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக என்னுடைய நன்றியை கிராம விவசாயிகள், கூலிகள் சார்பாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் அதனுடைய " இம்ப்ளிகேஷன்ஸ் " என்ன என்பதை நாம் ஆலோசிக்க வேண்டும். இப்பொழுது பெண்களுக்கு 4 அணு, 6 அணுவும், ஆண்களுக்கு 9 அணு, 10 அணுவும்தான் கூலி கிடைக்கிறது. வருஷவாரியாக பார்த்தால் சில இடங்களிலே 2 ரூபாய், 2-8-0 கூலி கொடுத்தால் கூட ஆள் கிடைக்காமல் இருக்கலாம். உதாரணமாக லோயர் பவானி பிரதேசத்தில் விவசாய மக்கள் கூட போதுமான அளவு கிடையாது. ஆனால், என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் எனக்குத் தெரியும். பெண்களுக்கு 4 அணு, 6 அணுவுக்கு மேல் கூலி கிடைக்காது. அறுவடைக்கா காலத்தில் வேண்டுமானால் 8 அணு கிடைக்கலாம். 2 படி சோளம்தான் கிடைக்கிறது. ஆண்களுக்கு 9 அணு, 10 அணுவுக்கு மேல் கூலி கிடையாது. அறுவடை காலத்தில் கொஞ்சம் அதிகமாக கிடைக்கிறது. கூலி நிர்ணயம் செய்யும் பொழுது ரொம்பவும் குறைத்து நிர்ணயம் செய்யாமல், கொஞ்சம் அதிகமாகவே நிர்ணயம் செய்யவேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் கொஞ்சம் அதிகமாக பணம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கிராம மக்களின் நிலை உயர முடியும். ஆகவே, அதையும் கவனித்து கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, டாக்டர் என்ற முறையில் வைத்தியத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொது மக்களுடைய ஆரோக்கியம்தான் சர்க்காரின் குறிக்கோள். வியாதி வந்தால் சிகிச்சை செய்வது, வியாதி வராமல் தடுப்பது ஆகிய இரண்டு இலாக்காக்களையும் இணைத்து வேலை செய்தால்தான் வேலை திருப்திகரமாக நடக்கும் என்று பல வருஷங்களாக நாம் சொல்லிக்கொண்டு வருகிறோம். "போர் கமிட்டி ரிபோர்ட்டிலும் " அப்படித்தான் சொல்லப்படுகிறது. இது உலகம் முழுவதும் ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயம். " கியூரேடிவ் ", " பிரிவெண்டிவ் " ஆகிய இரண்டு டிபார்ட்மெண்டுகளும் ஒன்றாக இணைக்கப்படவேண்டும். இப்பொழுது கொஞ்சம் இணைப்பு வந்திருக்குறது. ஆனால், அது போதாது. இந்த இரண்டு டிபார்ட்மெண்டுகளும் நன்றாக வேலை செய்யக்கூடிய முறையில் இவைகளை இணைத்து மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டாக்டர்களுக்கு "ரூரல் அலவன்ஸ்" கொடுக்க முன்வந்திருப்பது பற்றி நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு தனிச் சலுகை வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் கிராமப்புறங்களுக்கு செல்லும் டாக்டர்களுக்கு நகரங்களில் இருப்பவர்கள்போல் வீட்டில் இருந்துகொண்டே அதிகம் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு இல்லை. நாட்டின் நன்மையைக் கருதி கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து வைத்தியக் கல்லூரிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அங்கே படித்து பட்டம் பெறுபவர்கள் நாட்டிற்கு சேவை செய்ய ஓரளவுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். கிராம மக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு அவர்கள் கிராமத்தில் இவ்வளவு வருஷங்கள் சேவை செய்ய வேண்டுமென்று கட்டாய படுத்தவேண்டிய அவசியம் வந்தாலும், பொதுஜன நன்மையைக் கருதி அம்மாதிரி கட்டாயப்படுத்துவதற்கு சர்க்கார் தயங்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கலாம். பிரத்தியேக அலவன்ஸ் கொடுக்கலாம். அப்படியிருந்தும் போகாவிட்டால், கிராம மக்களின் நலனை உத்தேசித்து அவர்களை கட்டாயப் படுத்துவதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran] [3rd March 1959

என்னுடைய தொகுதிக்கு பக்கத்தில் இருக்கும் திண்டுக்கல் ஆசுபத்திரியை எடுத்துக்கொண்டால் அங்கு ஒரு **Blood bank** ஏற்படுத்த வேண்டும் என்று பல தடவை சொல்லியிருந்தும் இதுவரை அதை அங்கு ஏற்படுத்தவில்லை. அங்கு 250 படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரி அவசியம். ஆகவே இந்த ஆஸ்பத்திரிக்கு இடவசதி போதாத நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றியும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்கு உடனடியாக **Blood bank** ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக குடி தண்ணீர் திட்டத்தை எடுத்துக்கொண்டால் 500 ஜனங்களுக்கு ஒரு கிணறு வீதம் இன்று ஏற்பட்டிருக்கிறதா என்று பார்தால் இல்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. சர்க்கார் இதற்கு போதிய பணம் ஒதுக்கி வைக்கிறார்கள். அதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் அதை சரியான முறையில் உபயோகப்படுத்துவதற்கு வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. காரணம் ஒரு கிணறு வெட்டுவதற்கு ஸாங்ஷன்செய்து வாங்குவதற்குள் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. தாலுகா லெவலை எடுத்துக்கொண்டாலும் சரி, ஜில்லா லெவலை எடுத்துக்கொண்டாலும் சரி, பலவிதமான கால தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நாம் என்.ஜி.ஓ. களுக்கு சாதகமாக எவ்வளவோ பேசுகிறோம். இதில் ஏற்படும் கால தாமதத்தை போக்க வேண்டுமானால் அவர்கள் நினைத்தால்தான் நடக்கும். அவர்கள் வேகமாக வேலை செய்தால்தான் நம்முடைய காரியங்கள் எல்லாம் காலதாமதம் இல்லாமல் நடைபெற முடியும். குடி தண்ணீர் திட்டத்திற்கு இரண்டாவது திட்டத்திலும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர ஹரிஜன முன்னேற்றத் திட்டத்தின் கீழும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதன் கீழ் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு 10 கிணறுகள் தோண்டுவதற்கு ஸாங்ஷன் வாங்கவேண்டுமென்றால் அதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றது என்பதை இம்மாதிரி வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு நன்றாக தெரியும். ஆகவே இந்த விதமான கஷ்டங்கள் ஏற்படாத வகையில் கிராம அளவில், அல்லது தாலுகா அளவில் ஸாங்ஷன் செய்து கொடுப்பதற்கு தகுந்த வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த திட்டங்களை எல்லாம் துரிதமாக நிறைவேற்ற முடியும். அதற்காக டிப்பார்ட்மெண்டிலுள்ளவர்கள் துரிதமாக சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கல்வியை எடுத்துக்கொண்டால், அதிலும் குறிப்பாக பெண்கள் கல்வியை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு 100-க்கு 60 பேர் பள்ளிகளுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இருந்தாலும்கூட கிராமப்புறங்களில் இன்னும் சரியான விதத்தில் எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடங்களுக்கு செல்வதில்லை. கதைக்கோ அல்லது காட்சிக்கோப் போகிறார்களே தவிர பள்ளிக்கூடத்திற்கு என்றால் போவதில்லை. ஆகவே இதற்காக ஆறாவது வகுப்பு முதல் குறைந்த செலவில் அவர்கள் ஹாஸ்டலில் தங்குவதற்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டை நாம் செய்து கொடுக்கவேண்டும். இம்மாதிரிப்பட்ட ஹாஸ்டல்களை அதிகப்படியாக ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் அதிகமான பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள். அதற்கு வேண்டிய வசதியை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகள் தாழ்ந்த வகுப்பில் சென்று படித்துவிடுகிறார்கள். மேல்படிப்பில் செல்லும்போதுதான் அவர்கள் பள்ளிகளுக்கு போவதற்கு வசதியில்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே மேல்படிப்பில் பிள்ளைகள் எல்லாம் செல்லக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகளை நாம் செய்தாகவேண்டும். இதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுத்தான் நம்முடைய கல்வி திட்டத்தை நாம் நிறைவேற்றி வைக்கமுடியும். இதில் குறை சொல்லுகிறவர்களும், நிறை சொல்லுகிறவர்களும் இந்த விஷயத்தில் பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல விதத்தில் அமைந்திருக்கக்கூடிய இந்த பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கின்ற நமது மந்திரி சபைக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

3rd March 1959]

* SRI G. GOMATHISANKARA DIKSHITAR: அன்புமிக்க உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டுக்கு நமது நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் வரவுசெலவு திட்டமானது மிகவும் போற்றத்தக்க வகையில் அமைந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதைப்பற்றி அரசியல் நோக்கத்தோடு குறை சொல்ல வேண்டுமென்ற குறை சொல்லுவதை விட்டு விட்டு, இதிலுள்ள நல்ல அம்சங்களை உண்மையாகவே எடுத்துக்கூறி, குறைகள் இருந்தால் அவைகளை போக்குவதற்கு வகைகளையும் எடுத்துக் கூறுவதுதான் நியாயமாக இருக்கும். அவ்விதம் கூறினால் தான் எதிர்கட்சிகள் ஆக்க வேலையில் நல்ல முறையில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். நமக்கு வேண்டியது நம்முடைய நாட்டு மக்கள் எல்லாம் முன்னேற வேண்டும் என்பதுதான். அதல்லாமல் நாம் இந்த வரவு செலவு திட்டத்தை வெறும் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்ப்போமானால் நாம் முன்னேற முடியாது. இந்த வரவு செலவு திட்டத்தில் கிராம மக்கள் முன்னேற்றமடைவதற்கான முறையில் பல திட்டங்கள் இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. சில குறைகள் இருக்கலாம், அதை நீக்குவதற்கு நாம் முயற்சிக்கவேண்டும். அது நம்முடைய கடமை. அதையெல்லாம் விட்டு விட்டு இந்த வரவு செலவு திட்டம் அடியோடு ஆளும் கட்சியினரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்வது நல்லதல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். துரதிருஷ்டவசமாக இந்த பட்ஜெட் வருஷத்தில் பருவ மழை சில இடங்களில் சரியாக பெய்யாததின் காரணமாக பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் பல பகுதிகளும், ரரமநாதபுரம் ஜில்லாவில் பல பகுதிகளும் பருவ மழை இல்லாததின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன, அதன் காரணமாக அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்கம் அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு போதிய உதவி செய்துகொடுக்க வேண்டும். இதில் அரசாங்கம் உஷாராக இருந்து எல்லா விதமான ஆக்கவேலைகளையும் நடவடிக்கைகளையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இந்த பட்ஜெட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்த முறையில் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வரி வஜா செய்து கொடுப்பதின் மூலமாகவும், பல சிறிய தொழில்களை ஆரம்பித்து அவர்களுக்கு பல உதவிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகிறது. நம்முடைய திட்டங்கள் எல்லாம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால், விலைவாசிகள் எல்லாம் குறையவேண்டும். இன்றுள்ள விலைவாசிகள் பார்த்தால் மிகவும் கவலை தரக்கூடிய நிலையில் இருந்து வருகிறது. இப்போது நமது அரசாங்கம் உணவுப் பொருட்களுக்கு விலையை கட்டுப்படுத்துவதற்கு எடுத்து கொண்ட முயர்ச்சியைப்போல் மற்ற பண்டங்களுக்கும் விலையை கட்டுப்படுத்துவதற்கு ஜரூராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நமது நாட்டிலுள்ள விவசாய முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால் விதைப்பண்ணைகளை ஏற்படுத்துவது, பல நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவது, இவைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். இதற்காக அதிகமாக தொகையும் ஒதுக்கியிருக்கிறோம். நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் முக்கியமாக திருநெல்வேலி ஜில்லாவைப்பொறுத்த வரையில் கனம் சகோதரி சௌந்திரம் ராமசந்திரன் அவர்கள் குறிப்பிட்டது போல் கடனாநதி அணைத்திட்டத்தை நிறைவேற்றிவிட்டால் அங்குள்ள மக்களுக்கு மிகுந்த பலனை கொடுக்கக்கூடியதாக இருக்கும். திருநெல்வேலி ஜில்லாவில் இதன் மூலமாக நான்குநேரி தாலூகாவில் ஒரு பாகமும், கோவில்பட்டி, சங்கரன்கோயில் முதலிய பகுதிகள் நீங்கலாக இதனால் பயன் ஏற்படும். அதோடு அம்பாசமுத்திரம் பகுதிக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய நீர்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரி எந்த முறையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறதோ அதே முறையில் திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரவருணி அமைந்திருக்கிறது, அதோடு மணிமுத்தாறு அணை கட்டப்பட்டிருக்கிறது. அதன் மூலம் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதோடு

[Sri G. Gomathisankara Dikshitar] [3rd March 1959

பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை சமுதாயநலத்திட்டத்தின் கீழும், லோக்கல் டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழும் நடத்தி வருகிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் முன்னேற்றகரமான முறையில் நடந்தும் விலைவாசிகள் எல்லாம் ஏறிக்கொண்டேயிருக்கிறது. இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருந்தால் ப்ளாக் மார்க்கெட்டில் சாமான்கள் எல்லாம் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இதை கட்டுப்படுத்துவதற்குவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் ஜரூராக எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1-00 p.m. அடுத்தபடியாக இந்தப் பிண்ணாக்கு—நிலக்கடலைப் பிண்ணாக்கு—முன்பெல்லாம் 3 ரூபாய், 4 ரூபாய் 5 ரூபாய் ஒரு சாக்கு என்றிருந்தது இப்போது 26 ரூபாயாக விலை ஏறியிருக்கிறது. உரத்தின் விலை இவ்வளவு அதிகமாக ஏறியிருந்தால் அதனால் விவசாயிகள் எவ்வளவு செலவழிக்க வேண்டியிருக்கிறது, அதனால் அவர்கள் எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் கவனித்து நியாமான நிலையில் அவர்களுக்குக் கிடைக்க அரசாங்கம் நன்குகவனித்து உரத்தின் விலையை ஏற விடாதபடி சட்டபூர்வமாகத் தடுத்து, விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும், விவசாயம் அபிவிருத்தியடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய பெரிய தொழில்களும் நடுத்தர தொழில்களும் நன்கு வளர இந்த வரவு செலவு திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கிறது. குடிசைத்தொழில்களும் நன்கு வளர்ந்து வருகிறது. அதோடு கதர் அபிவிருத்திக்கு இதிலே 3 லட்சம் தொழிலாளர்கள்—ஏழை கிராமவாசிகள்—ஈடுபட்டு வேலை செய்ய, ராட்டை சுற்றுவதன் மூலமாக நலம் பெறுகிறார்கள் என்றால், கதர் அபிவிருத்தி எந்த அளவில் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கிறது என்று பார்த்தால், கிராம மக்கள், குடிசைகளில் வாழக்கூடிய ஏழை மக்கள் வேலை இல்லாமல் திண்டாடக்கூடிய மக்கள் வாழ்க்கையில் முன்னேற இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அதிகமாக ஒதுக்கியிருப்பதைப் பற்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். சர்க்கார் கதர் இலாகா மூலமாகவும் சர்வ சேவா சங்கம் மூலமாகவும், சோஷியல் சர்வீஸ் மூலமாகவும் லட்சக் கணக்கான மக்கள்—கிராமவாசிகள்—நூல் நூற்று, கதர் நெய்து அதன் மூலமாக தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெறுகிறார்கள். அது மட்டுமல்ல, கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அம்பர் சர்க்காவை எங்கு பார்த்தாலும் பரப்ப, முக்கியமாக பெண்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர இந்தத் திட்டத்திலே பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. எடுக்கக்கூடிய நடவடிக்கை மிக வேகமாக—கிராம மக்களின் ஏழ்மையைப் போக்க அவர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்க—அவர்களுடைய கஷ்டம் நீங்க—அவர்களுடைய வாழ்க்கையில் சிறிதளவாவது முன்னேற்றம் ஏற்பட—ஜீவாதாரமான இந்தத் ராட்டை தொழிலை—காந்திஜி அளித்த அமிர்தமயமான தொழிலை, அதிகமாகப் பெண்களுக்கு அளிக்க, நடவடிக்கைகளை எடுத்துதவ இதிலே நமது அரசாங்கம் நன்கு கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால் நமது அகில இந்தியா குடிசைத் தொழில் போர்டில் இந்த அம்பர் சர்க்காப் பயிற்சி கொடுப்பதற்கு கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் அதிகமாக அம்பர் சர்க்காவை அளித்து அம்பர் சர்க்கா பயிற்சி கொடுக்க—கிராமந்தோறும் பிரசாரகர்களை ஏற்படுத்தி, இது கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியாக இருப்பதால் இதை நன்கு பரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எந்த ராஜ்யத்தையும் விட நமது ராஜ்யத்தில் மின்சாரத்தின் மூலமாக எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம் என்று கண்டு நம் மிக மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாண்டில் மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை சுமார் 9,000 வரை உயரப் போகிறது. குடிசைத் தொழில்கள், விவசாயம் முதலியவைகளுக்கு மின்சாரத்தை எவ்வளவு கிராம மக்கள் உபயோகிக்கிறார்களோ அந்த அளவு பொருளாதாரத்தில் முன்னேறியிருக்கிறோம் என்று நமது மின்சார இலாகா எடுத்துக் காட்டியிருப்பதை பார்த்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டியதுதான்.

3rd March 1959] [Sri G. Gomathisankara Dikshitar]

இதைப்போல பல-பல அம்சங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே தென்படுகிறது. இவைகளையெல்லாம் நாம் கவனத்தில் கொண்டு, அரசியல் கட்சிகளின் நிறத்தை இதில் புகுத்திவிடாது, தேசீய பற்றுதலோடு-மக்களுடைய க்ஷேமநலத்தை மட்டும் கவனத்தில் கொண்டு-உள்ள குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துரைத்து, அதன் மூலமாக மக்கள் முன்னேற அரசியல் கட்சியினர் அனைவரும் ஒற்றுமையுடன் வேண்டியவற்றைச் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஹரிஜன முன்னேற்றத்தில், ஹரிஜனங்களுக்கு நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதில் மிக ஆமை வேகமாக ரெவின்யூ இலாகாவில், கிராமக் கர்ணங்கள், மற்ற சிறு அதிகாரிகள், உடனடியாகக் கிடைக்க முடியாதபடி, பழைய முறையிலேயே, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடைபெற்ற முறையிலேயே சிவப்பு நாடா தன்மையிலேயே இன்னும் வேலை செய்து வருகிறார்கள். அதன் மூலமாக ஹரிஜனங்களுக்கு நிலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (உதவி சபாநாயகர்: உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது). ஆகையால் இந்த விஷயத்தில் அரசாங்கம் நன்கு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். அதே மாதிரி கூட்டுறவிலேயும் நாம் முன்னேறி நன்மை பெறக் கடமைப் பட்டிருக்கிறோம். கூட்டுறவுச் சட்டத்திலே இப்போது இருக்கின்ற நிலைமையில் மிக மோசமாக அம்சங்கள் சில இருக்கின்றன. இப்போது கூட்டுறவுச் சட்டம் இருக்கும் தன்மையில் நாம் நன்கு முன்னேற முடியாது. ஜீவாதாரமாக இருக்கக் கூடிய கூட்டுறவிலே பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தி அதன் மூலமாக மக்கள் முன்னேற ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வரவு-செலவுத் திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வரவு-செலவுத் திட்டம்தான் என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

Sri P. K. MOOKIAH THEVAR: தலைவர் அவர்களே, கடந்த காலத்திய வரவு-செலவுத் திட்டங்களைக் காட்டிலும் மேம்பட்டதாக—புகழக்கூடியதாக—இந்த வருஷம் வரவு-செலவுத் திட்டம் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் ஒரு வரவு-செலவுத் திட்டம் வரி போடுவதாக இருந்தாலும் அல்லது உபரியாகத் தோன்றும்படி இருந்தாலும் மக்களால்—வரி கொடுக்கக்கூடியவர்களால்—மக்கள் பிரதிநிதிகளால்—என்ன நினைக்கப்படுகிறது, கடந்த காலத்திய வரி விதிப்பின் மூலம் நாம் அடைந்துள்ள சாதனைகள் என்ன, மக்களுக்குக் கிடைத்தது என்ன என்று அவர்களுடைய அன்றாட அனுபவத்தைப் பார்த்துத்தான் சொல்ல முடியும். "வரி" என்ற வார்த்தைக்குப் பதிலாக "உபரி" என்ற வார்த்தை மாறியிருப்பதாகப் பார்க்கிறதைத் தவிர, வேறு முன்னேற்றம் இல்லை. இவர்களுடைய முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்று பார்த்தால், இமயமலையின் சிகரங்களை எப்படிப் பிடிக்கப் போகிறோம் என்று சொல்லி 50 அடி, 100 அடி என்று காம்ப்களை மாற்றிப் போட்டுக் கொண்டு முன்னேறி விட்டோம் என்று பேசிக் கொண்டே போவார்கள். பனி நன்றாக மூடியபோது 100 அடி கீழேயே வந்து விடுவார்கள். இப்படி முன்னேற்றம் என்ற பெயரால் பின்னேற்றம் அதிகமாக இருக்கிற காரணத்தினால் நாட்டில் பஞ்சம், பிணி, கஷ்டம் ஏற்பட்டு, வரி விதிப்பு, கடன் என்ற பெயரால் கஷ்டம் ஏற்பட்டு இருப்பதைப் பார்க்கும்போது இந்த பட்ஜெட்டினால் நமக்கு முன்னேற்றம் இல்லை, பின்னேற்றம் தான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

அதோடு இன்று இருக்கிற வரி விதிப்பில் மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் ஒன்று செய்திருக்கிறார்கள். கடந்த 10, 12 ஆண்டுகளாகப் பட்ஜெட் என்றால் என்னென்ன வரி விதிப்பு இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்களுக்கு கண் துடைப்பாக, நாங்கள் வரியைப் போட்டு விடுகிறோம். நீங்கள் விட்டுவிடுங்கள் என்று ஏற்பாடு செய்து கொண்டுள்ளதாக தெரிகிறது.

[Sri P. K. Mookiah Thevar] [3rd March 1959

இன்றைக்கு வெற்றிலை-பாக்குக் கடைக்குப் போனால் வாழைப் பழத்தின் விலை உயர்ந்து விட்டது. சாதாரண மக்கள் சாப்பிடக் கூடிய பழம் வாழைப்பழம். வெளி நாட்டினர்கள் கூட "King of fruits" என்று வாழைப்பழத்தை, ஒரு பழத்திற்கு 4 அணா கொடுத்து வாங்கி சாப்பிடுகிறார்கள். அதிலே சகல சத்துக்களும் இருக்கின்றன. ஏழைகளுக்கு நாட்டு வாழை நல்ல உணவாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்குக் கூட ஒரு வரி வருமானால்—பாதிப்பு ஏற்பட்டால்—நாம் எப்படி மக்களை வாழ வைக்கப் போகிறோம் என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்த வரவு-செலவு திட்டத்திலே அரசாங்கக் காரியதரிசிகளின் திறமையை யெல்லாம் சொல்லிக் காட்டியிருக்கிறார்கள். இப்படி உபரியான பட்ஜெட் தயாரிப்பதில் அவர்கள் உதவி செய்துள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு ஊரில் ஒரு திருவிழாவென்றால் அங்கேயுள்ள பெரியவர்கள் கிராம மக்களிடம் வரி போட்டு வசூல் செய்வார்கள்.

ஆயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய இடத்தில் ஐயாயிரம் ரூபாய் வசூல் செய்து வகை தொகை இல்லாமல் செலவு செய்துவிட்டு, கடைசியில் ஐந்தாறு ரூபாய் மிச்சம் என்று கணக்குக் காட்டுவார்கள். அந்த முறையில் இங்கே ஏதோ மிச்சம் என்று காட்டப்படுகிறது. வகைமுறை இல்லாமல் கணக்குக் காட்டியிருப்பதைப் பார்க்கும்போது ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது என்று துக்கத்தோடு சொல்கிறேன்.

1957–58-ல் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு முதலில் 5 லட்சம் என்று இருப்பதை மூன்று கோடி சொச்சத்திற்கு அவர்கள் மதிப்பிடுகின்றது திறமைக்கு மீறி நிற்கிறது. சாதாரண நபர் கூட செய்துவிடக்கூடியதை, பரம்பரையாக, வெள்ளைக்காரர் காலத்திலிருந்து இந்த மதிப்பீடு போடுகின்றவர்களுக்குக் கட்டுப்படாத முறையில் லட்சக்கணக்கிலிருந்து கோடிக் கணக்கிற்குப் போகும் அளவுக்கு நிற்கிறது. இதை நினைக்கும்போது எந்த அளவு கண்துடைப்பாக இருக்கிறது என்று பார்க்கவேண்டும்.

அதுபோல், இந்த பட்ஜெட்டில் உபரி என்னும்போது, கடந்த ஆண்டுகளில் வரி அத்தனையையும் போட்டுவிட்டார்கள். வரி விதிக்கும் சாதனம் அத்தனையும் மத்திய அரசாங்கத்திற்கு அமைந்திருக்கின்றன. ஆகையால் மாகாண அரசாங்கம் வரி போட முடியவில்லை ; போட வாய்ப்பு இல்லை. தாங்கமுடியாத அளவுக்கு வரிகளை இவர்கள் ஏற்கனவே போட்டுவிட்டார்கள். அதனால், இப்பொழுது வரி போடவில்லை. அவ்வளவுதான். இராமனாதபுரம், மதுரை ஜில்லாக்கள் போன்ற இடங்களில் பஞ்ச நிலைமை வந்திருக்கிறது. அந்தப் பகுதிகளில் சில வரி விலக்குகள் (ரிலாக்ஸேஷன்) கொடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். அழியக்கூடிய, சீக்கிரம் கெட்டு போகக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு கொடுக்கக் கூடிய சலுகை அளிப்பதற்குப் பதிலாக, அவைகளுக்கும் வரி விதிக்கும் போது எப்படித்தான் மக்கள் முன்னேற முடியும் ? எப்படித்தான் மக்கள் மிச்சம் வைத்து, முதலீட்டுகளைப் பரப்பி செல்ல நிலைமையைப் பெருக்கி, அதன்மூலம் நாட்டை முன்னேற்ற முடியும் என்று தெரியாமல் மக்கள் இருக்கிறார்கள் என்பதை மிக வருத்தத்தோடு நான் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

கிராமங்களில் என்ன கொடுமையைப் பார்க்கிறோம் ? வரியினின்றும் விலக்கு கொடுப்பதற்குப் பதிலாக, ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பணம் சேகரிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு சிறுசேமிப்பு நிதிக்குப் பணம் வசூலிக்கிற காட்சியைப் பார்க்கும் போது வெள்ளைக்காரர் காலத்தில் யுத்த நிதிக்குப் பணம் வசூலித்த கொடுமை ஞாபகத்திற்கு வருகிறது. அம் மாதிரி காரியம் நடக்கிறது. சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் உதாரணத்திற்காக இங்கே குறிப்பிடுகின்றேன்.

ஒரு நபர்மீது கேஸ் போட்டு போலீஸ்காரர்கள் பிடித்துச் சென்று விட்டார்கள். அந்த நபருக்கு ஜாமீன் கொடுப்பதற்காக இன்னொரு நபர் மாஜிஸ்ட்ரேட் முன் கையெழுத்து போட்டார். முறைப்படி, கிரமமாக

3rd March 1959] [Sri P. K. Mookiah Thevar]

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மற்றும் அத்தனைபேரும் ஒத்துக்கொண்டு, அந்த நபர் ஜாமீன் கொடுப்பதற்குத் தகுதி உள்ளவர் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார். தாசில்தாரும் கையெழுத்துப் போட்டுவிட்டார். அந்த நபர் கையெழுத்துப் போட்ட பிறகு, அவரைப் பார்த்து "நீங்கள் சிறு சேமிப்புக்குப் பணம் கொடுத்திருக்கிறீரா ? இல்லையா" என்று கேட்க, அவர் "இல்லை" என்று பதில் கொடுத்தவுடன், அவர் கையெழுத்துப் போட்ட காகிதத்தைக் கிழித்து, அவர் ஜாமீன் செல்லாது என்று தூக்கி எறியப்பட்டு, பின்னர் வேறு ஒருவரை—சிறு சேமிப்பு நிதிக்குப் பணம் கொடுத்த ஒருவரை—தேடிக் கொண்டுபோய், அவரை அழைத்துவந்து ஜாமீன் பாரத்தில் கையெழுத்துப் போடவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதென்றால், எந்த அளவுக்குக் கொடுமை இருக்கிறதென்பதையும், எந்த அளவுக்குத் தனிப்பட்டவர் சுதந்திரம் பாதிக்கப்படுகிறதென்பதையும் கவனிக்கவேண்டும். நாம் இந்த நிலைமையில் இருக்கிறோம். சிறு சேமிப்புத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லிக்கொண்டு இப்படியெல்லாம் செய்வதால் மக்களுக்கு எந்த அளவு பாதகம் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் தெரிந்துகொண்டு, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விலைவாசி உயர்வு, விலைவாசி உயர்வினால் வாழ்க்கைச் செலவு உயர்வு, அத்தனையையும் பார்க்கும்போது, அத்துடன் நிலப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சட்டம் வரப்போகிறது, அதற்காக தீர்மானங்கள் போட்டுவிட்டோம் we are moving towards Socialism என்று ஆளும் கட்சியினர் செய்துகொண்டிருக்கிற விளம்பரம் பெரிதாக இருக்கிறதே தவிர, வகை தொகை ஒன்றும் காணோம். பெரிய நிலப்பிரபுக்கள் கறம்பான நிலங்களை மட்டும் மிச்சம் வைத்துக்கொண்டு, பாக்கியிருப்பதை சொந்தக்காரர்களுக்கு எழுதி வைத்துவிடுவது போன்ற காரியங்கள் அத்தனையும் நடந்துவிட்டன. கடைசி நேரத்தில் என்ன இருக்கப்போகிறதோ தெரியவில்லை. இப்படியும் நடந்துவிட்ட பிறகு கொஞ்ச நஞ்சம் இருக்கும் நிலங்களையும் நிலச் சீர் திருத்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவதிலும் சிலர் தகராறு செய்கிறார்கள். நேரு போன்றவர்கள் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி பேசினாலும் காங்கிரஸ் கட்சியிலேயே ஆண்டி-ஸோஷியல் எலிமெண்ட்டுகள் இருந்துகொண்டு எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படியாக, இவர்கள் ஏதோ விளம்பரம் செய்வதுதான் பெரிதாக இருக்கிறதே தவிர, காரியத்தில் ஒன்றும் இல்லாமலிருக்கிறது. கிராமங்களில் உள்ளவர்கள், ஏதோ நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும், தங்களுக்கு பயிரிட ஏதோ நிலம் கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருக்கும் சமயத்தில், இம்மாதிரி சட்டம் வரும் வரும் என்று சொல்லிக்கொண்டு, அது வராத நிலை நீடித்துக்கொண்டிருக்கும் நிலையில், நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவர்கள்கூட உற்பத்தியைப் பெருக்காமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் எப்படி மக்கள் உற்சாகத்தோடு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்வருவார்கள் ? ஏழை மக்களைக் காப்பாற்றப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருப்பது அரசியலுக்காகவும் கொள்கைக்காகவும் இருக்கிறதே தவிர, காரியத்தில் நடைபெறாததனால், அவர்களைப் பல விதத்தில் பாதித்து நிற்கிறது.

வரி விதிப்பைப்பற்றிச் சொல்கிறபோது,

'In order to tempt people to save and invest, the Government sacrifices a certain amount of revenue for the present but if the temptation succeeds and the people invest profitably, then not only is the national income increased but the Government itself gets very much larger revenue in future.'

என்று சமீபத்தில் சொல்லப்பட்டது. மக்களின் சாத்தியக் கூறுகள், அவர்கள் முதலீடுகள், அவர்கள் செல்வக் கொழிப்புகள் வருவதற்கு இம்மாதிரி திட்டங்கள், நிலத்திற்கு உச்ச வரம்பு விதிப்பது போன்ற பல திட்டங்கள் அமைகின்றன என்று சொல்கிறார்கள். அந்த அளவு சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நாம் அந்த அளவுக்கு பொருளாதா

ரத்தையோ, முதலீட்டையோ, செல்வக்கொழிப்பையோ பெருக்குவதற்கு மக்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறோம் என்று பார்த்தால், இல்லாத நிலைமையில் ஐந்தாண்டுத் திட்டத்தை முன்னால் நிறுத்துகிறோம்.

ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி சற்று முன்னால் பேசிய அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் திட்டத்தைப் பற்றிப் புகழ்வதைக் காணோம், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் குற்றங் குறைகளையே எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று. அது போன்று அரசாங்கத்தினுடைய குற்றங்குறைகளை எதிர்க் கட்சியினர் எடுத்துச் சொல்வது, நாங்கள் வந்தால் திட்டத்தை எப்படி நடத்துவோம் என்பதற் காகத்தான். எதிர்க்கட்சிகளும் புகழச்சியாகப் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்றால், குற்றங்குறைகளை யார் எடுத்துக்காட்டுவது ? புகழ்ச்சி யாகவே பேசிக்கொண்டிருக்க ஆட்கள் இருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வியை அந்த பட்ஜெட்டிலேயே மந்திரி அவர்கள குறிப் பிடுகிறார்கள். " நீங்கள் ஒத்துழைககவேணடும் " எனறு அவாகள் கேட்டுக்கொள்வதிலிருந்து இன்று சகல கட்சிகளும் தேசீயப் பிரச்னை யாகக் கருதி அவர்களுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள் என்றால், இப்படி எப்பொழுது சொல்லவேண்டும் ? நாட்டுக்கு இப் பொழுது என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கிறது ? பொதுவான ஆபத்து என்ன ஏற்பட்டிருக்கிறது ? வெளிநாட்டினால் நமக்கு யுத்த ஆபத்து ஏதாவது ஏற்பட்டுவிட்டதா என்ன ? அப்படியொன்றும் இல்லாது இருக்க, இன்றைக்கு இதைத் தேசீயப் பிரச்னையாகக் கருதவேண்டுமென்று அவர்கள் சொல்வானேன். இந்த நாட்டில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும், திட்டங் களை நிறைவேற்றவேண்டும், அதற்கு எதிர்க் கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும் என்று ஆளும் கட்சியினர் இப்பொழுது கேட்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டங்களைத் தயாரிக்கும்போது எதிர்க்கட்சிகளை எந்த அளவுக்கு இவர்கள் பங்குகொள்ள வாய்ப்பு கொடுத்தார்கள் என்று நான் இவர்களைக் கேட் கிறேன். " ஒத்துழையுங்கள் " " ஒத்துழையுங்கள் " என்று இவர்கள் இப்பொழுது கேட்பது எப்படியிருக்கிறதென்றால், இவர்கள் ஏதோ அத்தனை யையும் முடித்துவிட்டு, கடைசி நேரத்தில் ஒப்பாரி வைப்பதாக இருக்கிறது. ஒரு ஆள் உயிருடன் இருக்கும்போது ஒருவரையும் கூப்பிடாமல், அந்த நபர் செத்த பிறகு பங்காளிகளையெல்லாம் கூப்பிடுவதைப்போல், திட்டங் களைத் தயாரிக்கும்போது எதிர்க்கட்சிகளுடைய ஒத்துழைப்பைக் கோராமல், இந்தத் தருணத்தில் ஒத்துழைப்பைக் கோருகிறார்கள். எதிர்க்கட்சிகளுக்கு தகுந்த சந்தர்ப்பம் இவர்கள் கொடுப்பதில்லை.

கடந்த காலத்தில் என்ன ஆயிருக்கிறது ? முதல் ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவாயிருக்கிறது. இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். லோகல் டெவலப்மெண்டுத் திட்டத்திற்கும் அரசாங்கம் நிறையப் பணம் செலவழித்திருக்கிறது. ஏறக்குறைய ஆறாயிரம் கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்தாலும் செலவழித்த பணத்திற்குத் தக்கபடி பலன் காணப்படவில்லை. எந்த அளவு உத்தி யோகங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவு பொருளா தாரமோ, முதலீடுகளோ பெருகி இருக்கிறது, வாழ்க்கைத்தரம் உயர்ந் திருக்கிறது என்பதையெல்லாம் பார்க்கும்போது செலவழித்த தொகை க்கும், செய்திருக்கும் காரியத்திற்கும் சம்பந்தமில்லாமலும், முன் னேற்றம் காணாத முறையிலும் இருப்பதால், " திட்டம் தோல்வியடைந்து விட்டது எதிர்க்கட்சிகள் எல்லோரும் ஒத்துழைத்து திட்டம் வகுக்க வேண்டும், இதை தேசீயப் பிரச்னையாக கருதவேண்டும் " என்று ஆளும் கட்சியினர் கேட்டால், அப்பொழுது நாங்கள் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அப்படிச்செய்யாமல், அவர்களே திட்டம் போட்டுக்கொண்டு ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டு, பின்னால் ஒத்துழையுங்கள் என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. விளம்பரத்திற்காகத்தான் கேட்பதாக இருக்கிறது.

3rd March 1959] [Sri P. K. Mookiah Thevar]

இந்த பட்ஜெட் மாமூலான முறையில்தான் இருக்கிறது. வெள்ளைக்காரர் காலத்தில் தயாரிக்கப்பட்டது மாதிரியே இருக்கிறது. வருஷா வருஷம் வரி விதிப்பதற்குப் பதிலாக இந்த வருஷம் உபரியாக இருக்கிறது. வேறு ஒன்றும் காணவில்லை. இம்மாதிரி திட்டத்தால் எந்தவிதமான பலனும் ஏற்படமுடியாது என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் " ஊதாரித்தனம் " என்ற வார்த்தையை உபயோகித்தார். அந்த வார்த்தை பார்லிமெண்டரியா ? அந்த வார்த்தை இந்தச் சபையிலே பேசப்படலாமா ?

DEPUTY SPEAKER : The word 'ஊதாரித்தனம்' is parliamentary. It is not unparliamentary.

Sri T. KARIA GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, " ஊதாரித்தனம் " என்ற வார்த்தையை நாங்கள் பேசும்போதும் உபயோகப்படுத்தலாமா ?

DEPUTY SPEAKER : It is not necessary that the honourable member should take my permission. நான் சொல்லி கனம் அங்கத்தினர் பேச வேண்டியதில்லை. நீங்கள் பேசும்போது நான் என்ன சொல்லவேண்டும் என்பதை அப்பொழுது முடிவு செய்துகொள்வேன்.

*Sri M. P. SARATHI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த வரவு செலவுத் திட்டத்தின் மீது என் கருத்தைச் சொல்லப் பிரியப்படுகிறேன். குறிப்பாக, வரவு செலவுத் திட்டம் ஏறக்குறைய உபரியாக இருக்கிறதென்று காட்டிவிட்டு ஆட்சியிலுள்ளவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். எதற்காகச் சந்தோஷப்பட்டார்கள் என்பது எனக்குப் புலப்படவில்லை. சென்ற வருஷம் பட்ஜெட் உரையின்போது, " என் பற்றுக்குறை பட்ஜெட்டைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் " என்று நாங்கள் ஆளும் கட்சியினரைப் பார்த்துக் கேட்டோம். " பற்றுக்குறை பட்ஜெட் என் கொடுக்கிறீர்கள் ? அதிகமான வருமானம் வருமே " என்றும் நாங்கள் சொன்னபோது, " நாங்கள் பற்றுக் குறைவாகத்தான் பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறோம் ; அடுத்த வருஷம் பார்க்கலாம் " என்று அப்பொழுது இவர்கள் சொல்லிவிட்டு, இப்பொழுது அதிகமான வருமானம் வந்தது என்று காரணத்தைக் காட்டி, தெரியாதவர்கள் செய்வதைப்போல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது உபரி பட்ஜெட்டைக் காட்டி சந்தோஷப்படுகிறார்கள்.

முக்கியமாக, இந்த ஆட்சியில் எப்படி நடக்கிறதென்றால், ஏறக்குறைய சுதந்திரம் பெற்ற பன்னிரண்டு ஆண்டுகளில் ஆங்கிலேயர் விட்டுவிட்டுச் செல்லும்போது இதே சர்க்காரில் 700 கோடி ரூபாய் வரையில் மிச்சமாக வைத்துவிட்டுப்போனது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். இப்பொழுது வருகிற வருமானத்தையும் சேர்த்தால் சுமார் 800 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்று சொல்லலாம். அதுவும் இல்லாமல் கடனாக வாங்கியது 100 கோடி ரூபாய்க்குமேல் இருக்கிறது. இப்படியாக சென்ற 12 ஆண்டுகளில் 1,600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்தும் என்ன முன்னேற்றம் கண்டிருக்கிறது என்று நீங்கள் சிந்திக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி 1,600 கோடி ரூபாய் செலவு செய்தும் நாட்டில் உள்ள நிலைமை என்ன ? நாட்டில் என்ன முன்னேற்றம் கண்டிருக்கிறது என்று பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் ஏற்பட்டிருக்கிறது. எந்த விதத்திலும் முன்னேற்றம் கண்டதாகத் தெரியவில்லை. பலன்

[Sri M. P. Sarathi] [3rd March 1959

இல்லாமல், முன்னேற்றம் காணுமல் இருக்கும்போது பணம் எல்லாம் எங்கே போய்விட்டது என்பதுதான் தெரியவில்லை. ஸ்ரீ மூக்கையா தேவர் சொல்லிய மாதிரி பணம் எல்லாம் ஊதாரித்தனமாக செலவு செய்யப் பட்டிருக்கிறது என்றுதான் தெரிய வருகிறது. எங்கேயோ மறைமுக மாக சென்று கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. உண்மையில் பார்க்கப்போனுல் காங்கிரஸ்காரர்கள்தான் இந்தப் பணத்தின் மூலம் பயனடைந்திருக்கிறுர்கள். பொது மக்கள் எந்த விதத்திலும் நன்மை அடைந்ததாகவே தெரியவில்லை. பொது மக்க ளுடைய நன்மைக்காக எந்த விதத்திலும் செலவு செய்யப்படவில்லை என்றுதான் தோன்றுகிறது. இது சம்பந்தமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எந்த விதத்தில் இவர்கள் நடந்து கொள்ளுகிறுர்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல முடியும். நமது முதல் அமைச்சர் அவர்களும், ரெவினியூ அமைச்சர் அவர்களும் வேலூர் வந்தபோது அங்கே இருக்கக் கூடிய சர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஒரு நாடகத்தை நடத்திக் காட்டினுர்கள். அந்த நாடகத்திற்கு "மாமன்னர்கள்" என்ற பெயரைக் கொடுத்து நடித்துக் காட்டினுர்கள். அதில் காங்கிரஸ்காரர்களைக் குறிப்பிட்டு அவர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறுர்கள் என்பதைப்பற்றி நடித்துக் காட்டினுர்கள். அதைப் பார்த்துவிட்டு அமைச்சர்கள் சந்தோஷப்பட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள். காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு கேவலமாக ஒழுங்கற்ற முறையில் நடத்துகொள்ளுகிறுர்கள் அரசாங்கத்தினிடம் எனபதைப் பற்றி அவர்கள் நடித்துக் காட்டினுர்கள். சர்க்கார் உத்யோகஸ்தர்களே நடித்துக் காட்டக்கூடிய அளவிற்கு காங்கிரஸ்காரர்கள் நடந்து கொள்ளு கிறுர்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. இவற்றை கனம் அமைச்சர்கள் உணர்ந்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன்.

இது மட்டுமல்ல, பெரும் பெரும் தொழில்களையெல்லாம் எடுத்து நடத்துகிறேும் என்றும் சொல்லுகிறுர்கள். அப்படிச் சொல்லும்போது நெய்வேலி திட்டத்தையும், மற்றும் பெரிய தொழில்களாகிய . . .

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். காங்கிரஸ்காரர்கள் ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்ளுகிறுர்கள் என்று ஒரு பார்ட்டியைப்பற்றி சட்டசபையில் பேசலாமா ?

DEPUTY SPEAKER : பேசலாம்.

Srimathi P. K. R. LAKSHMIKANTHAM : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் பேசும்போது "கொல்கிறுர்கள், கொல் கிறுர்கள்" என்று குறிப்பிடுகிறுர், அப்படிக் குறிப்பிடலாமா ?

Sri M. P. SARATHI : அம்மையார் அவர்கள் இலக்கணப் பிழையைப் பற்றி சொல்லுகிறுர்கள். சந்தோஷப்படுகிறேன். நான் தெலுங்கு பேசக் கூடியவனுதலால் தமிழ் சரியாக உச்சரிக்க முடியவில்லை. அதனுல் அம் மாதிரியாக வார்த்தைகள் வருகின்றன என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக அவர்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்வதோடல்லாமல் பெரிய தொழில்களைக் குறிப்பிடும்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டத்தைப்பற்றியும், பெரம்பூர் கோச் பாக்டரியைப்பற்றியும் பட்ஜெட் பிரசங் கத்தில் குறிப்பிட்டிருக்கிறுர். இவைகளைக் குறிப்பிட்டுவிட்டு தாங்கள் தான் ஏதோ தொழிலை ஆரம்பித்து நடத்துவதாகவும் சொல்லுகிறுர்கள். இதற்கு முன்பு இவைகளைப்பற்றி கேள்வி கேட்டபோது அவைகளுக்கும், மாகாண சர்க்காருக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லப்பட்டது. ஆனுல் இப்பொழுது அவைகளைப்பற்றி பட்ஜெட் உரையில் குறிப்பிடுகிறுர்கள். அதன் அர்த்தம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. இப்பொழுது மட்டும் அவைகளை தங்களுடைய தொழிலாக சேர்த்திருக்கிறுர்கள். அது மட்டுமல் லாமல் தனியார் துறையில் தொழில்களைப்பற்றி குறிப்பிடும்போது சைக்கிள் பாக்டரி போன்ற திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். இம்

3rd March 1959] [Sri M. P. Sarathi]

மாதிரி பெரிய தொழில்களில் தாங்கள் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இருக்கக்கூடிய நிலவரத்தைப் பார்த்தால் சர்க்காருக்கும், அவைகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றுதான் தோன்றுகிறது.

மற்றும் எவ்வளவோ சிறு சிறு தொழில்களை தாங்கள் எடுத்து நடத்துவதாகவும் சொல்லுகிறார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்கு எவ்வளவோ தாங்கள் செய்துகொண்டு வருவதாகவும் சொல்லுகிறார்கள். அவைகள் எல்லாம் எவ்வளவு தூரம் மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்று பார்த்தால் ஒன்றுமே போய்ச் சேருவதாக இல்லை. ஒவ்வொரு ஊரிலும் போய் அந்தந்த ஜில்லா கலெக்டர்களைப் போய்க் கேட்டால் தெரிய வரும். உண்மையில் பார்க்கப்போனால் மக்களுக்குப் போய் சேருவது 100-க்கு 25 பங்குதான். அங்கு போய் கேட்டால் உண்மையிலேயே இதை ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். கடந்த 12 ஆண்டுகளாக 1,600 கோடி ரூபாய் செலவு செய்திருந்தும் வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டு போவதன் காரணம் என்ன என்பது தெரியவில்லை. நிலவரம் இப்படிப் போய்க் கொண்டிருப்பதற்கு என்ன சொல்லுகிறார்கள் என்பதும் புரியவில்லை. கனம் அமைச்சர் அவர்களும் புள்ளி வாயிலாக வாழ்க்கைச்செலவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று காட்டியிருக்கிறார். இதற்கு என்ன அர்த்தம் எனபதும் புலப்படவில்லை என்பதையும் கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக உரத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். வட ஆற்காட்டில் இந்த உரம் விவசாயிகளுக்கும் கிடைக்கவில்லை. வட ஆற்காடு ஜில்லாவிற்கு உரம் வந்தவுடன் கோயம்பத்தூர் வியாபாரிகள் அங்கு வந்து உட்கார்ந்துகொண்டு மூட்டை ஒன்றுக்கு 20 அல்லது 30 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கி லாரி லாரியாகக் கொண்டு போகிறார்கள். இவற்றை நான் நேரடியாக பார்த்திருக்கிறேன். அப்படிப் பார்த்து அந்த வியாபாரிகளையும் கண்டித்திருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர், போளூர், ஆரணி, ஆற்காடு, காட்பாடி போன்ற இடங்களில் கோயம்பத்தூர் விபாபாரிகள் உட்கார்ந்துகொண்டு அங்கு எப்பொழுது கோட்டா வருகிறதோ அப்பொழுது அவற்றை அப்படியே வாங்கி எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். சாதாரணமாக விவசாயிகளுக்கு, அதாவது ஒரு ஏக்கரா வைத்துக்கொண்டிருக்கக்கூடிய விவசாயிக்கு உரம் வேண்டும் என்றால்கூட கிடைப்பது இல்லை. கேட்டால் விற்றுப்போய் விட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே இதைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் கனம் அமைச்சர் சொல்லுகிறார், குப்பை கூளங்களை வைத்துக்கொண்டு கம்போஸ்ட் உரத்தை தயாரிக்கலாம் என்று. வேலூர் போன்ற முனிசிபாலிட்டிகளில் குப்பைகள் எல்லாம் வேறு விதத்தில் உபயோகப்படுத்தப்படுகிறதே தவிர, உண்மையிலேயே வயலுக்கு உரம் உபயோகப்படுவதாகத் தெரியவில்லை. அவைகளை வீணாக்கி விடுகிறார்கள்.

கதர் அபிவிருத்தியைப்பற்றி ஏதோ எழுதியிருக்கிறார்கள். ஏறக்குறைய பல ஆயிரக்கணக்கான ரூபாயைக் கொடுத்து உதவி செய்வதாகச் சொல்லுகிறார்கள். சாதாரணமாகப் பார்த்தால் நாட்டில் கைத்தறிதான் எங்கும் பரவி இருக்கிறது. கதர் ஒரு ஜில்லாவில்தான் பரவி இருக்கிறது. அதனால் கதர் அபிவிருத்திக்கு என்று சில கோடி ரூபாய்களை ஒதுக்கி செலவு செய்வதைவிட, அதிலும் காங்கிரஸ்காரர்களுடைய பிரசாரத்திற்கு செலவு செய்வதைவிட, கைத்தறிக்கு அவற்றை செலவு செய்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். சென்ற தடவை கதர் அபிவிருத்தி திட்டத்தின் மீது விவாதம் நடந்தபோது கதரும் கைத்தறியில் சேர்ந்ததுதான் என்று சொன்னார்கள். அப்படி இருக்குபோது கதரை விட்டுவிட்டு கைத்தறி உற்பத்திக்கு செலவு செய்யக்கூடாதா என்று கேட்கிறேன். இப்பொழுது கைத்தறி அபிவிருத்தி அடையாமலிருப்பதால் இதற்கு ஏன் அந்தப் பணத்தை செலவு செய்யக்கூடாது ? அப்படிச் செய்தால்தான் எல்லா ஜில்லாக்களுக்கும் உதவி செய்வதற்கு உகந்ததாக இருக்கும் என்பதை கூறிக்கொள்ளுகிறேன்.

[Sri M. P. Sarathi] [3rd March 1959

மேலும் இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டத்தைப் பார்த்தால் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் உபயோகப்படக்கூடிய அளவில் தயாரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. அப்படி இல்லாமல் நாட்டிற்கு என்ன செய்யவேண்டுமோ, மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அந்த அடிப்படையில், அந்த மனப்பான்மையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again to-morrow at 9 a.m.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory orders, rules and notifications.

96. *Notification issued with G.O. No.* 1692, *Local Administration, dated 20th November* 1958, *framing rules for licensing of dogs and destruction of unlicensed dogs by panchayats under section* 112 (2) (xxvii) *of the Madras Village Panchayats Act*, 1950. [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act*, 1950.]

97. *Notification issued with G.O. Ms. No.* 254, *Public (Services-A), dated 2nd February* 1959, *amending the Madras Public Service Commission Regulations*, 1954, *so as to include the temporary post of Research Assistant (Hydrography) within the Commission's purview.* [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

98. *Notification issued with G.O. Ms. No.* 107, *Food and Agriculture, dated 9th January* 1959, *amending rule* 78 *of the Madras Commercial Crops Markets Rules*, 1948. [*Laid on the table of the House under section* 18 (4) (e) *of the Madras Commercial Crops Markets Act*, 1933 (*Madras Act XX of* 1933).]